# TANI-PACURA-TOGAI

## G.U. POPE

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தனிப்பாசுரத் தொகை

முதற்பகுதி

சென்னைக் கிறித்தவக் கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
**வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்,** பி.ஏ.,
இயற்றியது

கோதீர்த்தபுரிச் சர்வகலாசாலைத்
தமிழ்ப் புலவர்
**ஜி.யூ. போப்பையரவர்கள்,** எம்.ஏ., டி.டி.,
செய்த ஆங்கில மொழி பெயர்ப்பும்

அண்ணாமலைச் சர்வகலாசாலைத்
தமிழ்ப் பண்டிதர்
**ந. பலராம ஐயர்**
எழுதிய நூன்முகமும் குறிப்புரையும் கொண்டது

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
**International Institute of Tamil Studies**

# BIBLIOGRAPHICAL DATA



| | |
|---|---|
| Title of the book | : **TANI-P-ACURA TOGAI** |
| **Translator** | : Dr. G.U. **Pope** |
| Publisher & Copyright | : International Institute of Tamil Studies, CIT Campus, Tharamani Post, Chennai - 600 113. |
| Publication No. | : 265 |
| Language | : Tamil and English |
| Date of Publication | : August 1997 |
| Edition | : Reprint |
| Paper used | : 18.6 Tamil Nadu Super Printing |
| Size of the Book | : 1/8 Demy Size Royal Octova |
| Printing types used | : 10pt, 12pt, 18pt. |
| Number of pages | : 120 |
| Number of Copies | : 1000 |
| Price | : Rs. **30/-** |
| Printer | : Udhayam Offset Printers 44, Singanna Street, Chindadripet, Chennai - 600 002 |
| Binding | : Pulp Board |
| Subject | : Translation of Tani-p-acura Togai |

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி
சென்னை - 600 113.

## அணிந்துரை

"சூரிய நாராயண சாத்திரி என்ற
தூய்மை யற்றதன் ஆரியப் பெயரை
ஏர்பெறு தமிழாற் பரிதிமாற் கலைஞன்
என்று மாற்றிய நற்றமிழ் அறிஞன்"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பரிதிமாற் கலைஞரைப் பாராட்டுவர். 'தனித் தமிழ்' என்று தூய தமிழ் நடையை விரும்பிப் போற்றிய பரிதிமாற்கலைஞர் தமிழர் நெஞ்சங்களில் எல்லாம் நின்று நிலைபேறு பெற்றவர். நற்றமிழுக்கு அவர் ஆற்றிய பணிகள் எண்ணில.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் பல்வேறு காரணங்களினால் நலிவு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நாடகத் தமிழின் நிலைகண்டு ஏங்கிய பரிதிமாற் கலைஞர், தமிழுக்கு உரிய **நாடகவியல்** என்ற நாடக இலக்கணத்தையும் **ரூபாவதி, கலாவதி** என்ற நாடக இலக்கியங்களையும் உருவாக்கித் தந்தவர்.

சமசுக்கிருதம் உட்பட்ட பிறமொழித் தாக்குதலால் தமிழ்மொழி துயருற்ற வரலாற்றைத் **தமிழ்மொழி வரலாறு** என்ற நூலில் நடுநிலையோடு எழுதிய இவர்தம் ஆய்வுத்திறன் போற்றுதற்குரியது.

இங்ஙனம், இழந்த பழந்தமிழ் இலக்கியத்தை மீண்டும் படைத்தும் தமிழ்மொழி மேலும் வளர்வதற்குரிய புதிய வழிவகைகளை எடுத்தோதியவர் பரிதிமாற்கலைஞர் என்றால் மிகையாகாது.

பரிதிமாற்கலைஞர் தமிழ் நாடக இலக்கணம் நூல் உருவாக்குப வராகவும் படைப்பாளராகவும், மொழி நூல் வல்லாராகவும் விளங்கிய தோடு சிறந்த கவிஞராகவும் விளங்கினார் என்பதற்கு அவர் இயற்றிய **தனிப்பாசுரத்தொகை** ஒரு சிறந்த சான்றாகும்.

கடவுள் முதல் எறும்பு வரை நாற்பத்துமூன்று தலைப்புகளில் பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாசுரத்தொகையாகும். ஆங்கில மொழியில் எழுதப்பட்ட பாடல்களுள் ஒருவகைப் பாடலுக்குச் சானெட் **(Sonnet)** என்று பெயர். இவ்வகை அமைப்புடைய பாடல்களைப் புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர்கள் கையாண்டுள்ளனர். இவை ஒரு பொருளைப்பற்றி எழுதப்பட்ட பாடல், பதினான்கு அடி அமையப் பெற்றதாகவும் பாட்டின் இறுதிச்சீர் எதுகை நயம்உடைத்தாகவும் பாடலின் முதல், இடை, கடை என்ற மூன்று நிலையிலும் பாடு பொருளின் தோற்றம், வளர்ச்சி, முடிவு என்று மூன்று நிலை கொண்ட தாகவும் விளங்கும். ஆங்கிலக் கவிஞர்கள் எழுதிய இந்தச் **சானெட்** வகையைப்போன்று தமிழிலும் பாடல்கள் புனைய வேண்டும் என்றும் யாப்பில் புதிய சோதனை முயற்சிகள் தொடரவேண்டும் என்றும்

பரிதிமாற் கலைஞர் விரும்பினார். அவருடைய விழைவின் வெளிப் பாடே தனிப்பாசுரத்தொகை. பரிதிமாற் கலைஞர் அவர்கள் ஆங்கில மொழியில் உருவான இந்தச் **சானெட் (Sonnet)** வகையை எடுத்தாளு கின்றபோது அடியிறுதி எதுகையைத் தவிர்த்து, அகவற் பாவில் இன்னோசை தரவல்ல அடி முதலெதுகையை வைத்துப் பாடல்களைப் புனைந்துள்ளார். எனவே (Sonnet) என்ற ஆங்கில மொழியில் அமைந்த பாவடிவை அப்படியே நகல் செய்யாமல் தமிழ் மொழிக்கு ஏற்றவாறு மாற்றம் செய்து இப்பாடல்களை இயற்றியுள்ளார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்க செய்தி.

மேற்சொன்னபடி நாற்பத்திமூன்று தலைப்புகளில் அமைந்த இத் தனிப்பாசுரத்தொகையை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர் தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரப்பிய டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் ஆவார். இவரை மொழி பெயர்ப்புத் துறைக்கு வழிகோலியவர் எனத் தமிழ் அறிஞர் பெருமக்கள் பாராட்டுவர். திருக்குறளை எத்தனையோ அறிஞர் மொழி பெயர்க்க முனைந்தும் முழுமையும் செய்ய இயலாது இடையிலே முறிந்துபட, இவர்தான் அதனை முழுவதும் மொழி பெயர்த்து முடித்தவர். மணிமேகலை, நாலடியார், திருவாசகம், சிவஞானபோதம் போன்ற நூல்களையும் புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களில் ஒரு சில பகுதிகளையும் மொழி பெயர்த்தவர். இத்தனைச் சிறப்புகள் பெற்ற ஜி.யு. போப் இந்நூலையும் மொழி பெயர்த்துள்ளமையைக் கருதும் போது தனிப்பாசுரத்தொகையின் சிறப்புச் சொல்லித் தெரியவேண்டியதன்று.

இந்நூலின் நூன்முகப் பகுதியில் ந.பலராமையர் எழுதியுள்ள கருத்துக்கள் ஆய்ந்து சிந்திப்பதற்குரியன. தலைப்புகளிடையே காணப்படும் வைப்புமுறை பற்றியும், இவர் இந்நூலுக்கு வரைந்துள்ள குறிப்புரையும் படிப்போர் நெஞ்சத்தை ஈர்க்கும் எனலாம்.

1901 இல் வெளிவந்த தனிப்பாசுரத்தொகையை வெளியிடுவதில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் பெருமையடைகிறது. இவ்வரிய நூலை நிறுவனத்திற்குத் தந்து உதவியவர் மொழி பெயர்ப்புத்துறையில் சிறந்து விளங்கும் அறிஞர் பெருந்தகை, பெரியவர் தஞ்சை டி.என். இராமச்சந்திரன் அவர்கள் ஆவார். அவருக்கு நிறுவனத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறுவனப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற தமிழ் ஆட்சி மொழிப்பண்பாட்டுத்துறை மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு மு.தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு என் மனங்கனிந்த நன்றி.

நிறுவன வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. வை.பழனிச்சாமி, இ.ஆ.ப. அவர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைக்குறித்த காலத்துக்குள் வனப்புற அச்சிட்டுத் தந்த அச்சகத்தார்க்கு நன்றி.

இயக்குநர்

**Published with the Financial Assitance given by the Directorate of Tamil Development- Govt of Tamil Nadu under the scheme of "Grants for Good Translation works"**

# PREFACE TO THE THIRD EDITION

This third edition of the sonnets of V.G. Suryanarayana Sastrigal includes two, hitherto unpublished. An English rendering of these has been supplied by Mr.T.B. Krishnaswami, M.A.,B.L., District Educational Officer, Salem, an old pupil of the author. All the Sonnets have been annotated by M.R.Ry. N. Balaram Ayyar, Avl., of the Annamalai University. This edition becomes thus a final and definitive one, with a complete apparatus of notes and translation.

Madura,

22.10.'33 **V.S. SWAMINATHAN**

# சிறப்புப்பாயிரம்

காலஞ்சென்ற ராவ் பஹதூர்
**சி.வை. தாமோதரம்பிள்ளை யவர்கள்,** பி.ஏ., பி.எல்.,
சொல்லிய
**அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்**

பரிதிமாற் கலைஞனெனும் புனைவுபெயர் தானிறுவிப்
பாரார் பார்த்துக்
கருதுமா றுள்ளபடி யறிதரல்வேட் டிசைநலஞ்சால்
கலைவ லாளன்
சுருதிவலார் குலக்கோ மான்சூரியநா ராயணப்பேர்த்
தோன்ற லெந்தங்
குருதிவேற் குமரனடி மறவாத கொள்கையினான்
குணக்குன் றன்னான்;
இனிப்பாரி லிதுபோலப் பொருளியல்சொன் னூலிலதென்
றியம்பக் கற்றோர்
கனிப்பாக மாமென்று கல்லாத மாந்தர்களுங்
கழறும் வண்ண
மினிப்பாரு மாசிரியப் பாவினிற்கட் டுரைச்சுவைநன்
கியைய நீதித்
தனிப்பாசு ரத்தொகைச்செந் தமிழ்நூலை யியற்றியதைத்
தானச் சேற்றி;
சொல்லினிய செழுந்தமிழ்ச்செந் நாவலர்கண் மகிழ்சிறந்து
தூயதா யோங்கு
மெல்லியமெய்ந் நறுங்கலவை யெனப்பெரிதும் புகழ்ந்துநனி
மேற்கொண் டாடப்
பல்லவகை மலர்பொதுளும் பைம்பொழிலென் றிளைஞரென்றும்
பரிந்து நாட
நல்லெழிற்பா மயிலரங்க மாநினைத்து நாளுமுற
நல்கி னானே.

# முகவுரை

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." -திருக்குறள்

தேருந்தோறும் இன்னலம் பயக்கும் நம் தமிழ்மொழி முற்காலத்துப் பாண்டியரானும் பிற்காலத்துச் சிற்றரசரானும் குறுநில மன்னரானும் மடாதிபதிகளானும் ஆதரிக்கப்பட்டுத் தலைநிமிர்ந்து நின்றது. அக்காலத்து ஆசிரியர் பலரானுஞ் செய்யப்பட்ட நூல்கள் பலதிறத்தனவாமாறு யாவரும் அறிவர். அத்தகைய நூல்களன்றே இக்காலத்து நம்போலி யர்க்கு இன்பம் பயப்பனவாம். இது நிற்க, இத்துணைச் சிறப்பு வாய்ந்து நிற்குந் தமிழணங்கு இக்காலத்து அச்சு வாகன மேறிப் பழைய நூல்களினும் புதிய நூல்களினும் வர்த்தமான பத்திரிகைகளினும் வெளிப்பட்டுக் கற்றாருங் கல்லாருந் தன்னைக்கண்டு களிகூருமாறு உலவா நின்றாள். இதுகாறும் புலவர் வீடுகளிற் பனையோலைச் சுவடிகளிற் பதுங்கிக் கிடந்த தமிழ் நூல்கள் பலவிதத்தாலும் வெளிப்பட்டியலுவதைக் கண்ணுறு மெவரும் தமிழ்மொழி எக்காலத்தினும் அழிவடையாது நிவந்துநிற்கும் என்று கருதுதற்கு ஐயப்பாடில்லை. இவ்வாறாகவுஞ் சிலர் ஆங்கிலமொழி தற்காலத்து மேன்மேலுந் தழைத்தோங்கிப் படர்ந்து நந்தமிழ் மொழி யிருந்த இடமுந் தெரியாதவாறு மறைத்து விடுமோ என ஐயுறுவாராயினார். அன்னார் நம் தமிழ்மாது ஆங்கில நூல் நலன்களையும் பொலிவுகளையும் மேற்கொண்டு காலத்துக்கேற்ற கோலம் புனைந்து இந்நாட்டின்கண் இனிய நடம் புரிந்து ஏக்கழுத்தத்தோடும் உலவி விளையாடுகின்றா ளென்பதனை யுணர்வாராக.

இவ்வாறு விளங்கும் நம் தமிழ்மொழியிலே நடை பெறும் நூல்களெல்லாம் ஒருமுறை பற்றி மூன்று பிரிவின

வாம். அவை தாம் சங்கமருவிய நூல்களெனப் புலவர்களான் மதிக்கப்படும் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு முதலி யனவும், இடையிற் றோன்றி இதிகாச புராண கதைகளை மிகவுந் தழுவி உயர்வு நவிற்சி யாதிய அணிகளையே தமக்கு அங்கமாகப் பெற்று நடைபெறுவனவும், இக்காலத்திலே சங்கநூற் கடலிற் றிளைத்துப் பிரகிருதி தத்துவ வுணர்ச்சியிலே விருப்பமுற்றுத் தம்மை யூக்குதற்கு ஆங்கில நூற்றுணையுங் கொண்டு செய்யப்படுவனவுமாம். இம்மூன்றனுள் இறுதியில் நின்றனவே மிக்க உறுதி பயத்தற்பாலவென்று வேண்டப்படுகின்றமையின் இக்காலத்துப் புலவர் பலரா னுஞ் செய்யப்படும் நெறியினவாம். இப்பகுப்பிற் படுஞ் செய்யுட்களை உலகந் தழீஇக்கோடல் இயல்பே! மற்று ஆன்ற வொழுக்கமும் அதுதானே.

இத் தனிப்பாசுரத்தொகை அன்ன வொழுக்கத்தினையே மேற்கொண்டுளது. ஆங்கிலநூற் பயிற்சியுடைய தமிழ் மக்கள் தமிழ்மொழியைப் பெரிதும் கவனித்தலின்றிக் கைசோர விடுகின்றனரெனப் பலருங்கூறும் வசைமொழி எம் செவிப்படலும் மனம்பொறேம், புதுமை வழியால் ஏதேனும் செய்யவேண்டுமென்று புகுந்தேம். அங்ஙனம் புக்குழி யாம் அவ்வக்காலங்களிற் சிற்சில விடயங்களைப்பற்றிக் கொண்ட கருத்துக்களைச் செய்யுளுருவமாய்ச் செய்து வெளியிடலா மென்று உன்னினோம். அவ்வாறே அவ்வக்காலத்துச் செய்த பாசுரங்களை **ஞானபோதினி** யென்னுமொரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையின் வாயிலாய்ச் சிறிது சிறதாக வெளிப்படுத்தினேம் இதுகண்ட சில தமிழபிமானிகளும் எமது நண்பரும் அவையனைத்தையும் ஓராற்றாற்றொ குத்துத் தனியே ஒரு நூலாக வெளியிட வேண்டுமென்று வேண்டினர். அன்னார் வேண்டுகோட்கிணங்கி வெளியிடப் புகுந்த யாம் இப்பாசுரங்களிற் சில புதுக்கருத்துக்கள் காட்டியிருக்கின்றமைபற்றி அஞ்சுவேம், எமது மெய்ப் பெயரின் வெளியிடாது பரிதிமாற் கலைஞன் என்னும்

புனைவுப் பெயரின் வெளியிடுவேமாயினேம். அன்றியும் நன்னூலொன்று செய்தானது புகழின்மையான் இகழப்பட் டொழிதலும் புன்னூலொன்று செய்தானது உயர்ச்சியாற் சாலவும் புகழப்பட்டிலங்கலும் நாடொறுங் காண்டலின் இந்நூலைப் பற்றிய தமிழ் மக்களின் உண்மை மதிப்பு இனைத்து என்றுணரவேண்டியும் அவ்வாறு செய்ய விரும்பனேம். அன்னணம் வெளிப்படுத்திய நூல் கண்டு பலரும் உவந்து வியந்து பேசக்கேட்ட யாம் உள்ளக் கிளர்ச்சியுற்று நூலிற்கு மறுபதிப்பொன்று வெளியிடலாமென் றெண்ணினேம்.

இவ்வாறெண்ணிக் கொண்டிருப்புழி ஆங்கில நாட்டிற் கோதீர்த்தபுரிச் சர்வகலாசாலையில் தமிழப்புலமை நடாத்தும் கனம் பொருந்திய ஜி.யூ. போப்பையர் அவர்கள் இதனைப் பற்றி வியந்துபேசி இந்நூற் பாசுரங்க ளனைத்தையும் ஓராற்றான் ஆங்கில பாஷையில் மொழி பெயர்த்து அனுப்பினார்கள். அவர்தங் கருணைத்திறத்திற்கு யாஞ் செய்யக்கடவ மைம்மாறென்னே! இஃதுணர்ந்த நண்பர் யாவரும் இந்நூலை அவ்வாங்கில மொழிபெயர்ப்புடனுஞ் சேர்த்து அச்சிடுதல் வேண்டுமென்றனர். அவ்வாறே அச்சிடப் புகுந்த யாம் இதன் கணுள்ள பாசுரங் களனைத்தையும் ஒழுங்குபடுத்தி முறைப்பட வைத்தனம். அங்ஙனம் வைப்புழிப் பின்னர்த் தோன்றிய கருத்துக்களுக்கேற்பச் சிற்சில விடங்களில் மாற்றியும் மொழிபெயர்ப் பாசிரியர் கூற்றுக்கிணங்கச் சிலவற்றை யிணைத்து மிருக்கின்றோம். இவையே முதற் பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்குமுள்ள வேறுபாடு.

மற்று, இதன் பாசுரங்க ளனைத்தும் தனித்தனி பதினாலடி யளவினவாய்ப் பலவேறுவகைய பொருள் பொதிந்தனவாம். இன்ன செய்யுட்கள் இன்னுஞ் செய்தற் கிடனுண்டெனக் கோடலிற் சிறியேம் இதனை முதல் வரிசையென வெளியிடுகின்றேம். இதுகாறும் புலவர்குழாம்

பயின்று வரும் இடைநிலை யிலக்கியங்களொடு மறுதலைப்பட்ட இயல்புகளுடையதென இந்நூல் சிற்சில விடங்களிற் புலப்படினும் நூற்கருத்து உணருமுன்னர் இதனை அன்னதென்று இகழற்க. நூலினை முற்றுமுணர்ந்த பின்னரும் இந்நூல் புரையுடைத்து இந்நூல் தக்கின்று எனவாளா கூறலிற் பெரும் பயனின்றாம். இவ்விக் காரணங்களான் இஃது அப்பெற்றித்தெனச் சிறியேமைத் தெருட்டாவழி.

இனி இந்நூலின்கண் ஆங்காங்குக் காணப்படும் குற்றங் குறைகளை எமக்கெடுத்துக் காட்டி மிகையெனத் தாங்கொள்வனவற்றிற்கு எம்மீது பொறை பாராட்டுமாறு செந்தமிழுலகிற் செம்மை சான்ற பெரியோரை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகின்றேம்.

சங்கநூ லென்னும் பொங்குதே மலரிற்
'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!'

*1.8.1901* — ***வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி***
சென்னை.

# PREFACE TO THE ENGLISH ECHOES

It may not be out of place for the author of the English portion of this little work to say a few words of introduction to the sonnets. The little Tamil volume reached the present writer in Oxford on its first publication, and when he then received it, he pointed out, what seemed to him to be the case, that, although each single line possessed distinct poetic merit, and the whole collection gave clear indication of a new departure in Tamil poetry, these short poems could hardly with propriety be called sonnets. They are in fact for the most part of the class of composition called in Tamil Kanji *(காஞ்சி)*. The peculiarity of the Tamil initial rhyme deprives them of the characteristic which has given its name to the Indian sonnetto. Moreover, the unity of subject of idea, and the culmination or point in the conclusion, are mostly wanting. The absence of final rhyme is, however, the greatest difficulty, and cannot, at least at present, it would seem, be overcome.

The forty-one short Tamil poems here reprinted are generally very musical, and have considerable artistic finish, while the sentiment is interesting, and forcibly expressed. The English echoes are not, strictly speaking, translations, but rather adaptations, though some of them follow very closely the Tamil Text. A few are the originals, on which the Tamil is founded. The aim on the part of the English co-worker has been to bring about, as far as was possible, an amalgamation of English and Tamil ideas. Except in a few cases, which are noted, they are not translations of any existing English poems. The present writer feels a great interest in this vigorous attempt made by the able Tamil poet (who is already known by his remarkable Dramatic compositions) to initiate a new departure in Tamil poetry.

Doubtless, there are many of our worthy and learned friends who will say, that novelties are quite inadmissible

in Tamil literature, since the great Tamil Grammars have long ago stereotyped the laws of composition, and defined for all time the subjects, methods and style of Tamil literature! But, when we come to reflect upon the matter, and consider it in the light of universal history, and the laws of human development, and especially in connection with the necessary spread and powerful influence of English literature, - it does seem that even the Tamil Sarasvati, fast tied and bound though she be, may yet add something new, and distinctive of the present era, to the invaluable treasures she already possesses. We have no fear of being suspected of undervaluing or desiring to supersede anything in the immense mass of what may be called the Tamil Classics. It may be permitted even to say that we have done our best, by the publication, in Oxford, of critical editions with translations, of the Nannul, Kurral, Naladiyar and Tiruvacagam, to introduce these classics into the sphere of the world's literature. There is no nook or corner of the Tamil poetical field where we have not striven, with more or less success, to plant our feet. It is no affectation to say that we **love** the Tamil language, the Tamil poetry and the Tamil people.

It is for this very reason that, comparing the effect of the English literature, and especially of English poetry upon people of every class and of every age, we do venture to think that Tamil fails very greatly, and unnecessarily, in its most ligitimate and sacred function. It is adored by a very select few: has it entered, is it entering, can it enter. into the minds, hearts, and lives of the great mass of the men, women, and children of the Tamil lands? Many reasons may be assigned for this comparative failure, - if the fact of failure be conceded. Among these we venture. very humbly as foreigners, to express our opinion that Tamil verse, with all its incomparable ingenuity and elegance, generally fails in simplicity, intelligibility and adaptation to the wants of the popular mind. The difficulties of Tamil Poetry have been exaggerated by the all but universal custom of adding commentaries, or literal explanations (too often quite necessary) to each stanza. It has

come to be a matter of course that the verse is hardly, if at all, intelligible without its traditional interpretation. Consider in this light the really magnificent Nithi-nerri0vilakam (நீதிநெறி விளக்கம்) the latest great product of the Tamil Muse! There are many verses, (somewhat looked down upon, we imagine), which show what Tamil could do, if she aroused herself and came down to speak to the masses. Latin literature had to descend from Lucretius and Virgil and Horace, to Apuleius, and the unknown author of the Pervigilium Veneris, and to the great Christian poets of the middle ages, and to the Troubadours; before Dante, - who is really a Latin poet, and has revolutionized the European world, - was possible. Whether simplicity of diction, limitation of Sandhi, separation of words; a free system of rhythm, and a general adaptation of thought, are possible to the Tamil poets of the future, is not for us to say. Take the following very simple English lines:

*"I have found out a gift for my fair,*
*I have found where the wood-pigeons breed;*
*But let me rather forbear*
*For she'll say twas a barbarous, deed;*
*For he ne'er could be true, she averr'd,*
*Who would rob a poor bird of its young;*
*And I lov'd her the more when I heard,*
*Such tenderness fall from her tongue."*

These lines are not high poetry, of course; but we should like to see Tamil verse with the same ring and general effectiveness.

But it is time to stop. The writer asks indulgence for his versions. He never imagined himself a poet. The Tamil verses cannot fail to be admired, while both they and the echoes hope for a kindly and considerate criticism.

**INDIAN INSTITUTE, OXFORD,** G.U. POPE
11th July, 1901.

# நூன் முகம்

ஆசிரியர் 'பரிதிமாற் கலைஞன்' என்னும் புனைவுப் பெயர் கொண்டு வெளியிட்ட தனிப் பாசுரங்களைத் தொகுத்துத் தனிநூலாக அச்சிட்டபோது தனிப்பாசுரத் தொகையென இதற்குப் பெயரிட்டனர். ஆங்கிலத்தில், ஒரோ வொரு விஷயத்தைப் பற்றிப் பதினான்கடி பெற்றதாய்ச் செய்யுளடிகளினீற்றில் ஒருமுறை பற்றிய எதுகை நயம் பொருந்தியதாய்ச் செய்யுளின் முதலிடைகடையென்னும் முப்பகுதிகளினும் முறையே எடுத்துக்கொண்ட விஷயத்தின் தோற்றுவாய், வளர்ச்சி, முடிவுபேறென்னும் மூன்றும் விளங்குவதாய் வரையப்படும் ஒருவகைக் கவிக்கு "Sonnet' என்பது பெயர். இஃது இத்தாலிய (Italy) நாட்டுக் கவிஞர் பாடும் "Sonnetto' என்னும் பாடலைப் பின்பற்றி ஆங்கிலேயப் புலவர் முதலியோர் எழுதியது என்று கூறுப. ஆங்கிலப் பெரும்புலவர்களாகிய ஸ்பென்ஸர்', 'மில்டன்' 'ஷேக்ஸ்பியர்' ஆகிய கவிஞர்கள் இத்தகைய தனிச் செய்யுட்கள் பல வரைந்துள்ளனர். அத்தகைய கவி எழுதும் வழியினைத் தமிழிலும் புகுத்தக் கருதிய ஆசிரியர், ஒரோ வோர் பொருளைப் பற்றி அவ்வப்பொழுது தமக்குத் தோன்றுங் கருத்துக்களை யமைத்துப் பதினான்கடி கொண்ட நேரிசை யாசிரியப் பாக்கள் வரைந்து அவையிற்றிற்குத் 'தனிப்பாசுரம்' எனப் பெயருங் கூறினர். அங்ஙனம் எழுதுகையில், மேனாட்டார் 'ஸாநெட்' (Sonnet) டிற்கு முக்கிய அங்கவிலக்கணமாகக் கொண்ட அடியிறுதி யெதுகை, தமிழிலும் அமையக் கூடியதாயினும், அடிமுதலெதுகை போல அகவற்கு இன்னோசை பயவாம லொழிவதே யன்றிப் பொருட்டெளிவினையும் ஒருவாறு சிதைத்தலை நன் குணர்ந்து அதனை யறவே விடுத்துத் தலைசிறந்த தமிழ்நடை முறையினைத் தழுவியே அடிமுதலெதுகை யமைத்துப் போந்தனர். ஈதிங்ஙனமாகவும், ஒருசிலர் தமிழில் அடியிறுதி யெதுகை யமைத்தலியலாத தொன்றோ வெனக் கருதுவா யினர். அன்னோர், வில்லிபாரதம், பதினாறாம் போர்ச் சருக்கத்தில்,

''இற்றகை கால்செறி களமுழு துங்கழு கிட்டன காவணமே
யுற்றது கொள்ளல கைக்குலம் வெங்கள முரைபெரு காவணமே
வெற்றுடன் மன்னர் சரிந்த குடைக்கண் விரிந்தன சாமரமே
கொற்ற மிகும்பறை யோசை யழிந்து குலைந்தன சாமரமே''

என்ற கவிமுதல் வரும் பல செய்யுட்களையும் நோக்கின் அஃதங்ஙன மின்மை யறிவார். மேலும், ஆசிரியர், மேனாட்டாராதியோர்தம் வழிகளைப் புதியன புகுதலாகத் தமிழற் புகுத்து மிடத்தும் அவை தமிழிலக்கண முறையொடு முரணுதலுற்றுச் செய்யுணலஞ் சிதைப்புழி அவற்றை யொரீஇ ஏற்பன கோடல் விதியொன்றனையே மேற் கொள்ளுமியல்பினராவர். ஆதலின், அடியிறுதி யெதுகை யின்மையாற் படும் இழுக்கு ஒன்றுமின்றென்பது புலனாகும்.

இதனைப் படிக்குநர், ஆசிரியர் தாமெடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிய பல்வகைக் கருத்துக்களைச் சில்வகையெழுத்திற் செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கிச் 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொற்'' களான் இழுமெனுமோசை நயம்படப் புனைந்து செல்லும் பேரழகு கண்டு மகிழ்வரென்ப தொருதலை.

இந்நூலைப் பற்றிய பல விடயங்களையும், ஆங்கில நாட்டுக் கோதீர்த்தபுரி (Oxford) ச் சர்வ கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியராயிருந்த மிஸ்டர் ஜி.யூ. போப் துரையவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய பாயிரத்தினும் ஆசிரியர் தமது நூற்கெழுதிய முகவுரையினும் பரக்கக் காணலாம்.

இனி, ஆசிரியர் வெவ்வெறமயங்களில் அவ்வப் பொழுது தாம் புனைய எடுத்துக்கொண்ட ஒன்றற்கொன் றியைபில்லாத் தனித்தனி விஷயங்களைத் தமது நூலின் இரண்டாம் பதிப்பிற் சீர்பெற ஓராற்றான் ஒழுங்குபடுத்தி வைத்த கோப்புமுறை மிகவும் பாராட்டற்பாலது.

நூலின் முதலிற் கடவுள் வாழ்த்துக் கூறல் இன்றிய மையா மரபாதலானும் எப்பொருட்கும் முதற்காரணன் அவனாதலானும் கடவுளைப் பற்றிய தனிப் பாசுரத்தை முதற்கண் வைத்து, ஸச்சிதானந்தஸ்வரூபியாம் அக்கட வுளின் முக்கிய குணங்களாகிய அறிவு, வாய்மை, அன்பு

என்னும் இவற்றை முறையே பின் வைத்தனர். அன்பினாற் காதல் உண்டாவதானும், காதலை இசை வளர்ப்பதானும் அவை பின்றொடர்ந்து நின்றன. ''எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான், மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்-மொழித்திறத்தின், முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடு பெறும்,'' என்பது உண்மை மொழியாதலான், இறைவனை யடைதற்குக் கல்வி இன்றியமையாப் பொருளாய் வேண்டப்படுதலின் பின்னர்க் கல்வியினை அமைத்தனர். கல்வி நூலானும் நூல் குருவானும் பெறப்படுதலின் அவை பின் நின்றன. கல்வி பயில்வோன் மாணவனாதலானும், கற்றவை நிற்றற்கிடன் மனன் ஆதலானும், மனத்தின் நலம் உடனலத்தாற் செழிப்புறு மாதலானும் அவை பின்னர் முறையே நிறுவப்பட்டன. இங்ஙனங் கல்வி நலன் அமைந்த மனிதனையும் அவனுக்கு இன்றியமையாத் துணையாம் மாதரையும், அவர்க்குரிய பண்பாகிய அழகினையும், அன்னோர்தம் ஒழுகலாறாகிய வரைவினையும், வரைந்தபின் அவர் கணவனும் மனைவியு மாகி நின்று மனைவியின் கற்பு மேம்பாட்டான் இல்லறஞ் சிறக்க வாழ்வார் ஆதலின், கணவன், மனைவி, கற்பு, இல்லறமாகிய இவற்றையும் நிரல்பட வைத்த முறைசாலப் பொருந்துவ தொன்றாம். இல்லற நடாத்துமவன் தொழில் மேற்கொண்டு பொருளீட்டாவிடின் இல்லற நடைபெறாமை யின் அச்சிறப்புப் பற்றித் தொழில் பின்னர் நிறுவப்பட்டது. பிறகு, தொழில்களுள் தலைசிறந்த உழவினுக்கு முதற் கருவியாம் நிலனும், நிலம் பிறத்தற்கு முன்னர்த் தோன்றி அதனைச் சூழ்ந்த கடலும், இவையிற்றை விளக்கும் ஒளிகளாகிய பரிதி, மதி, விண்மீன்களும் அமைவனவாயின. இவற்றின்பின் நிலத்திற் றோற்றப்பொலிவொடு விளங்கும் மலையும், மலையினின்றிழியும் யாறும், நிலனை மண்டலித்துச் சூழ்ந்துள்ள வளியும், யாற்றுநீர் வளமுறுதற் காம் முகிலும், நின்றன. இவையிற்றின் பின்னர்க் காலப் பகுதிகளாகிய காலையும் இரவும், இரவின்கண் வேண்டற் பாலதாய துயிலும் முறையே அமைக்கப் பெற்றன. மனிதன் இயற்கை நலங் கண்டின்புறுதற்குச் சான்றாகத் தோன்றும் பொழிலும், பொழிலிலுள்ள மலரும், அங்கு வாழும் புள்ளும் முறைபட அமைந்தனவாம். இவையிற்றின் பின்னர்

மனிதனக்குள முக்குற்றங்களாம் காமம், வெகுளி, மயக்கங்களை வைத்தனர். காமத்திற்குக் கருவியாபவர் கணிகையராதலின் காமத்தைச் சார வரைவின் மகளிரை வைத்தனர். இம்முக்குற்றங்களையு நீங்கியானே பிறவி நோய் நீங்கி வீடடைவன் என்பதனைக்,

''காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்'', ***(திருக்குறள்-360)***

என்ற அருமைத் திருக்குறளாற் கூறிய தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரை யவற்றின்பின் வைத்தனர். 'போர்', 'எறும்பு' என்பவை ஆசிரியர் இரண்டாம் பதிப்பு வெளியிட்ட பின்னர் எழுதப்பட்டவையாதலின், அம்முறை பற்றி இப்பொழுது என்னால் ஒரு முறையுமின்றிப் பின் சேர்க்கப் பெற்றன. யான் ஏதோ என் மனக்குத் தோன்றியவாறு வைப்புமுறையொழுங்கை யோராங்கு விளக்கியதுபற்றிக் கல்விநலஞ் சான்ற பெரியோர் என்னை யெள்ளி நகையாடாதுவிட வணங்கி வேண்டுகின்றனன்.

ஆசிரியரியற்றிய செய்யுணூல்களுட் சிலவற்றிற்கு முன்னரே என் சிற்றறிவிற் கெட்டியவாறு குறிப்புரை யெழுதப் புகுந்தேனாதலின், இந்நூற்கும் எனக்குப் புலப்பட்டாங்குக் குறிப்புரை பொறித்துளேன். பிழையுள வேற் பெரியார் பொறுத்தருள்க.

ஆசிரியர்தம் நூல்கள் பலவற்றையும் ஒருசேரத் தொகுத்தும் தனித்தனியாயும் இன்றியமையாக் குறிப்புரை யோடு அச்சிட்டுத் தமிழுலகிற்கு அளிக்கக் கருதிய அன்னார் தம் குமாரராகிய சிரஞ்சீவி வி. சூ. சுவாமிநாதன் அவர்கள் எடுத்துக்கொண்ட நன்முயற்சி இடையீடின்றி இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

அண்ணாமலைநகர் — இங்ஙனம்
10.10.1933 — **ந. பலராம ஐயர்**

# *INTRODUCTORY NOTE ON TWO TAMIL SONNETS

A time comes in the history of a language when there are set before it the ways of life and death. If it cannot burst the bands which enfold it it dies; if it can find freedom of movement and expression it lives. It is generally agreed that as a literary language Tamil is now at this critical stage. The danger to its life is increased by the presence side by side with it of that mighty rival, English. But apart from that competition, literary Tamil in itself has the seeds of a disease which many prove mortal unless it is checked. Pedantry, conventionalism. artificiality and imitativeness are among these seeds of decay. The remedy is a return to natural simplicity.

"Many can speak Tamil with power and grace, who when they take pen in hand are the slaves of arbitrary standards of composition." Happily there are some in whom nature and true literary instinct and inspiration have begun to work, forcing them to seek deliverence from narrowing and cramping canons of art and to express themselves in mdoern forms, in natural tones, in language "understanded of the people." This movement this magazine desires to further. Whatever may be the future of Tamil, at present at any rate it has everything to gain from attempts to create a simpler and more living literature. These whom this movement has caught are but pioneers and may be less free and natural than those who will come after them, but their efforts deserve welcome and encourage-

---

*Repinted from the Christian College Magzine.

ment. We shall endeavour month by month in some way or other to help forward the creation of more simple and natural composition in Tamil or some other Vernacular.

This month we have pleasure in presenting two sonnets by a writer who has drawn from Dr. Pope praise which marks him off from all other living Tamil writers. In the preface to his great edition of the Tiruvacagam, just published, Dr. Pope says:

"I am afraid I cannot recall more than two recent works which seen to me to give promise of a veritable re-descent in modern attire of the Tamil Sarasvati.

The distinguished author of Manonmaniyam P. Sundaram Pillai, has - too early for us - passed into the unseen.

The little anoymous volume - a first instalment - entitled "Tani-pacura-togai" seems to herald the advent of a new school to be heartily welcomed."

In a foot-note, added later, Dr. Pope says:

"The author's name is now given. The verse are by V.G. Suryanarayana Sastriar, B.A., Head Tamil Pandit of the Madras Christian College." - Editor.

Madras, **F.W. KELLET,**
1901. Editor, Madras Christian College Magaine.

# பொருளடக்கம்


| தலைப்பெயர் | பக்கம் |
|---|---|
| க. கடவுள் | 26 |
| உ. அறிவு | 28 |
| ங. வாய்மை | 30 |
| ச. அன்பு | 32 |
| ரு. காதல் | 34 |
| சா. இசை | 36 |
| எ. கல்வி | 38 |
| அ. நூல் | 40 |
| கூ. குரு | 44 |
| க0. மாணவன் | 46 |
| கக. மனன் | 48 |
| கஉ. உடல் | 50 |
| கங. மனிதன் | 52 |
| கச. மாதர் | 54 |
| கரு. அழகு | 56 |
| கசா. வரைவு | 58 |
| கஎ. கணவன் | 60 |
| கஅ. மனைவி | 62 |
| ககூ. கற்பு | 64 |
| உ0. இல்லறம் | 66 |
| உக. தொழில் | 68 |
| உஉ. நிலன் | 70 |

பொருளடக்கம்

| | |
|---|---|
| உங. கடல் | 72 |
| உச. பரிதி | 74 |
| உரு. மதி | 76 |
| உசா. விண்மீன் | 78 |
| உஎ. மலை | 80 |
| உஅ. யாறு | 82 |
| உகூ. வளி | 84 |
| ங0. முகில் | 86 |
| ஙக. காலை | 88 |
| ஙஉ. இரவு | 90 |
| ஙங. துயில் | 92 |
| ஙச. பொழில் | 94 |
| ஙரு. மலர் | 96 |
| ஙசு. புள் | 98 |
| ஙஎ. காமம் | 100 |
| ஙஅ. வரைவின் மகளிர் | 102 |
| ஙகூ. வெகுளி | 104 |
| ச0. மயக்கம் | 106 |
| சக. திருவள்ளுவர் | 108 |
| சஉ. போர் | 110 |
| சங. எறும்பு | 112 |

# CONTENTS


| | | PAGE |
|---|---|---|
| I. | God | 27 |
| II. | Wisdom | 29 |
| III. | Truth | 31 |
| IV. | Divine Love ("Charity") | 33 |
| V. | Kindly Affection | 35 |
| VI. | Harmony | 36 |
| VII. | Learning | 39 |
| VIII. | Books | 41 |
| IX. | The Master | 45 |
| X. | The Disciple | 47 |
| XI. | Mind | 49 |
| XII. | The Body | 51 |
| XIII. | Man | 53 |
| XIV. | Womanhood | 55 |
| XV. | Beauty (True Loveliness) | 57 |
| XVI. | Wedlock | 59 |
| XVII. | The Husband | 61 |
| XVIII. | Housewife | 63 |
| XIX. | Womanly Excellence | 65 |
| XX. | Domestic Life | 67 |
| XXI. | Labour | 69 |
| XXII. | The Earth | 71 |
| XXIII. | The Sea | 73 |
| XXIV. | The Sun | 75 |
| XXV. | The Moon | 77 |
| XXVI. | The STars | 79 |
| XXVII. | Mountains | 81 |
| XXVIII. | The River | 83 |
| XXIX. | Wind | 85 |
| XXX. | The God | 87 |
| XXXI. | Morning | 89 |
| XXXII. | Night | 91 |
| XXXIII. | Sleep | 93 |
| XXXIV. | The Grove | 95 |
| XXXV. | Flowers | 97 |
| XXXVI. | Birds | 99 |
| XXXVII. | Lust | 101 |
| XXXVIII. | Wantons | 103 |
| XXXIX. | Wrath | 105 |
| XL. | Mental Confusion | 107 |
| XLI. | Tiruvalluvar | 1-9 |
| XLII. | War | 111 |
| XLIII. | Ant | 113 |

# தனிப்பாசுரத் தொகை

## க. கடவுள்

எங்கணும் விளங்குறு மிறைவனே! எண்குணந்
தங்கிய வொருபெருந் தலைவனே! ஒப்புயர்
வில்லா தோங்கிய வீசனே! என்றும்
எல்லாந் தானா யிலகிடும் பொருளே!
இன்பமோ டெழிலு மன்புட னருளும்
நண்ணிய நாதனே! புண்ணிய முதலே!
உருவுடை யாயோ? உருவிலி யேயோ?
உருவரு விலாயோ? உடையையோ? உணர்கிலேன்.
என்னை மெளியே னின்னை யண்முகோ?
உன்னுமா றறியேன்; உணருமா றறியேன்
பன்னுமா றறியேன்; வாழ்த்துமா றறியேன்.
இணங்கி யென்னையு மெடுத்துக்
காத்தல் வேண்டும் பூத்துநின் னருளே.

---

க. கடவுள்-எல்லாப் பொருளையுங் கடந்தவன். (கட-பகுதி, உள்-தொழிற் பெயர் விகுதி; கடவுள்-கடத்தல். ஈண்டுத் தொழிலாகுபெயர்.) இறைவன்-எப்பொருளிலுந் தங்குகின்றவன். எண்குணம்-தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவி லாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என விவை. இவற்றை முறையே சுவதந்திரத்துவம் விசுத்ததேகம், நிராமயாத்மா, ஸர்வஜ்ஞத துவம், அநாதிபோதம், அலுப்தசக்தி, அநந்தசக்தி யென்பர் வடநூலார். இவ்வாறு சைவாகமத்துட் கண்டது. இனி, அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமா சித்திகளையும் எண்குண மென்றுங் கூறுப. "கடையிலா ஞானத் தோடு காட்சிவீ ரியமே யின்பம், மிடையுறு நாம மின்மை விடுத்தகோத் திரங்க ளின்மை, அடையுறு மாயு வின்மை யந்தரா

## SONNETS

### I. GOD

MY GOD! filled with Thy glorious Majesty
Are earth and heaven! Thy loving saints declare
Thine eight-fold attributes. Beyond compare,
Lord of the Universe exalted, Thee
In every creature immanent I See!
All bliss, all love, all grace, all beauty fair,
Flow forth from Thee, Fount of all virtue rare!
Thy Form, - Thy formless Self-reveal to me!
How may I, faint and frail, approach Thy feet?
How worshipping in lowly homage bow?
Beyond my struggling thought's conception Thou!
How utter Thee? How sing Thy praises meet?
O let Thy Grace reveal'd around me shine!
Draw near to take and guard me ever Thine!

---

*யங்க ளின்மை, யுடையவன் யாவன் மற்றிவ் வுலகினுக் கிறைவனாமே,'' என்பது சூடாமணி நிகண்டு. இஃது சைனநூல் வழக்கு.*

*ஒரு பெருந்தலைவன்-ஒருவனாகிய பெருமை வாய்ந்த நாயகன். 'ஏகநாயகன்' என்றபடி.*

*ஒப்பு-சமானம். உயர்வு-அதிகம். ஈசன்-கடவுள். என்றும்-எக்காலத்தும். இலகிடும்-விளங்கும். எழில்-அழகு; எழுச்சியு மாம்.*

cf. ''நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்.''

**(திருக்குறள் 407.)**

*எழில்-பெருமையுமாம்.*

cf. ''அறுமருப் பெழிற்கலை.'' *(புறம்-23.)*

*அன்பு-'தன்னாற் புரக்கப்படுவார் மேலுளதாகிய காதல்' என்றும், அருள்-'ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கம்'' என்றும் புறநானூற் றுரையாசியிர் கூறுவர். அன்பு, 'மனைவி மக்கள் முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனாதல்' என்றும், அருள், 'தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா வுயிர்கண் மேலுஞ் செல்வதாகிய கருணை' என்றும் பொருள் கூறுவர் பரிமேலழகர்.*

நண்ணிய-பொருந்திய. நாதன்-தலைவன். புண்ணிய முதல்-புண்ணியமே திருமேனியாகக் கொண்ட ஜகத்காரணன். உரு-

## உ அறிவு

அறிவே! மக்கட மாருயிர்க் குறுதியே!
செறிவேய்ங் காடெனுந் தீவினை தனைமடுத்
தெரிதருந் தீயே! பெரிதுமென் மனக்களி
றடக்குமங் குசமே! கடக்கரு வாழ்க்கைக்
கடற்செல விற்றிசை காட்டுங் கருவியே!
என்னுள மன்னித் துன்னிரு டுமித்தொளிர்
நந்தா விளக்கே! சிந்தா மணியே!
உன்னைத் துணைக்கொடிவ் வுலகினிற் பஃறொழில்
நன்ன ரியற்றிட நான்றுணி கின்றேன்.
ஆதலி னென்றனக் கேத மணுகாது
நலமிஃ தென்று மலதிஃ தென்றும்
பகுத்துக் காட்டியு மிகுத்துச் செல்வுழி
மேற்சென் றிடித்து மேவுதி
மாற்சிறு பருவ மைந்தனென் னயலே.

---

*உருவம். உருவிலி-உருவில்லாதவன்; அரூபி. அரு-உருவ மின்மை. அண்முகோ-நெருங்குவேனோ. உன்னுதல்-நினைத்தல். ஆறு-வழி. உணர்தல்-அறிதல். பன்னுதல்-பேசுதல், பாடுதல்-தோத்திரஞ் செய்தல். வணங்குதல்-நமஸ்கரித்தல்.*

*உன்னுதல், உணர்தல் இவை மனத்தின் செய்கை; பன்னுதல் பாடுதல், வாழ்த்துதல் இவை வாயின் செய்கை; வணங்குதல் மெய்யின் செய்கை. மன மொழி மெய்களாகிய முக்கரணங்களானும் வழிபடல் கூறியவாறு. இணங்கி-மனம் பொருந்தி. என்னையும்-ஒன்றற்கும் பற்றாத என்னையும்; உம்-இழிவு சிறப்பு.*

*நின்அருள் பூத்துக் காத்தல் வேண்டும் என மாறுக. அருள் பூத்தல்-கருணை மலர்தல்.*

*உ. உறுதி-உறுதி பயப்பதை உறுதி யென்றனர். காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது. உறுதிப் பொருள்கள்-அறம், பொருள், இன்பம், வீடென்பன.*

*செறி-நெருங்கிய. வேய்ங்காடு-மூங்கிற் காடு. தீவினையை வேய்ங்காடாக உருவகித்தனர். மடுத்து-விடாது பற்றி. எரிதரும்-எரிக்கும். மனக்களிறு-மனமாகிய களிற்றியானை. உருவகம். கடக்கரு-கடத்தற்கரிய; 'கடக்க அரு' என்பது 'கடக்கரு' எனத் தொகுத்தல் விகாரப்பட்டு நின்றது. வாழ்க்கை-உயிர்*

## II. WISDOM

WISDOM! sole strength of life to man below!
Though Fire consuming evil deeds that grow
Like tangled bamboo wilds! Goad that the mind
Subdues, - fierce elephant that none can bind!
Compass, that ever shows the storm-toss'd soul,
Beyond earth's joys and griefs the long'd-for goal!
Lamp, burning clear, dispelling mists that rise,
Sure light displaying to my troubled eyes.
Celestial Gem! I trust e'en on this earth.
Well to perform, my helper thou, due works of worth.
That neither fault nor flaw be found in me.
Teach me the good and evil clear to see.
Draw nigh to chasten, if from virtue's ways
I err. Reclaim thy child that, wildered strays!

### NOTES

Knowledge- அறிவு. Wisdom-ஞானம். Here, as generally, in the kurral, the fuller meaning is given to the word. Compare the use in the Kurral of கல்வி.

The 29th of the book of Job is probably, the sublimest account of Wiisdom to be found.

See the very ancient "Wisdom' of Solomon', Ch. V. 12&c.

---

வாழ்க்கை. கடற் செலவு-கடற் பிரயாணம், திசை காட்டும் கருவி-Mariner's Compass. உளம்-உள்ளம், மனம். மன்னிய- பொருந்திய. துன்இருள்-நெருங்கிய அறிவின்மையாகிய துன்னிருளென்றனர்.

துமித்தல்-அறுத்தல், அழித்தல். ஒளிர்-விளங்கும். நந்தா விளக்கு-தூண்டாவிளக்கு. சிந்தாமணி-நினைத்ததைத் தருமொரு தெய்வமணி; அறிவினைச் சிந்தாமணியாகக் கூறிய நயம் உய்த்துணரற்பாலது. துணைக்கொடு-துணையாகக் கொண்டு. பஃறொழில்-பலதொழில். நன்னர்-நன்கு, செவ்விதாக. இயற்றிட- செய்ய. என்றனக்கு-எனக்கு. ஏதம்-துன்பம், இடையூறு. அணுகாது- உண்டாகாமல். நலம்-நன்மை. அலது-நல்லதல்லாதது, தீமை. பகுத்து-பிரித்து. மிகுத்துச் செல்வுழி-வரம்பு கடந்து சென்றவிடத்து. மேற் சென்றிடித்தும்-வலியப்புகுந்து கழறியும். மேவுதிபொருந் துவாய். மால் சிறு பருவ மைந்தன்-மயக்கம் நிறைந்த இளம்பிள்ளை. அயல்-பக்கம். மைந்தனாகிய என் அயல் மேவுதி, என முடிக்க.

## ௨. வாய்மை

வாய்மையே! சிறப்பொடு மாட்சிசேர் குணனே!
மேற்கோ ளெவற்றினும் மேற்படு மியல்பே!
உள்ளது சொல்லலா முண்மையே! சிறிதும்
வேறுபா டுரையா மெய்ம்மையே! மாந்தர்தம்
ஒவ்வோ ருறுப்பு மோரணி கலனை
வெவ்வே றாகச் செவ்வே யுடைத்து;
கண்ணும் வாயு நண்ணுங்கொ லணிகலன்?
'கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம்' என்ப;
வாயினுக் கருங்கலம் வாய்மைநீ யென்பல்.
அறமெனுங் கடவு ளணிதரு முடியே!
பிறவுயிர் தமக்குப் பெட்பொடு நன்மை
விளைத்தற் கோலினின் னளத்தல் நேரிதோ?
என்னணம் பொய்மெயாத் துன்னும்
நன்றுந் தீது மொன்றலில வாகவே?

---

*௨. வாய்மை-சத்தியம், (வாயின் தன்மை வாய்மையாம்). சிறப்பு-புகழ். மாட்சி-பெருமை. குணன்-குணம். மேற்கோள்-மேற்கொள்ளப்பட்டது; கொள்கை. மேற்படும்-உயர்ந்த. இயல்பு- சுபாவம். உள்ளது சொல்லலும், சிறிதும் வேறுபாடின்றி உரைத்தலும் மெய்ம்மையாம் என்றவாறு. வேறுபாடு-வித்தியாசம். மாந்தர்- மக்கள். உறுப்பு-அவயவம். அணிகலன்-ஆபரணம். வெவ்வேறாக-தனித்தனிச் சிறப்புரிமை யுடையதாக. செவ்வே-நன்றாக. செம்மை என்னும் பண்படியாகப் பிறந்த எச்சம். உடைத்து-உடையது. நண்ணுங்கொல்- பொருந்துமோ. கொல்-வினாப்பொருட்டு. கண்ணோட்டம்- தாக்ஷண்யம்.*

cf. *"கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்."*

**(திரிகடுகம். 52)**

*அருங்கலம்-அரிய அணிகலம்.*

## III. TRUTH

O TRUTH, with beauty and high glory crown'd,
Thou conqueror still of every stubborn foe!
Thy watchword is REALITY. We know

On the chaste lips no empty word is found.
For body's members poets gems devise,-
"The eye's fit ornament is love's soft gleam';-
TRUTH'S jewels only speaker's lips beseem:

TURTH is th'adornment heaven itself doth price!
The Holy God with this his glory crowns!

Yet men enquire, if for utility
To others, man may sacred truth deny,-

Benevolently false, tho' justice frowns.
Untruth is only ill, when right you scan,-
AND WHAT IS FALSE IS NEVER GOOD FOR MAN!

---

''வாய்த னக்கணி வாய்மையே யாகுமால்'',

என்ப பிறாண்டும். என்பல்-என்பேன். அணிதரும்-அணியும். அறம் எனும் கடவுள்-அறக்கடவுள். முடி-கிரீடம். பெட்பு-விருப்பம். நன்மை விளைத்தற்கோலின்-நன்மை செய்தலாகிய அளவு கோலினால். நின் அளத்தல்-உன்னை யளத்தல். நேரிதோ-தகுதியுடையதோ; இல்லையென்றபடி.

''பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்,'' *(திருக்குறள் 292)*

என்ற குறளினை யொருவாறு மறுத்ததாம். என்னணம்-எவ்விதம். துன்னும்-பொருந்தும். நன்றுந் தீதும் ஒன்றில-நன்மையும் தீமையும் ஒன்று சேரா.

## ச. அன்பு

அன்பே! அன்பே! அழகுசா லன்பே!
என்பே ருளத்திற் கியைந்த செவிலியே!
இவ்வுல கென்னுஞ் செவ்விய காட்சி
காணிய வொளிர்வோய்! பாணியேல் வருதி.
உன்மக னவனைநின் னொளிர்கரத் தேற்றி.
தன்வய மாவவன் றனைச்செல விட்டிடேல்.
துன்பம் விளைக்குந் தொழில்புரி யாவணம்
இன்ப மளிப்ப தெதுவே யாயினும்
எடுத்துக் காட்டினு மடுத்து நின்றுபல்
நண்பர் தம்மொடு நலமுறக் கூட்டுவாய்.
புன்னகை நின்முகம் பொருடொறுந் தோன்றும்
உன்மக னவனரு ளோடு முறைவான்
நன்மையாப் போற்றி நாளும்
ஏர்பெற விருத்திச் சீர்பெற வளர்த்தியோ.

---

ச. அன்பு-முதற் றனிப்பாசுரத்தின் குறிப்புரை நோக்குக. அழகுசால்-அழகமைந்த. என் பேருளத்திற்கு இயைந்த செவிலி-எனது பெரிய மனமாகிய மகனுக்குப் பொருந்திய செவிலித்தாய். ஏகதேச வுருவகம்.

''என்பே ருளமகற் கியைந்த செவிலியே,''

என்பது முதலிற் கொண்ட பாடம். உலகத்தை யுள்ளவாறு கண்டநுபவித்தற்கு அன்பே கருவியென்றனர். செவ்விய-அழகிய. காணிய-பார்ப்பதற்கு. ஒளிர்வோய்-விளங்குவோய். பாணியேல் வருதி-தாமதியாமல் வருவாய்; பாணியேல்-முற்றெச்சம். உன் மகன் அவனை-உனது மகனாகிய அவனை. ஈண்டு 'உன்மகன்' என்றது மனத்தினை.

ஒளிர்-விளங்கும். ஏற்றி-ஏற்றுக் கொள்வாய். மனமெனும் மைந்தனை அன்பாகிய செவிலியின் கையில் அடைக்கலமாகத் தந்தது கூறினர். தன்வயமா-தன்னிஷ்டம்போல, மனம் போன

## IV. DIVINE LOVE ("CHARITY')

O LOVE divine! thou ever beauteous LOVE,
The fostering Mother of my inmost soul!
Thou, in whose light this universal whole
In vision clear I see, haste from above.

To thy safe guardian arms receive thy son,
Suffer him not one step to take alone.
Though plasure's tempting bait be shown.
Let naught that sorrow brings by him be done.

If kindly friends to circle round thou give,
O'er all my friendship shed thy mystic grace.
Loving and loved, thy child, O may I live,
And see in all I view thy smiling face.

Tis thine each day to guard thy nursling well,
That be in seemly worth may joyous dwell.

### NOTES

Here "love' is the rare excellence described by St. Paul (1 Cor. xiii). In ch. viii, of Tiruvalluvar it is the same.

---

படி. செலவிட்டிடேல்-செல்லவிடாதே. துன்பம் விளைக்கும் தொழில்-பிறர்க்குத் துயரினை யுண்டாக்கும் செயல்.

புரியாவணம்-செய்யாதபடி. எடுத்துக் காட்டியும்-எடுத்தறிவித்தும். அடுத்து நின்று-சேர்ந்து நின்று. நலம் உற-நன்மை பொருந்த. புன்னகை நின்முகம்-புன்னகையோடு கூடிய நினது முகம். உன் மகன்-மனம். அருளோடும் உறைவான்-அருளுடன் கூடி வாழும்படி.

''அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு,'' *(திருக்குறள் 757.)*

என்னுங் குறள் ஈண்டு ஒப்பு நோக்குதற்பாலது.

போற்றி-பாதுகாத்து. நாளும்-தினமும். ஏர் பெற-அழகு பொருந்த. இருத்தி-தங்கச் செய்து, சீர்பெற-பெருமையுண்டாக. வளர்த்தி-வளர்ப்பாய். ஓகாரம்-ஈற்றசை.

## ரு. காதல்

இம்மையின் பத்தி னினிய முதலாய்ச்
செம்மையி னிலகுறுஉஞ் சீரிய காதலே!
அனைத்தையுந் தன்வய நினைப்பினி லாக்குங்
கடவு டன்மை கவின்ற பொருளே!
ஆக்கஞ் செயுநிலத் தாகிய விளைவே!
ஏக்கற்று நின்றவர்க் கெய்திய மருந்தே!
உடையு மூனு நடையுங் குலனும்
ஒவ்வா தாரையு மொன்று படுத்துவை;
செவ்வே யன்னர்தந் திணிமன மலர்த்துவை;
தற்செய லாகத் தனித்தெதிர்ப் படுநரை
இச்சை கொளுத்தி யிசைப்பா யவர்மனம்;
நம்புமென் மலரவர் நடுங்குகைந் நிறைப்பை!
அம்மவோ! நின்னா லன்றோ
உலகி னெலாமுறை விலகலின் றொழுகலே?

---

*ரு. காதல்-இது பெரும்பாலும் தலைவன் தலைவிக்கிடையே யுளதாம் பேரன்பினை யுணர்த்தும்; சிறுபான்மை மாக்கண் மாட்டுப் பொருந்தும் அன்பினையும் குறிக்கும். இம்மை-இப்பிறப்பு. இம்மை யின்பம்-இப்பிறப்பில் உலகின்கண் உளதாம் இன்பம். முதல்-அடிப்படை, காரணம். இலகுறூஉம்-விளங்கும். சீரிய-சிறந்த. அனைத்தையும்- யாவற்றையும். வயம்-வசம். நினைப்பினில்-நினைத்த மாத்திரையில், மிக விரைவில் என்றபடி, கவின்ற-அழகுற அமைந்த. ஆக்கம்-மேன்மேலுயர்தல், வளர்ச்சி, வாழ்வு. விளைவு-பயன்.*

''ஆக்கப்படும் பொரு ளல்லா விளைவே'', என்பது பழைய பாடம்.

cf ''நேயமும் ஆக்கப்படும் பொருளாமோ''

**(மநோன்மணீயம்)**

ஏக்கறுதல் - இளைத்து இடைதல், வருந்துதல்.

cf. ''கண்டுவப் பளித்தவர் கடைக்க ணேக்கற.''

***(சிந்தாமணி 1622)***

## V. KINDLY AFFECTION

FIRST fruit of all the pleasure nature yields,
AFFECTION kindly! mystic glory bright!
Essential beam of God's eternal light,
Who over all His gracious sceptre wields;-

A healing balm grown on these earthly fields:-
Thou dost make one the scattered tribes of man,
Diverse in garb and food and life and clan;-
The power that feebler hearts from sorrow shields.

Thou dost unite in bond of concord sweet,
The men, on earth's lone way, by chance who meet,
Kindling thy light in every human soul.
By thee anew each withered heart expands,

With flowers of hope thou fill'st men's trembling hands!
Earth's course unhindered moves 'neath thy control.

---

*ஏக்கற்று நின்றவர்க்கு-துன்பமுற்றவர்க்கு. எய்திய-துன்பத்தை நீக்கப் பொருந்திய. மருந்து-அமுதம்; மருந்துமாம். ஊண்-உணவு. நடை-ஒழுக்கம். ஒவ்வாதார்-பொருந்தாதார், ஒன்றுபடுத்தல்-சேர்த்தல். செவ்வே-நேராக. அன்னார்தம்-அவருடைய. திணி-வலிய. மலர்த்துவை-மகிழ்விப்பாய்.*

*தற்செயல்-எதிர்ச்சை. தனித்து-தனியாக. எதிர்ப்படுநர்-காண்பவர். இங்ஙனம் தமியராய்த் தலைவனுந் தலைவியு எதிர்ப்பட்டுக் காதல்கொள்ளு மியல்பினைக் கோவை முதலிய நூல்களுட் காண்க.*

*இச்சை கொளுத்தி-ஆசையூட்டி. இசைப்பாய்-பொருத்து வாய். அவர் மனம் இசைப்பாய் என மாறுக. நம்பு மென் மலர்-நம்புதலாகிய மெல்லிய மலர்.*

cf. ''நம்பலென் பதுவே யன்பி னிலைமை''

**(மநோன்மணீயம்)**

*நடுங்குகை-துன்பத்தால் நடுங்கும் கை. அம்மவோ-வியப் பிடைச் சொல். எலாம்-யாவும். முறைவிலகல் இன்று-முறைமை தவறுதல் இன்றி. ஒழுகல்-நடத்தல்.*

## சு. இசை

செயிரி லிசையெனுஞ் சீரிய வின்பமே!
உயரிவிளக் கொளிர்வா னுறுநறு நெய்யே!
பண்ணொடு தாளம் பண்புற விசைத்திட்
டிசைவலோர் தம்முள மினிது களிப்பரால்.
கற்றொன்று மறியாக் கன்மன மாந்தர்
மற்றும்பஃறீயியன் மன்னிய விலங்குகள்
விடவரா முதலெலாம் மேதகு தன்பே
ரின்பத் தின்றளை யியைந்து நிற்பத்
தன்வயப் படுக்குந் தகைசா லிசையே!
உண்மெய்ந் நோக்க முயரிய வன்பாம்;
கூடார் தம்மையுங் கூடிடச் செய்வை
என்றுகொ லஃதுள மெலாம்புள குறுத்தல்?
செவியின் னமுதே! செவ்விதின்
ஒருப்பா டெய்தி யுறைகவிவ் வுலகே.

---

*செயிர்இல்-குற்றம் இல்லாத, இசை - ஸ்வரம்; ஆகு பெயராய்ச் சங்கீதத்தை யுணர்த்திற்று. ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு எழுத்தாலும் ஸப்த ஸ்வரங்கள் பிறக்கும். இவை ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனப்படும். இவற்றை முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று தமிழில் இசையிலக்கண நூல்கள் கூறும். ஸப்த ஸ்வரங்களை ஏழிசை யென்று கூறுப. இதனை,*

''சரிக மபதநியென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத்-தெரிவரிய
வேழிசையுந் தோன்றும்,''

*என்னும் சிலப்பதிகார அடியார்க்குநல்லா ருரை மேற்கோட் செய்யுளடிகளால் நன்கறியலாம். பண்-பண்ணென்பது இராகம். இசையினின்றும் பண் தோன்றும். 'இசை பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையென்று பெயராம்,' என்றும், நெஞ்சம், மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை என்னும் பெருந்தானம் எட்டிலும், எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னுங் கிரியைக ளெட்டாலும் பண்ணிப் படுத்தலாற் பண்ணென்றும் பெயர்படும் என்று அடியார்க்கு நல்லார் கூறி,*

## VI. HARMONY

O HARMONY! Thou name of pure delight!
With measur'd time and tune and dulcet sound
Thou makest merry ministrel's heart rebound:
The oil by which the lamp of life burns bright!
By every rugged, untaught human breast,
By creatures fierce, by serpents in their wild,
Is heav'nly MUSIC's mast'ring charm confess't,-
All soothed and lulled by music's accents mild.
Ambrosia to the ear! Thy key-note true is Love,
"Tis HARMONY of soul,-that mystic tone,-
Which bids the sunder'd tribes of earth be one.
When shall it thrill all bosoms from above?
Then shall att strifes and savage discords cease,
And earth harmonious rest in God's own peace!

**S. John xiv-27.**

---

பாவோ டிணைத லிசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தான மெட்டானும்-பாவாய்
எடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தலாற் பண்ணென்று பார்,''

*என்ற மேற்கோட் செய்யுளுங் காட்டுவர்.*

*தாளம்-லயம்; கைகள் இரண்டினுடைய சேர்க்கையாலும், அதாவது ஒரு கையோடு மற்றொரு கையை அடிப்பதனாலுண் டாகும் சப்தத்தாலும், அப்படிச் சேர்ந்த கையை மறுபடி விரிப்பதனாலும் உண்டாகிற செய்கை தாளமென்ப. சுருதி, லய மென்னும் இரண்டையும் ஸங்கீதத்துக்கு அங்கமென்பர். 'சுருதிர் மாத லயஃ பிதா' என்று வடநூலார் கூறுவர். எனவே பாட்டி னுடைய கால அளவைக் கையாலேனும் கருவியாலேனும் கணக் கிடுவதே தாளமெனப்படும். தாளம், த்ருவம் மட்டியம் ரூபகம், ஐம்பை, திரிபுடை, அடம் என ஏழுவகைப்படும் என்றும், இவை யொவ்வொன்றும் சதுர்சரம் முதலிய ஐந்து ஜாதிகளைப் பெறும் என்றும், ஆக, தாளம் முப்பத்தைந்து என்றும் தற்கால ஸங்கீத நூலோர் கூறுவர். அடியார்க்கு நல்லார் வேறு பல பேதங் கூறுவர்; சிலப்பதிகார அரங்கேறு காதை அடியார்க்கு நல்லார் உரை நோக்குக. உயிர்.... நெய்யே: உயிராகிய விளக்குச் செவ்வையாய் பிரகசித்தற் பொருட்டுப் பொருந்திய நறு மணமுள்ள நெய்யே. உருவக வணி.*

## எ. கல்வி

கல்வியே! மக்கடங் கண்ணே! புலவர்தஞ்
செல்வியே! மனத்தின் செவ்விய வுணவே!
நின்னொடு பயிறன் மன்னிய மாந்தர்
தமக்கும் பிறர்க்குந் தனிப்பே ரின்பம்
கரும்பயி றற்குக் கைக்கூலி போலத்
தரும்பொரு ளே! உயர் தகைமுத்தி வித்தே!
பரந்த பாரினும் விரிந்த வானினும்
பாவலர் நூலினும் பரிவுடன் மேவி
ஆவலின் விளையாட் டயர்தரு மங்காய்!
கருத்தினிற் களிப்பை; உரைப்பை யாற்றுரை
கதுமென நின்னைக் கைப்பிடித் தோர்தமக்
கெதுவுநன் னாடே! எதுவுநல் லூரே!!
ஆகவு மென்கொ லநேகர்
ஊக மின்றிநா ளுலப்பவிட் டனரே?

---

*பண்புஉற-இலக்கணங்கள் அமைய. இசைத்திட்டு-சேர்த்து. இசைவலோர்-சங்கீத வித்துவான்கள். உளம்-மனம். ஆல்-அசை. கற்று ஒன்று மறியாக் கன்மன மாந்தர்-யாதொன்றனையுங் கற்றறியாத கற்போலும் வலிய நெஞ்சினை யுடையார். மற்றும்-இன்னும், வேறாகிய. பஃறீயியன் மன்னிய விலங்குகள்-பல தீயதன்மை வாய்ந்த மிருகங்கள்; துஷ்ட மிருகங்கள்.*

*விட அரா-விடத்தை யுடைய பாம்பு. பாம்புகள் ஸங்கீதவசப்படுதல் பிரத்தியக்ஷம். வடநூலார் 'வேத்தி காநரஸம் பணி:' என்பதனானு முணர்க, முதல் எலாம்-முதலான எல்லாப் பிராணிகளும். மேதகு-மேன்மை வாய்ந்த, தன் பேரின்பத்தின் தளை இயைந்து நிற்ப-தனது பேரானந்தமாகிய பிணிப்பினாற் கட்டுண்டு நிற்க. தன்வயப் படுக்கும் தகைசால் இசையே-தன் வசமாக்கும் பெருமை அமைந்த ஸங்கீதமே.*

*மெய்ந் நோக்கம்-உண்மைக் கருத்து. உயரிய-சிறந்த. கூடார்-பகைவர். கூடிட-சேர. உளம் எல்லாம்-எல்லாருடைய மனத்தையும். புளகு உறுத்தல்-களிப்பாற் சிலிர்க்கும்படி செய்தல். செவியின்னமுதே-செவியால் நுகரப்படும் இனிய அமுதமே. செவ்விதின்-நேர்மை பொருந்த. இவ்வுலகு ஒருப்பாடு எய்தி உறைக. இந்த உலகம் ஒற்றுமை யடைந்து வாழ்க.*

## VII. LEARNING

LEARNING! Thou eye of men! The sages find
Delight in thee,-the fitting food of mind.
   Learners and teachers for their pleasant toils
   Get over-payment in thy ample spoils.
From all the ages won,-wisdom of all mankind!
Through earth's wide realms, beyond the starry skies,
Thou dost explore with eager sporting joy
   All lays of bards whose glory never dies,
Wherever thought may dwell thou findest glad employ;
And thou can'st speak of rest from earth's annoy.
Who hold thee fast, their home is everywhere;
These freedom of earth's every city share.
Why do men fail thy proffer'd boon to gain.
And darkling live their precious lives in vain?

---

எ. மக்கள் தம் கண்-மனிதர்களுக்குக் கண் போன்றது கல்வியென்றபடி.

cf. **''கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சுழல வோடும் வெய்யவன் என்னும் பேர.''**

***(சூளாமணி - மந்திரசாலை. 30)***

புலவர்தம் செல்வி-புலவர்க்குச் செல்வமாயிருப்பவள்; கல்வியினை யுண்டாக்கி வளர்ப்பவர் புலவராதலின் அவருடைய மகள் எனினுமாம். மனத்தின் செவ்விய உணவு-மனம் இனிது வளர்ந்து செழித்தற்குப் பொருந்திய உணவு. பயிறல்-பழகுதல். மன்னிய-பொருந்திய. அயிறற்கு-உண்ணுதற்கு. 'கரும்பு தின்னுதற்குக் கைக்கூலி வேண்டுமா? என்னும் பழமொழி யீண்டு உவமையாக நின்றது. தனிப் பேரின்பம்-ஒப்பற்ற பேரானந்தம். தனிப் பேரின்பம் தரும் பொருள் எனக் கூட்டுக.

உயர் தகை முத்தி-மேலாந் தன்மை வாய்ந்த வீடு. முத்தி வித்து-முத்திக்கு வித்து; வீடு பெறுதற்குக் கல்வி முதற் காரணம் என்றபடி.

cf. ''எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப் பானாகும்-மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

பார்-நிலவுலகம். வான்-விண்ணுலகம். பரிவு-அன்பு, மேவி-பொருந்தி. ஆவல்-ஆசை.

## அ. நூல்

வாய்வா ளாமை மேயநூற் குரவிர்காள்!
பேசலி ரெனினும் பெருங்கருத் துணர்வல்.
'சிறிதியா மறிவோம்; உறுமினி முழுவதும்;
பொறையொடு முழைப்பை' யென் றறிவுறுப் பீர்காள்!
கரையின் றும்மியல்! கலைநல மாட்சியீர்!
அரிய கதைசொலி யாதலு மழிதலும்
இன்னண மென்பிரால்; பொன்னுலக கினருநும்
புலவர் கருத்தின் போக்கறி கலரே.
மக்களும் பொருளுமென் வாழ்குர வோரே.
இயற்கையின் பல்குர லினிலெனைச் சுற்றி
இசைகுர வோர்வலர், எத்துணை யெளியென்யான்!
நினைவுவா டாமலர் நேர்ந்து கூட்டுழி
அனைத்துமன் பாட்சியென் றறிவேன்.
அறிதர மெய்யெலா மளிப்பையென் னிறையே!

---

*கருத்தினிற் களிப்பை-கருத்து ஊன்றிய இடத்துக் களிப்பினைத் தருவாய். உரைப்பை ஆற்று உரை-ஆற்று உரை உரைப்பை என மாறுக; கவலையைப் போக்கும் மொழிகளைப் பகர்வாய். கதுமென-திடீரென்று; விரைவுக் குறிப்பு. கைப் பிடித்தோர்-உறுதியாகப் பிடித்தவர்; மங்கையைக் கைப்பற்றிய தாகக் கூறிய நயம் உய்த்துணரற் பாலது. கைப் பிடித்தல்-பாணிக் கிரணம். எதுவும் நன்னாடே எதுவும் நல்லூரே:*

cf. ''யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.''

**(திருக்குறள் 397)**

*ஆகவும்-அங்ஙனமாகவும். என்கொல்-ஏனோ. ஊகம் இன்றி-ஆலோசனை யில்லாமல். நாள்-வாழ்நாள். உலப்ப-பயனின்றிக் கழிய. பத்தாவது வரியை நீக்கி,*

''பரந்த பாரினும் விரிந்த வானினு
மெண்டிசை யின்கணும் பண்டிசை போகிய
பாவலர் நூலினும் பரிவுடன் மேவி,''

என்ற பாடம் முதற்பதிப்பி லமைந்துள்ளது.

அ. நூல்-உவமவாகு பெயர். ''பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்..... நூன்முடியு மாறு.''

## VIII. BOOKS

My silent teachers ye! - nor sound, nor speech.-
 Your thoughts I read,-albeit yourselves are dumb:
 **"We know in part, the perfect is to come,**
**In humble patience toil:**'-"Tis thus ye preach.
How infinite your range! beyond the reach
 Of angel's wing your poets' flight; sublime
 Your science-lore; rare stories of all time;
While, how to live, and how to die ye teach!

Not you alone,-from men and things man learns,-
 Mighty my masters, but my powers how weak,
 Around me nature's myriad voices speak,-
And mystic reign of love my soul discerns;

While memory gathers flowers that fadeless blow.
Grant me, O God, in all Thy truth to know!

---

**''உரத்தின் வளம்..... தீர்க்குநூன் மாண்பு.''**

***(பன்னூல் பாயிரம். 24, 25 நோக்குக.)***

*வாய் வாளாமை-மௌனம்; பேசாமை. மேய-பொருந்திய. நூற் குரவிர்காள்-நூலாகிய ஆசிரியர்களே. இர்-முன்னிலை உணர்த்தி நின்றது. பேசலிர்-பேசீர். எனினும்-என்றாலும். உணர்வல்-உணர்வேன், அறிவேன். சிறது யாம் அறிவோம்-நாம் அறிந்துள்ளது மிகச் சிறிய அளவே. இனி முழுவதும் உறும்-இனிப் படிக்கப் படிக்க முற்றிலும் அறிதல் பொருந்தும். பொறையொடும் உழைப்பை-பொறுமையோடு உழைப்பாய். அறிவுறுப்பீர் காள்-தெரிவிப்பவர்களே. உம்மியல் கரையின்று-உம்முடைய தன்மை அளவிட முடியாதது. கலை-சாஸ்திரம் (Science). நலம்-நன்மை. மாட்சியீர்-பெருமையுடையீர். அரிய கதை சொலி-அருமையான நற்கருத்துக்களைக் கூறும் கதைகளைச் சொல்லி.*

*ஆதலும்-நன்மையுற்று வாழ்தலும். அழிதலும்-தீமையுற்றுக் கெடுதலும். இன்னணம்-இன்ன வண்ணம், இவ்விதம். என்பீர்-என்று கூறுவீர். ஆல-அசை. பொன்னுலகினர்-சுவர்க்கவாசிகளான தேவர். புலவர்-நூலியற்றும் ஆசிரியர். அறிகலர்-அறியார். மக்களும்-மாந்தரும். பொருளும்-ஏனைய பொருள்களும். என் வாழ்குரவோர்-எனது வாழ்வினை யளிக்கும் ஆசிரியர்கள்.*

இயற்கையின் பல் குரலினில்-இயற்கையின்கண் அறியக் கிடக்கும் பல குரல்களால். ஏனைச் சுற்றி-என்னைச் சூழ்ந்து. இசை-அறிவுறுத்தும். குரவோர்-ஆசிரியர். வலர்-வல்லமை யுடையார். யான் எத்துணை எளியன்-யான் எவ்வளவு எளியவன். எளியவன்-சக்தியிற் குறைந்தவன். நினைவு- ஞாபகம். வாடா மலர்-வாடாத மலர்; என்றது அழிதலில்லாத நூற்கருத்துக்களை. நேர்ந்து-பொருந்தி. கூட்டுழி-சேர்க்கும் பொழுது. அனைத்தும்-எல்லாம். அன்பு ஆட்சி-அன்பின் ஆளுகை, அன்பின் அரசாட்சி.

அறிதர-அறிந்து கொள்ளும்படி. மெய் எலாம்-எல்லா உண்மைகளையும். இறை-கடவுள். அளிப்பை-கொடுப் பாய். 'நூல்' என்ற தலைப்பின் கீழ் ஆசிரியர் தமது தனிப் பாசுரத்தொகை முதற் பதிப்பில் வெளியிட்ட பாசுரம் பின்வருமாறு:

''சீலஞ் சிறந்தொளிர் நூலென் பதுதா
னியற்கைப் பொருள்களி னினிய காட்சியாம்
பெயற்கார் குழீஇமழை பெய்தலுங் கற்றோ
ருள்ளச் செறுவி னுறுவிதை முளைத்துத்
தள்ளரும் பயிராய்த் தழைத்துக் கவியெனுங்
கதிர்க்குலை யீன்று கவின்றொடர் நிலைப்படூஉ
முதிர்ச்சிசால் புலவர் முற்களஞ் சென்றவட்
சொல்லினி தாய்ந்தபின் றொகுத்துய்த் திட்டநல்
லில்லமே யன்றோ வென்போ லியர்க்கு?
மாணவர் மனக்குடி பேணு புத்தகமும்
பாவல வண்டர் படிதே மலரும்
ஆவலி னாடுநர்க் கன்புறு பொழிலுங்
கனிவுசேர் காரண குருவும்
பனுவ லென்னப் பகருமஃ தன்றோ?''

(சீலம்-அழகு. ஒளிர்-விளங்கும். இயற்கைப் பொருள்-சுபாவத்தி லமைந்துள்ள சிருட்டிப் பொருள்கள். பெயற்கார்-மழை பெய்தற் கமைந்த மேகம்; நீருண்ட மேகம் என்றபடி. குழீஇ-கூடி. உள்ளம்-மனம். செறு-வயல். உறுவிதை-முளைத்தற்குப் பொருந்திய வித்து. தள்ளரும் பயிர்-நீங்குதல் இல்லாத பயிர்; அருமை இன்மை மேற்று. கவி-செய்யுள். கவின்-அழகிய. தொடர் நிலைப் படூஉ-சொற்றொடர்நிலை. பொருட்டொடர் நிலை யென்னும் பாகுபாடு பொருந்தி. படூஉ-பட்டு; 'செய்யூ' என்னும் வாய்ப்பாட்டு இறந்தகால வினையெச்சம். கதிர்க்குலை யீன்று-கதிர்க் கொத்துக்களைப் பெற்று. முதிர்ச்சி-ஈண்டு அறிவின் முதிர்ச்சி. சால்-அமைந்த. புலவர்-அறிவுடையார். முற்களம்-

முதன்மை வாய்ந்த களம். 'புலவர் முற்களம்' என்றது, நூலரங் கேற்றுதற் கமைந்த புலவர் அவைக்களத்தை. சென்று-அடைந்து. அவண்- அவ்விடத்து, சொல் இனிது ஆய்ந்தபின்-நெல்லைத் தூற்றி நன்றாக ஆய்ந்து பதர் முதலிய குற்றம் போக்கியபின்; சொற்பொரு ளமைதியினை நன்காராய்ச்சி செய்தபின். சொல்-நெல், சொல் (சிலேடை). தொகுத்து-ஒரு சேரக்கூட்டி. உய்த்திட்ட-களத்தினின்றும் புறப்பட விட்ட, உலகத்திற் பரவுமாறு செலுத்தப்பட்ட. நல் இல்லம்-நல்ல வீடு. என்போலியர்க்கு-என்னைப் போன்றவர்கட்கு.

இயற்கைப் பொருட்காட்சியாகிய நீருண்ட கார்மேகம் பெய்தலும் கற்றோர்தம் மனமாகிய வயலில் கருத்தாகிய விதை முளைத்துத் தழைத்துக் கதிர்க்குலை விட்டுத் தொடர் நிலைப்பட்டு அறிவான் அமைந்த புலவ ரவையாம் களத்தையடைந்து நன்காராயப்பட்டபின் விளைந்த நற்பொரு ளாகிய தானியக்குவை சேர்ந்த நல்ல களஞ்சிய வீடாக நூலினை உருவகித்த அழகு உய்த்துணரற்பாலது. முற்றுருவகவணி.

cf. "Books are storehouses of knowledge."

மாணவர்-மாணாக்கர். மனக்குடி-மனமாகிய குடி. பேணு-விரும்பும். புத்தகம்-புஸ்தகம், புதிய வீடு. பாவல வண்டர்-கவிஞராகிய வண்டுகள். படி-தேனை யுண்ணப் பொருந்தும். தேமலர்-தேனையுடைய மலர். ஆவலின்-அன்புடன். ஆடுநர்க்கு-விளையாடுபவர்க்கு. அன்புறு- அன்பு மிக்க. பொழில்-சோலை. கனிவு-கருணை, அருள். காரண குரு-ஞானதேசிகன். பனுவல்-நூல். பனுவலென்னப் பகரும் அஃது புத்தகமும், தேமலரும், பொழிலும், குருவும் அன்றோ எனக் கூட்டுக.)

க. குருவன்-ஆசாரியன். ஞானத்திருவன்-ஞானச் செல்வ முடையவன். மாந்தர்-மனிதர். தருக்கு-அகங்காரம், ஆணவ மலம். தபுக்கும்-கெடுக்கும், அழிக்கும். உருக்கிளர் தேவன்-உருவத்தோடு விளங்கும் தேவன். மருள்வழி-மயக்கம் பொருந்திய அஞ்ஞான வழி. புகாது-செல்லவொட்டாது. தெருள்வழி-ஞானமார்க்கம். பேர் அருள்மொழி-பெரிய கருணை யோடு கூடிய உபதேச மொழிகளைக் கூறும். அண்ணல்-பெரியோன், தலைவன். ஆருயிர்த்துணை-கிடைத்தற்கரிய உயிர் ஈடேறுதற் பொருட்டுத் துணையாய் நிற்பவன். உளம்-மனம். உணர் ஒளிவிளக்கம்-அறிவாகிய

## கூ. குரு

குருவனை; ஞானத் திருவனை; மாந்தர்
தருக்கினைத் தபுக்கு முருக்கிளர் தேவனை;
மருள்வழி புகாது தெருள்வழி காட்டுபே
ரருண்மொழி யண்ணலை; ஆருயிர்த் துணையை;
உளமெனு மிருட்டறைக் கொளியுணர் விளக்கம்
ஏற்றுபு மடவிரு ளிரியத் துமிப்பான்
தோற்றுமென் றுழை; தூக்குணக் குன்றை;
மன்றமெய்ப் பொருளினை வாய்மலர்ந் தருள்பெனு
மன்ற வாணனை; மாசறு மணியை;
நினமே தகவெலாம் நிகழ்த்த வல்லெனோ?
நின்றாட் புணைகலை நீத்தங் கடக்கிய
ஒன்றா தம்ம வுயங்குத லெவனோ?
பொழிந்துதேன் கமழ்பூப் பொருந்தா
திழிந்தவை விழைந்துழ லீயென மாதோ.

---

ஒளியுள்ள விளக்கு. ஏற்றுபு-ஏற்றி. மடவிருள்-அறியாமை யாகிய இருள். இரிய-ஓட, கெட, நீங்க. துமிப்பான்-அழிக்கும் பொருட்டு. தோற்றும்-உதயமாகும். என்றூழ்-சூரியன் தூக்குணக் குன்று-தூய குணமாகிய குன்று.

cf. ''குணமென்னுங் குன்றேறி நின்றார்.'' ***(திருக்குறள் 29.)***
மன்ற-தெளிவாக.

''மன்ற வென்கிளவி தேற்றஞ் செய்யும்.''
***(தொல்.சொல். 267.)***

மெய்ப் பொருள்-உண்மைப் பொருள். வாய் மலர்ந் தருள்பு-வாய் மலர்ந்தருளி. என்உள் மன்ற வாணன்-எனது மன மாகிய சபையில் வாழ்பவன்; மன்ற வாணன்-சபாபதி (நடராஜ மூர்த்தி). ஈண்டு ஆசிரியர் தமது தமிழாசானாகிய ஸ்ரீ சபாபதி முதலியார் அவர்களின் பெயர் தொனிக்கக் கூறிய நயம் உய்த்துணரற்பாலது. அருள்பு என்னும் எச்சம் வாழ்நன் என்பதன் முதனிலை வினையொடு முடிந்தது; அருள்பு வாழ்நன் எனக் கூட்டுக. வாணன்-வாழ்நன் என்பதன் மரூஉ முடிபு. மாசு அறு மணி-குற்றம் நீங்கிய மணி. நின மேதகவு-உன்னுடைய மேன்மை. எல்லாம்-முழுவதும். நிகழ்த்த வல்லெனோ-பேச வல்லமை யுடையேனோ. தாட்புணை-தாளாகிய தெப்பம். தாள்-அடி, பாதம். கலை நீத்தம்-கலைகளாகிய கடல். நீத்தம்-நீர் வெள்ளம். கடக்கிய-கடத்

# IX. THE MASTER

TEACHER of truths divine, who dost restrain
Men from transgressions insolent and vain!
I own thee God in human form display'd,
Lord of the word of grace, by whose sure aid,
I all delusions shun, and tread truth's way.
Rare Helper of my soul, Who shedd'st a lucid ray,
Planting in darken'd chamber of my soul
Thy glowing lamp; While gloomy shadows roll
Away. Thee Day-spring from on high I see,
Before Whose face the mists of folly flee.
Thou Hill of purity, rising o'er earth!
Pure Gem! I cannot utter all Thy worth.
Why haste we not the only bark to gain
That bears men over wisdom's boundless main?
Thus sweet flowers bloom, and yet the carrion-fly
Shun these,-on ordure lights. Ah, tell me why!

**St. John xiii. 13-17.**

---

*தற்கு. ஒன்றாது-சேராது. அம்ம-இரங்குதற் பொருட்டு. உயங்குதல்-வாடுதல். மயங்குதல். எவனோ-ஏனோ. கலை நீத்தம் கடக்கிய நின் தாட்புணை யொன்றாது உயங்குத லெவன் எனக் கூட்டுக.*

cf. ''அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீத்த லரிது.'' ***(திருக்குறள்-8)***

*தேன் 'பொழிந்து கமழ்பூ என மாறுக. பூப் பொருந்தாது-பூவைச் சேராமல். இழிந்தவை-தாழ்ந்தவை. ஈண்டு இடக்கர் அடக்கியது. விழைந்து-விரும்பி. உழல்-மயங்கித் திரியும். பூப் பொருந்தாது இழிந்தவை விழைந்து உழல் ஈயென உயங்குதலெவனோ என முடிக்க.*

cf. ''புறங்கறை யொழுகுசெம் புண்ணி லீயென
வறுங்கதை புல்லியர் கொள்வர் மாமல
ருறுங்களி வண்டினல் லமனொண் காதையைப்
பிறந்துள பயன்பெறு பெரியர் கொள்வரே.''
***(பிரபுலிங்கலீலை - துதி. 15)***

*மாது, ஓ அசைகள். குறிப்பு முற்றின் ஈற்றில் நின்ற 'ஐ' முன்னிலை யுணர்த்தின.*

*10 வது வரி 'நின மேதகவு.... வல்லெனோ' என்ற அடிக்குப் பதிலாக,*

## க0. மாணவன்

தந்தைக் குதவுந் தனிமகன் போல
விந்தைக் களத்தின் மேதக வெய்தியும்,
தலைவனை விழையுந் தலைமகள் புரையக்
கலைவலா ளனைக் கண்டுகளி சிறந்தும்,
உருவைவிட் டகலா வொண்ணிழை லொப்பக்
குருவை யடுத்துக் குற்றேவல் செய்தும்,
பரமனை வழிபடுஉம் பத்தன் மானக்
குரவனை மனத்திற் கொண்டு துதித்தும்,
கார்பெயச் செழிக்குங் கழனி கடுப்ப
ஏர்பெறு மவன்சொலை யினிதுள மடுத்தும்,
அரசற் கிறையிடு மவன்குடி யியையப்
பரசுபு நற்பதம் பைம்பொன் கொடுத்தும்,
மன்னுந னேநன் மாணவன்
என்ன வகுத்தன ரியல்புணர்ந் தோரே.

---

''ஆதலெய்த் திருந்தென வோதலைத் தவிர்கலென்,''

*என்ற அடி பொருந்தியது முதற் பதிப்புப் பாடம். இப்பாடத் திற்கு; ஆதல்-நீ அங்கனமாதலை. எய்த்து இருந்தென-அறிந்திருந்ததால். ஓதலை-உன்னைப் புகழந்தோதுதலை. தவிர்கலென்-நீங்ககில்லேன், எனப் பொருள் கொள்க. உருவகத்தை யங்கமாகக் கொண்ட பலபடப்புனைவின் நயம் நோக்கற்பாலது. 'ஈயென' என்றது உவமை.*

*க0. மாணவன்-மாணாக்கன். தனிமகன்-ஒப்பற்றமகன். விந்தைக்களம்-வித்தியாசாலை; விந்தை-வித்தை என்பதன் திரிபு. மேதகவு-மேம்பாடு;*

''தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்''
''மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.''

*(திருக்குறள் 67, 70) என்ற குறட்பாக்கள் ஈண்டு நோக்கற்பாலன.)*

## X. THE DISCIPLE

Like only SON, the father's help and joy;
To toil in learning's fields is his employ;-
As BRIDE delights to know the bridegroom near,
So is he glad his teacher's voice to hear;-
As faithful SHADOW dogs the traveller's feet,
He still attends to render service meet;-
As SAINT adores the Majesty Divine.
His grateful heart is the Preceptor's shrine;-
His soul drinks in his teacher's every word,-
As fruitful FIELD the rain kind heavens afford;-
As tribute loyal SUBJECTS pay their kings,
To tutor's feet due gifts of gold he brings.
This is the image of DISCIPLE shown,
By those to whom the truth itself is known.

**St. John. xv. 8.**

---

*விழையும்-விரும்பும். புரைய-போல. கலை வல் ஆசான்-கலைகளில் வல்ல ஆசிரியன். களிசிறந்தும்-களிப்பு மிக்கும். தலைவனை.... சிறந்தும்.* cf. *''குற்றமிலாத் தாதைமக வென்றோர்தங் கோண்மறுத்துக், கற்றகலைக் காதலனுங் காதலியு மாகுநிலை, மற்றறிந்த வாசானு மாணவனு மாமிவர்கட் குற்ற வியைபு.'' (பாவலர் விருந்து-கையறு.* II-4).

*உரு-உருவம், வடிவம், தேகம். அகலா-நீங்காத. விழபடூஉம்-வணங்கும். பத்தன்-பக்தன். மான-போல. குரவன்-ஆசிரியன். கார்பெய-மழை பெய்ய. கழனி-வயல். கடுப்ப-போல. ஏர்-அழகு. சொலை-சொல்லை. இனிது. உளம் மடுத்தும்-செவ்வையாக மனத்திற் பொருந்தச் செவிவாயாக உண்டும். இறையிடும்-கப்பந்தரும். இயைய-போல. பரசுபு-புகழ்ந்து. நற்பதம் பரசுபு-நல்ல பாதத்தைப் புகழ்ந்து வணங்கி. பைம் பொன்-ஒளிமிக்க பொன். மன்னுநன்-தன்நிலையிற் றவறாது பொருந்துமவன். வகுத்தனர்-வகைபெறக் கூறினர். இயல்பு உணர்ந்தோர்-முறைமை யுணர்ந்த அறிவாளர்கள். இயல்பு-முறைமை.*

cf. ''இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவன் என்பான்''

**(திருக்குறள். 47)**

## கக. மனன்

வாழிய மனனே! மக்கடம் மாட்சியே!
ஐம்பொறிப் பரியிவர்ந் திம்பர் நிலத்தின்முன்
உலக மனைத்தினு முலவித் திரிதியால்;
புதியன வற்றுட் கதுமெனப் புகுதியால்;
இனியவிவ் வுலகி னிருபபன வாய்வுழி
மனிதனிற் சிறந்த மாண்பொரு ளில்லை, அம்
மனிதன் றன்னுள் வயங்கு மெவற்றினும்
மனனிற் சிறந்த மாண்பொரு ளுமிலை
என்று கலைஞர்க ணன்றியம் பினரால்!
பயனின் றியங்கலை,-வியன்மின் விரைவினிற்
சென்று சேர்தியால்; துன்றிய துணையே!'
நின்ன மறைவழி நிகழ்த்த லெங்ஙனம்?
என்னைநின் விரைவு! என்னைநின்
ஆற்றல்! என்னாற் சாற்ற லரிதரோ.

---

*கக. மனன்-மனம் (போலி) வாழிய-வாழ்வாயாக. மக்கடம் மாட்சி-மக்களுக்குள்ள பெருமை. ஐம்பொறிப்பரி-பஞ்சேந்திரியங் களாகிய குதிரை. இவர்ந்து-ஏறி. இம்பர் நிலம்-இவ்விடமாகிய நிலம். நிலத்தின்முன்-நில முண்டாவதற்குமுன் தோன்றிய. உலகம் அனைத்தினும்-எல்லா வுலகத்தின் கண்ணும். திரிதி-திரிவாய்.*

"ஐம்பொறி யென்னும் பைம்பரி களினிவர்ந்
துலக பாலரி னுலவித் திரிதியால்,"

*என்பது முதற் பதிப்புப் பாடம். (உலகபாலர்-அசர்.) இனிய இவ்வுலகு-இன்பத்திற்டமான இவ்வுலகம். இருப்பன-இருக்கும் பொருள்கள். ஆய்வுழி-ஆராய்ந்து பார்க்குமிடத்து. மாண் பொருள்-மாட்சிமையுடைய பொருள். வயங்கும்-விளங்கும். கலைஞர்கலைகளில் வல்ல அறிஞர். பயன் இன்று இயங்கலை-ஒரு பயனுமில்லாமல் சஞ்சரியாய்.*

# XI. MIND

Hail, Reason's gift, glory of human-kind!
The senses five thy coursers, thro' the span
Of all the worlds, before this earth began
Thou rushest,-thy swift chariot none can bind,-
Exploring wonders new. Nor, do we find
When every open'd realm we closely scan,
Aught here more excellently great than man;
And naught in man more great than reasoning MIND.
Thus have the sages utter'd forth thy praise!
No aimless motion thine,- with lightening speed,
Thou hastest, readiest help in hour of need.
How can I sing of all thy hidden ways?
Swiftness and magic might to thee belong,
Beyond the reach of my poor feeble song!

---

*வியன் மின் விரைவினில்-மின்னலினது பெரிய வேகத்தோடு. சென்று சேர்தி-நினைத்த இடங்கட்குச் சென்று சேர்வாய். ஆல்-அசை.*

"குன்றுறு குரங்கெனக் கூறுவ ரறியார்
நினைத்த விடனெலா நினைத்தவந் நொடியினே
சென்று சேர்தியால் துன்றிய துணையே!"
என்பது முதற் பதிப்புப் பாடம்.

*(துன்றிய-நெருங்கிய. நின்ன மறைவழி-உன்னுடைய இரகசியமான வழிகளை. எங்ஙனம் நிகழ்த்தல்-எவ்விதம் கூறுவேன். என்னை-வியப்புப் பொருளில் வந்த வினா. விரைவு-வேகம். ஆற்றல்-சக்தி. சாற்றல் அரிது-கூறுதல் முடியாது. அரோ-அசை.)*

## கஉ. உடல்

அருட்பயிர் தழைக்கு மணிபெறு நன்னிலம்;
தெருட்பயன் பெய்யுஞ் செவ்விய களஞ்சியம்;
அனுபவ ஞான வருங்கனி நிலையம்;
தனுவறி யார்மடந் தனையெய் வதற்கு; மற்
றுயிரெனு மோவிய மொளிர்தர வரைகிழி,-
செயிர்தீ ருடலே! செவ்விதிற் பெற்ற
நல்லற மணியே! நாடொறும் நின்னை
இல்லறச் சாணையி லினிது பிடித்து
மாசறுப் பேன்; சிலர் மாய்வர் துறந்தே.
இயற்கை யொழுங்கி னயக்கோண் முரணித்
துறவே சிறந்ததென் றறவே மதிமருண்
டையகோ மிகவு மரும்பெறல் யாக்கையை
நொய்யதா நினைத்துள நொந்து
வறிதே கெடுத்தியான் வெறியாட் டயர்வலோ?

---

*கஉ. உடல்-தேகம். அருட்பயிர்-கருணையாகிய பயிர். தழைக்கும்-செழிப்புற்று வளரும். அணி பெறும்-அழகு பெருநதிய, நன்னிலம்-நல்ல வளமுள்ள நிலம். தெருட் பயன்-அறிவாகிய விளைந்த பொருள். பெய்யும்-இட்டு வைக்கும். செவ்விய-செம்மை வாய்ந்த. களஞ்சியம்-சேர். அநுபவ ஞானம்-அனுவத்தால் உண்டாகும் அறிவு. ஞான அருங்கனி-ஞானமாகிய பெறுதற்கரிய பழம். அறியார் மடந்தனை எய்துவதற்குத் தனு-அறிவில்லாதாருடைய மடமையை நீக்குவதற்குக் கருவியாகிய வில். உடலை வில்லாகவும் அறிவை அம்பாகவும் மடமையை எய்யப்படும் பொருளாகவும் உருவகித்தனர். ஏகதேச உருவகம்.*

*மற்று-அசை. உயிர்-ஜீவன். ஓவியம்-சித்திரம். ஒளிர்தர-விளங்க. வரைகிழி-எழுதப்பெற்ற துணி. செயிர்தீர்-குற்றம்*

## XII. THE BODY

The goodly GLEBE where fruits of grace are grown;
A GRANARY where clear-soul'd sages blest
Store fruits of wisdom by experience known;
The BOW whose arrow pierces folly's breast;

Of soul's bright image faithful OUTLINE shown.-
All-these the BODY is, in purity possess'd.
GEM of all goodly grace! Daily by me
On "household virtues' whetstone shalt thou be

Sharpen'd and cleans'd. But some, "Ascetic llife'
Would vaunt, with nature's kindly laws at strife.
Alas! How far they stray who idly deem
This precious earthly frame mere jester's theme.

Shall I thus madly spurn and waste my hours,
Nor use in works of Grace thy heaven-given powers?

**See Kurral, Chapter viii.**

---

*நீங்கின. நல்அற மாமணி-நல்ல அறமாகிய வொளி வீசும் பெருமை வாய்ந்த இரத்தினம். இல்லறச் சாணையில்-இல்லறமாகிய சாணைக் கல்லில். இனிது பிடித்து-ஒழுங்காகக் கடைந்து. மாசு அறுப்பேன்-களங்கத்தைப் போக்குவேன். சிலர் துறந்து மாய்வர்-சிலர் துறவு மேற்கொண்டு பயனின்றிக் கழிவர்.*

*இயற்கை யொழுங்குஸ்வஸ்பாவ தருமம். நயக்கோள்-நன்மையைக் கொள்ளுதல். முரணி-மாறுபட்டு. இயற்கை யொழுங்கின் நன்மையை மேற்கொள்ளுதலின் கண் மாறுபட்டு ஸ்வபாவ தர்ம விரோதமாய். துறவு-துறவறம். அறவே-முற்றிலும். மதி மருண்டு-மனமயங்கி. ஐயகோ-இரக்கக் குறிப்பு. மிகவும்-பெரிதும். பெறல் அரும் யாக்கை-பெறுதற்கு அரிதான தேகம். நொய்யதா-அற்பமானதாக. நினைத்து-கருதி. உளம் நொந்து-மனம் வருந்தி. வறிதே கெடுத்து-ஒரு பயனுமின்றி யழித்து. வெறியாட்டு அயர்வலோ-வெறிக்கூத்தாட்ட மாடுவேனோ.*

*'அநுபவ ஞான வையக்கடிஞை' (ஐயக்கடிஞை-பிக்ஷா பாத்திரம்). 'செயிர் தீருடலஞ் சீர்த்தவக் கருவி' (சிறப்பினை யுடைய தவத்தைச் செய்தற்கு வேண்டிய கருவி), 'மாசினைப் பெரிதும் போக்கி, யெடுத்துறு பயன்கொளவெண்ணுகிலாது, துறவே சிறந்ததென்று' என்பன முதற் பதிப்பிற் கொண்ட பாடபேதங்களாம்.*

## கங. மனிதன்

இயற்கை யொழுங்கி னினிது காண்புறூஉம்
முயற்சிசால் பொருற்களுண் முதற்பொரு ளாகிய
மாண்டகு மனித! இக் காண்டகு முலகிற்
புகைச்சா காடுகொண் டுகைத்தெவ ணெவணுஞ்
சென்று நிலத்தினை வென்றனை! அதாஅன்று,
கடப்பருங் கடற்புகைக் கலன்கொடு கடந்து
தடுப்பவ ரின்றித் தண்புனல் வென்றனை!
பன்னருந் தீயு மின்னலம் நின்வயம்!
காற்பொறி பற்றி மேற்பரப் பெழுந்துநீ
ஐம்பெரும் பூதமும் மொய்ம்பினில் வென்றனை!
இன்னுமொன் றுளதது நின்னை நீ வேறலே;
தனத்தா னுயர்த்திலன் றனக்கு மேலெனின்
எனைத்துணை யோஒ வெளியன்!
இயம்பிய மனிதனிந் நயங்கொண்ஞா லத்தே.

---

*கங. இயற்கை யொழுங்கு-ஒழுங்கினையுடைய இயற்கை யமைப்பு. இனிது-செவ்விதாக. காண்புறூஉம்-காணப்படும். சால்னஅமைந்த. மாண்தகும்-மாட்சிமை பொருந்திய. காண்தரும்-காணத்தக்க. அழகிய.*

cf. ''கனவினாற் கண்டேன் றோழி காண்டகக்
கனவின் வந்த கானலஞ் சேர்ப்பன்.''

**(கலித்தொகை. 128)**

*புகைச் சாகாடு-புகைவண்டி; ஈண்டு நீராவியால் இயங்கும் வண்டியினைக் குறித்தது. உகைத்து-செலுத்தி. எவண் எவணும்-எவ்வெவ் விடங்களினும். அதாஅன்று-அதுவுமன்றி, கடப்பரும் கடல்-கடத்தற்கு அரிய கடலை. புகைக்கலன் கொண்டு-நீராவிக் கப்பல்களைக் கொண்டு. தண்புனல்-குளிர்ந்த நீர். பன்னரும்-சொல்லுதற்கரிய. தீ-நெருப்பு. மின்னல்-மின்சாரம். நின்வயம்-உன் வசமானவை. காற்பொறி-காற்றடைத்த யந்திரம். காற்றாலியங்கும் யந்திரம், காற்றிலியங்கும் யந்திரம். பற்றி-ஆதாரமா*

# XIII. MAN

WHEN all that live and labour here we scan,
Through nature's realms the first in worth is MAN!
In car by watery-vapour drawn he glides;
O'er every realm of earth a conqueror rides,
The ocean paths his mighty ships transcend,
While the same viewless vapours impulse lend;
Fierce fire and earth and water own his sway;
Swift lightning-fires his messages convey;
The ether bears him thro' its trackless ways:
Thus every element his rule obeys.
Yet, MAN, thou hast one victory still to gain,
And mastery o'er thy struggling Self obtain!
"UNLESS HIMSELF ABOVE HIMSELF HE CAN
UPLIFT HIMSELF, -HOW POOR A THING IS MAN!"

---

*கச் கொண்டு, மேற்பரப்பு - ஆகாயப்பரப்பு. ஐம்பெரும பூதம் - மண், நீர், அனல், வாயு, ஆகாயம் என்பன.*

*மொய்ம்பினில் - வலிமையால். இன்னும் ஒன்று உளது அது நின்னை நீ வேறலே எனப்பிரிக்க. வேறல் - வெல்லுதல் (முதனீண்ட தொழிற்பெயர்). தனக்குமேல் தனைத்தான் உயர்த்திலன் எனின், என மாற்றுக. எனைத்துணையோ - எவ்வளவோ. எளியன் தாழ்ந்தவன். இயம்பிய - மேற்கூறப்பட்ட. இந்நயங்கொள் ஞாலம் - இந்த நன்மை பொருந்திய பூமி.*

''பன்னருந் தீயினை நின்வயப் படுத்தனை!
மின்னினைப் பிடித்து வேலையாள் குதியால்!
காற்பொறி பற்றி மேற்பரப் பெழீஇ
ஒதரு விசும்பி னூடுசென் றைம்பெரும்
பூத மாதிய பொருள்களை வென்றோய்!
வாழிய! மன்னென வயங்குதி
ஊழிநீ டூழிநீ யூழையும் வென்றென,''

*என்பது முதற் பதிப்புப் பாடம்.*

''தனைத்தா னுயர்த்திலன் ...... வெளியன்'': இஃது,

"Unless Above Himslef He can
Erect Himself - How Poor A thing is Man."
(Samuel Daniel "To the Countess of Cumberland.' ST.12.)

*என்ற அடிகளின் மொழிபெயர்ப்பு.*

## கச. மாதர்

அறந்தரு மிறைவ னருட்படைப் பெவற்றுளுஞ்
சிறந்து மிளிர்குவீர்! திகழொளி மேனியீர்!
ஆடவ ரிடும்பைக் கருமருந் தாகி
அவருளம் வருந்துழி யாற்றும்வான் றுணையாய்
அன்பு மழகும் நன்குற மகளிர்காள்!
கடவுட் டீயின் கதிரெனு மகளிர்காள்!
தோமில் விருப்பெனுந் தூயதீ வளர்க்குங்
காதன்மேல் லரும்பெனக் காணகை மாதரீர்!
பேணிவாழ் குநர்க்குப் பெரும்பே ருகுவீர்!
நும்மை யடிமையா நோக்கித் தெழிப்பவர்
போலிக ணும்மையும் போலியா மதித்தனர்.
ஒத்த வுரிமைகள சித்தா மகிழ்தர
மைந்தரோ டெய்தினிர் வாழிய!
பைந்தொடி மீர்! யான் பாடுவல் பலாண்டே.

---

*கசி. அறந்தரும் இறைவன் - அறத்தினை உலகினர்க்கு அருளின கடவுள். இறைவன் - எல்லாப் பொருளிலுந் தங்குபவன், ஸர்வாந்தர்யாமி (இறுத்தல் - தங்குதல்). அருட்படைப்பு - அருளினாற் செய்யும் படைப்பு. ஆன்மாக்கள் ஈடேறுதற் பொருட்டுப் படைப்பு நிகழ்தலின் 'அருட்படைப்பு' என்றனர்.*

*மிளிர்குவீர் - விளங்குவீர். அடவர் - புருடர். இடும்பை - துன்பம். அருமருந்து - பெறுதற்கு அருமையான மருந்து. உளம் வருந்துழி - மனம் வருந்தும் அமயத்து. ஆற்றும் - வருத்த நீக்கி ஆறுதலை யளிக்கும். வான் துணை - சிறந்த உதவி.*

*நன்குற - நன்ருக. ஒளிர்வீர் - விளங்குவீர். கடவுட்டீ - தெய்வத்தன்மை வாய்ந்த அக்கினி. கதிர் - கிரணம். தோம் இல் விருப்பம் - குற்றமற்ற ஆசை. தூய தீ - பரிசுத்தமாகிய நெருப்பு. காதல் மெல் அரும்பு - காதலினது மெல்லிய அரும்பு. காண் நகை - தோற்றும் புன்னகை யினையுடைய. பேணி - விரும்பி. வாழ்குநர்*

## XIV. WOMANHOOD

OF all the aids to virtue God has given
Resplendent most and bright beyond compare,
Art thou, O WOMAN, with thine aspect fair;
Soothing man's troubled soul, a breath of heaven!
WOMAN! in whom all love and beauty shine;
A radiance flashing from celestial fire;
Affection's tender bud-like smile is thine.
Kindling the holy flame of chaste desire.
To those who cherish thee in nuptial love,
Thou art pure angel from the realms above.
But some enslave thee, chide with cruel voice!
Worthless themselves, they deem thee worthless king,
O happy who with mutual heart rejoice!
Your blessedness, ye wedded souls, I sing.

---

*வாழ்பவர். பேறு - பாக்கியம். நோக்கி - கருதி. தெழிப்பவர் - ஆரவாரித்து அதட்டுபவர். போலிகள் - உள்ளீடில்லாத மக்கட் பேடிகள். ஒத்த உரிமைகள் - ஆடவரோ டொத்த ஸ்வதந் திரங்களை. சித்தம் மகிழ்தர - மனமகிழ். மைந்தரோடு - புருடர் களோடு. எய்தினிர் - எய்தினிராய், அடைந்து (முற்றெச்சம்). வாழிய - வாழ்வீராக. பைந்தொடிமீர் - பசிய பொன்னா னியன்ற விளையலணிந்த மாதர்களே. பல்லாண்டு - பல ஆண்டுகள் வாழ்வீராக என்று கூறும் வாழ்த்துப் பாடல். பாடுவேல் - பாடுவேன்.*

''சிறந்து மிளிர்குவீர்! திகழொளி மேனியீர்!
ஆடவர் கொடுமைக் கருமருந் தனையீர்!
நேடியுங் கிடையா நின்மலச் செல்விமீர்!
அன்பு மழகு மின்பமும் மென்மையும்
அளவினிற் கலந்துரு வாகிய மகளிர்காள்!
தளவரும் பேய்க்குந் தண்ணகை மாதரீர்!
காண வினிக்குறூஉங் காமரு கரும்பனீர்!
பேணி வாழ்குநர்க்குப் பெரும்பே றுகுவீர்!
நும்மை யடிமை நுகத்துட் படுக்குஞ்
செம்மையிஃ றீயர் செல்க கடிதரோ,''
என்பது முதற்பதிப்புப் பாடம்.

## கரு. அழகு

அழகி னியலினை யநுபவித் தறியார்
பழகினர் போன்று பலபடப் பகர்ந்தனர்;
வண்ணமே வனப்பென வகுத்தனர்; அதான்று;
வடிவே யெழிலென வரைந்தனர்; அதான்று; நற்
குணனே கவினெனக் கூறினர், அதான்று;
பயனுடைப் பண்பெனப் பரிந்தனர்; அதான்று; மற்
றின்னும் பலவா யியம்பினர்; அவையல.
என்னே! அழகி னியலம் மம்ம!!
எல்லா நலனு மினிமையிற் கலந்து
கண்டவர் மனத்தைக் கணத்திற் பிணித்துத்
தன்வயப் படுக்குந் தன்மைத் தன்றே?
அறத்தி னீங்கிய வழகு முண்டுகொல்?
மறத்தொடு படுமேன் மாண்பன்
றின்பஞ் செய்யு மியல்பா தலினே.

---

*கரு. இயல் - தன்மை. பலபட - பலவிதமாக. பகர்ந்தனர் - கூறினர். வண்ணம் -நிறம். வனப்பு - அழகு. அதான்று - அஃது இல்லை. வடிவு - உருவம். எழில் - அழகு. வரைந்தனர் - வரையறுத்தனர்; எழுதினர் எனினுமாம். கவின் - அழகு. பயன் உடைப் பண்பு - நன்மையைச் செய்யும் குணம். பரிந்தனர் - அன்புற்றுக் கூறினர். அம்மம்ம - வியப்புமிகுதி யுணர்த்திற்று. நலன் - நன்மை. கணம் - க்ஷணம், ஒரு மிகச்சிறிய காலவளவு. பிணித்து -கட்டி. தன்மைத்து - தன்மையுடையது.*

*''எல்லா நலனு .... தன்றே'' ஈண்டுத் 'திருவென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' என்னும் பேராசிரியர் கூற்று நோக்கற்பாலது. அறத்தொடு பொருந்திய அழகே*

## XV. BEAUTY (TRUE LOVELINESS)

They rave of BEAUTY who taste not its grace,
See its sole glory in the skin's bright hue,
Or find it only in the forms we view,
As in fair flower, or maiden's lovely face.
Goodness is BEAUTY some declare; some place
Its dwelling, where each aspect new
Is nicely fitted to its office due;
In many a common form men BEAUTY trace.
And manifold, its varying charms I deem
In winsome spell that steals the heart,
Where sweetness tempers goodness, there I seem,
To find the power that BEAUTY can impart.
BEAUTY from virtue may not sunder'd be:
Whate'er is evil, that is FOUL to me!

---

*அழகெனப்படுவது. மறம் - பாவம். படுமேல் பொருந்துமாயின். மாண்பு -பெருமை.*

*அழகிற்கு இன்பஞ் செய்யும் இயல்பு உண்டாதலின் அஃது அறத்தொடு பொருந்தியே நிற்கும்; மறத்தொடு பொருந்துமாயின் அஃது அழகன்று என்றவாறு.*

cf. "அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில." (திருக்குறள். 39)
"கண்டவர் மனத்தைக் கணத்திற் பிணித்திட்
டெண்டகு மாசை யெளிதிற் கொளுத்துபு
தன்வயப் படுக்குந் தன்மையஃ தன்றோ?
எல்லா நலனு மினிமையிற் கலந்த
இயல்புமஃ தன்றோ? இன்பஞ்
செயல்வல செவ்வியு மஃதே யன்றோ?"

என்பது முதற்பதிப்பு பாடம்.

(கொளுத்துபு -கொளுத்தி, உண்டாக்கி. செயல்வல -செய்ய வல்ல, செவ்வி - நற்பண்பு)

## கசு. வரைவு

இன்ப வூற்றே! துன்பப் பகையே!
இல்லற வாழ்க்கையி னல்லுயி ராவோய்!
தலைவனுந் தலைவியும் நலமுறு காதலான்
ஒன்று கூடுத னின்றனா லன்றோ?
காதலின் குறியாங் காமரு குழவிகள்
காண்பர். நாடெலாங் காக்குங் காவலோய்!
வழியிற் காக்குறும் வாயிலோய் நீயே.
அலாநெறி யுழலுநர் நிலாதிவ ணேட்டுவை.
பாணரு மகளிரும் பாடல்கள் பாடக்
காணரு மின்பங் களிப்பினி லளிப்பை;
நினைத்தேவ தூதனா நினைப்பல். மக்களுக்
கித்துணை யின்ப மெய்திற் றெனாமகிழ்ந்
துளத்துறு பத்தியி னுவப்பல்; மற்
றெய்யா மாக்கணின் னின்றளைப் படாரே.

---

*கசு. வரைவு - மனம். இன்பவூற்று - இன்பமாகிய நீர் - ஊறும் ஊற்று. துன்பப்பகை - துன்பத்திற்குப் பகை. நலம் உறு நன்மை பொருந்திய. காதல் - அன்பு. ஒன்றுகூடுதல் - ஒருங்கு சேர்தல். நின்றனால் - உன்னால். குறி - அறிகுறி. காமரு - அழகிய. காமம் மரு - (விருப்பம் பொருந்திய) என்பதன் விகாரமென்பர். குழவி - குழந்தை. காண்பர் - உண்டாக்குவர். நாடெலாங் காக்கும் காவலோய் - மனிதரை நல்வழியினின்று விலகாமற் காப்பது இது வாதலின் இங்ஙனம் கூறினர். வழியில் - உலக வாழ்க்கையாகிய ஆன்மா செல்லும் வழியில். வாயிலோன் - வாயில் காப்போன். அலாநெறி - நன்மையில்லாத வழி. தீநெறி. உழலுநர் - உழல்பவர். நிலாது - நில்லாமல், ஈண்டுப் பொருந்தாமல். இவண் -இங்கு, இவ்வுலகத்தில்.*

*பாணர் - பாடகர்கள், வாத்தியக்காரர்கள். காணரும் - பார்த்தற்கரிய. தேவ தூதன் - கடவுளின் தூதன்; கடவுளின் - ஆணையால் அவர்தங் கருத்தினை நமக்கு வெளிப்படக் கூறும்படி வரும் தூதன். நினைப்பல் -நினைப்பேன். இத்துணை -இவ்வளவு, இத்தகைய. எய்திற்று - உண்டாயது. எனா - என்று. உளத்துஉறு - மனத்திலுண்டாகும். பத்தியின் உவப்பல் - பக்தியினாற் களிப்பேன். மற்று வினைமாற்றுப் பொருளில் வந்தது. எய்யாமாக்கள் - அறிவிலிகள்;*

# XVI. WEDLOCK

Fountain of gladness, foe of grief's annoy,
The very soul of pleasant household joy.
By thee do plighted lovers join their hands,
In blameless love, in sacred unity;
And darling offspring, love's sweet pledges, see.
WEDLOCK, thou guardian blest of all the lands!
THou art the warder of the guarded way,
Nor sufferest misguided mortals stray.
What sober joy dost thou auspicious bring
While merry maids and minstrels carols sing!
I deem thee messenger sent down from heaven.
With reverent soul I hail thy mystery,
Rejoicing that to men such bliss is given.
Why do the foolish shun thy genial tie?

**See Kurral, Chapter V.**

---

*அறிவின்மையால் 'மாக்கள்' நின் தளைப்படார் - உனது கட்டில் அகப்படார்.*

'' இன்ப வூற்றாய்த் துன்பப் பகையாய்
இல்லற வாழ்க்கையி னல்லுயி ரேயாய்க்
காதலின் குறியாய்க் காமிரு பிற்கிளை
ஏதமின் ருக்குதற் கேதுவாம் வரைவே!
தலைவனுந் தலைவியும் நலமுறு காதலான்
இவ்வழிக் கண்ணே யியறு மென்றுதஞ்
செய்வினை வரைந்து தெய்வ மறியக்
கோடலான் வரைவெனுங் குறியீடு பெற்றனை;
மனங்கலந் தவரை மண்ணுதல் பற்றி
மணப்பெய ரெய்தினை; வாய்ப்பா ரேமமா
நிற்றலிற் கடிப்பெய ருற்றனை மெய்யே.
மெள்ளநிற் கருதினேன்; உள்ளங் களித்தேன்;
உடலுஞ் சிலிர்த்தேன்! ஓகோ!
விடலுறீஇ மெலிந்த வீணர்போ லாதே.''

இது முதற் பதிப்பின் பாடம்.

(*பிற்கிளை - பின்னாலுண்டாங்கிளை; குழந்தைகள். ஏதம் - குற்றம். ஏது - காரணம். இயறும் - செல்வோம். வரைந்து - வரை*

## கஎ. கணவன்

ஓரிலாட் கோண்முறை யுற்ற தலைவனாய்
ஏருலா மனைக்கொடி யினிது படர்தர
வாய்த்தகொள் கொம்பராய் வான்குணம் பூத்துக்
காய்த்துப் புகழ்நலங் கனிபயன் மரமாய்ப்
பணமணி தன்னைப் பரிவுடன் போற்றும்
பணியென் மனைவியைப் பாதுகாக் குநனாய்த்
தன்னில் லாளைத் தனக்கிணை யாய
தலைவியா மதிக்குந் தன்மை யாளனாய்
வயங்குந னல்லனோ நயங்கொளுங் கணவன்?
மற்றுள மார மணந்த தையலைச்
சற்றுமரு ளின்றித் தவிப்பான் புரிகுநன்
கண்ணவ னோவக் காரிகை தனக்கு?
புண்ணவ னென்றே புகல்வல்
மேதகு பொருளிய லோதுவ துணர்ந்தே.

---

*யறுத்து. கோடலான் - கொள்ளுதலால். குறியீடு - பெயர். மண்ணுதல் - கழுவுதல். மாசு நீங்குதல். வாய்ப்பார் - கிடைப்பபவர்க்கு. ஏமம் - காவல். கடி -காவல், மணம் - விடலுறீஇ - விடுதல் உற்று. போலாது - போலாகாமல்)*

*கஎ. ஓர் இலாள் கோள் முறை - ஒரே மனைவியை மணந்துகொள்ளும் முறைமை; ஏக பத்நீ வருதம். உற்ற பொருந்திய. தலைவன் - தலைமகன். ஏர் உலாம் - அழகு பொருந்திய. மனைக்கொடி - மனைவியாகிய கொடி. இனிது - செவ்வையாய். படர்தர - படர. வாய்த்த - நன்கு கிடைத்த. கொள் கொம்பர் - கொடிபடர ஆதாரமாய் நிற்கும் கொம்பு; கொள் கொம்பு - வினைத்தொகை.*

*கொம்பர் - கொம்பு (போலி). வான் குணம் பூத்து - மேலான குணமாகிய மலர் மலர்ந்து. புகழ்நலங் கனி பயன் மரம் - புகழாகிய நலம் கனியாகப் பழுக்கும் பயன்படு மரம்.*

cf. ''பயன்மா முள்ளூர்ப் பழுத்தற்றால்''

**(திருக்குறள் - *216*)**

## XVII. THE HUSBAND

TRUE HUSBAND home with one choice bride must share,
The tree round which the vine, the house-wife, clings;
That honour, praise and happy increase brings,
Doth fruit of gold and gems, in season bear.
HE guards his spouse as heaven-sent treasure rare,
Nor ranks his partner dear with meaner things,
But help-meet lov'd, from whom rich blessing springs;
Thus tends her ever with kind, courteous care.
Yes! HUSBAND call this man of gentle soul;
Not him who crushes her "neath stern control!
Such miss of wedded life the special grace,
No sunlight in their home of smiling face.
How can she call him, "apple of my eye'
I deem the graceless fellow merely, "stye.

*** This is a Tamil pun: Punnavan for Kannavan**

---

*பணமணி தன்னை - படத்திலுள்ள ரத்தினத்தை. பரிவுடன் போற்றும் - அன்புடன் பாதுகாக்கும். பணி என - நல்லபாம்பு என்று சொல்லும்படி, நல்லபாம்பு இரவில் இரை தேடுமென்றும், தன் தலையிலுள்ள மணியை உமிழ்ந்து வைத்து அதன் ஒளியில் இரை தேடுமென்றும், அம்மணியை இழந்துவிடின் அது மிக வருந்துமென்றும் கூறுப.*

cf.''நாம நல்லராக் கதிர்பட வுமிழ்ந்த
மேய்மணி விளக்கு.''

''மேய்மணி யிழந்த பாம்பி னீநனி
தேம்பினை வாழிய நெஞ்சே.'' ***(அகநானூறு. 72, 372)***

*பாதுகாக்குநன் - பாதுகாப்போன். வயங்குநன் - விளங்குபவன். நயம் - நன்மை. உளம்ஆர - மனம் நொருந்த. 'தவிக்கிய புரியநன், கண்ணவனோவக் காதலி தனக்குப் ..... வோதுரவோரே,' என்பது முதற் பதிப்புப் பாடம். (தவிக்கிய - தவிக்குமாறு, புரியநன் - செய்வோன். கண்கிவனோ - கண் போன்றவனோ. புண்ணவன் என்றே புகல்வர் - அவன் புண்போல் வருத்துபவன் என்றே கூறுவர். மேதகு - மேலான. பொருளியல் ஓது உரவோர் - அகப்பொருள் புறப்பொருளாகிய இலக்கணங் களைக் கூறும் அறிவாளர்கள்.*

## கஅ. மனைவி

கொண்ட தலைவனுக் கெண்டரும் பெற்றி
நாடி யொழுகி வாடிய போழ்தத்
துளங்குளிர் வசனங் களங்கமின் றுரைத்திட்
டின்னிசை பாடி மன்னி யருகிருந்
தூக்க முயர்த்தி யுறுசுவை யுணவிடூஉ
ஆக்க முறுத்தவ னன்புரை கேட்டுத்
தான்மகிழ் வுறூஉந் தேன்மொழி யாட்டியாய்
இல்லறக் கலனை யியக்குமீ கானாய்
இல்லிற் பதித்த முல்லையங் கொடியாய்த்
துன்ப விருளொழித் தின்ப வொளிதரும்
நந்தா விளக்காய்ச் சிந்தா மணியாய்
இறைவ னளித்த வின்னுயிர்த் தலைவியாய்
இலகுறு மனைவியே யிம்மையிவ்
வுலகினைத் துறக்கமா வுறச்செயுந் துணையென.

---

*கஅ. கொண்ட தலைவன் - மணந்துகொண்ட தலைவன். எண்தரும் பெற்றி நாடி யொழுகி - மனத்திற் கொண்ட குறிப்புணர்ந்து அதற்குத் தக நடந்து. வாடிய போழ்தத்து துன்புற்ற சமயத்தில். உளம் குளிர் வசனம் - மனங் குளிரும்படியான இனிய மொழி. களங்கம் இன்று - கபடம் முதலிய குற்றமில்லாமல். இன்னிசை - இனிய சங்கீதம். அருகு மன்னியிருந்து என மாறுக. ஊக்கம் - தொழின்மேற் செல்லு மனவெழுச்சி. உறுசுவை யுணவு இடூஉ - மிக்க சுவையுடைய உணவினைப் படைத்து. ஆக்கம் உறுத்து - நன்மை யுண்டாதலைச் செய்து. அன்புரை - அன்பு பொருந்திய சொற்கள். மகிழ்வுறூஉம் -மகிழ்ச்சியடையும். தேன்மொழியாட்டி - தேன்போலு மினியமொழி பேசுபவள்.*

## XVIII. HOUSEWIFE

To wedded lord observance due she pays;
With words of comfort soothes in sadness drear;
Singing in sweetest tones she hovers near,
Each day, with wifely sweet harmonious grace.
His voice her joy, His joy her accents sweet;
His failing energies she rouses, feeds
With dainty care, supplying all his needs;
Pilot of bark of household virtue meet.
Like fragrant jasmine twining round the place;
Lamp over burning, flawless jewel bright;
She scatters gloomy griefs, sheds gladsome light,
The sweet-soul'd lady, given by God's own grace;
To HOUSEWIFE, holiest help this earth supplies,
Converting earthly home to Paradise.

**See Kurral, Chapter. vi.**

---

இல்லறக் கலனை யியக்குமீகான் இல்லறமாகிய மரக்கலத்தைச் செலுத்துங் கப்பற்றலைவன். இல் - வீடு. முல்லைக்கொடி கற்பிற் கடையாளம். துன்பமாகிய இருள், இன்பமாகிய வொளி என விரிக்க. நந்தா விளக்கு - கெடாத விளக்கு; தூண்டா விளக்கு. சிந்தாமணி - நினைத்தவற்றைத் தருமொரு தேவமணி. இறைவன் - கடவுள். உயிர்த்தலைவி - உயிர்போற் சிறந்த தலைவி. இலகுறும் - விளங்கும். இம்மை - இப்பிறப்பு. துறக்கம் -மோக்ஷம். மனைவியே இம்மையில் இவ்வுலகினைத் துறக்கமாகப் பொருந்தச் செய்யும் துணையாம் என்க. என - அசைச்சொல்.

கக. கற்பு - பதிவிருதா தருமம். கற்பு - கற்பிக்கப்படுவது என்பது பொருள்; அறிவும் ஆசாரமுந் தலைவனாற் கற்பிக்கப்படுதலும் இருமுது குரவரால் கற்பிக்கப்படுதலும் செவிலியாற் கற்பிக்கப்ப

## கக. கற்பு

கற்பென் பதுகலை கல்லாமை யன்று; மற்
றிற்படி கடவா திருத்தலு மன்று;
தீய வழியினிற் செல்வுழி நின்னை
யேயே யிஃதெனை யென்னா திருந்து
வாயிலாப் பூச்சியாய் மன்னுத லன்று;
மாடுபோ லுழைத்துக்கூடி வாழ்ந்து
காலந் தன்னைக் கழித்தலு மன்று;
கனலி சான்ருய்க் கலந்த நினது
புகழிற் களித்துப் புரிந்து நின்ருெழில்
மனையற மாட்சியை மாண்புற வணங்கிநீ
நினைதலுந் தன்னுள நேர்ந்து பணிந்து
கனவினும் பிறரன்பு கருதா நலமே
உன்கருத் தொட்டா வுயரியல்
பென்று கூறுப மன்றவான் ேறாரே.

---

*படுதலும் அந்தணர் முதலிய சான்ருேரான் கற்பிக்கப்படுதலும் ஆகிய எல்லாம் கொண்டகணவன் சொற்படி யொழுகுதலொன்றேயாம்.*

cf. ‘‘ கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை.’’

*கலை கல்லாமை - சாஸ்திரம் முதலியவற்றைப் படியாமை. இற்படி - வீட்டு வாயிற்படி. செல்வுழி - செல்லும் பொழுது. ஏயே - இகழ்ச்சிக் குறிப்பு. இஃது ஏனை - இது என்ன? என்னாது - என்று கூருது. வாயிலாப் பூச்சி - வாய் பேசாத அறிவிலியைக் குறிக்கும் வழக்கச் சொல். மாடு போலுழைத்து - அறிவின்றியுழைப்பவர்க்கு மாட்டினை யுவமை கூறுவது வழக்கம். காலம் - ஆயுட் காலம். கனலி - அக்கினி. சான்று - சாக்ஷி. 'அக்கினி சாக்ஷியாய்' என்றது மணவினைக் காலத்து வளர்க்கும் ஔபாசனாக்கினியைக் குறித்தது. புகழிற் களித்து - கணவனுக்குப் புகழுண்டாங் காலத்துக் களிப்படைந்து; நீ புகழுங் காலத்திற் களித்து என்றுமாம். நின்ருெழில் புரிந்து என மாறுக; உனது பணிவிடையைச்*

# XIX. WOMANLY EXCELLENCE

You ask what WIFELY EXCELLENCE may be:
"Tis not mere ignorant simplicity,
That dares not cross the threshold of the home.
Nor marks when they own feet unguarded roam!
"Tis not as voiceless animal to dwell,
And toiling serve thy meanest pleasures well!
She is not thine to spend unhonour'd days,
But share thy labours, and enjoy thy praise!
The sacred fire was witness of your vow!
Before her virtue must thou reverent bow.
Her willing feet in swift obedience move,
Nor e'en in dreams she seeks for other love.
This is her function high, beyond thy thought.
Thus have the bards, fulfilled of wisdom, taught.

---

*செய்து. நீ செய்யும் தொழிலைத் தானு முடனிருந்து செய்து என்றுமாம்.*

*மனையற மாட்சி - இல்லறத்தின் பெருமை. வணங்கி - வணங்க எச்சத் திரிபு. தலைவியது மனையற மாட்சியின் சிறப்பினை நீ பெருமையுறக் கொண்டாடிப் பணியுமாறு நீ மனத்தாற் கருதும் செயல்களையும் அவள் தனது மனத்தான் முன்னுணர்ந்து செய்து பணிந்து; இனித் தலைவனுக்குப் புகழுண்டாக இல்லறத்தின் பெருமையினை மதித்து வணங்கி, என வணங்குதலைத் தலைவி செயலாக்குதலுமாம். பிறரன்பு கனவினும் கருதாநலம் - பிறரிச்சித்தலைக் கனவிலும் விரும்பாத நன்மை. ஒட்டா - சென்று சேராத. உயர் இயல்பு -மேலான குணம். மன்ற - தெளிவு பொருந்த. மன்ற கூறுப என்க.*

cf.''நோற்றோர் மன்றநின் பகைவர்.'' *(புறம். 26)*

*இனி மன்ற ஆன்றோர் எனக் கூட்டலுமாம்.*

'' மனையற மாட்சியை மாண்புற வகுத்துக்
கற்பித்த லானது கற்பாம்; காதலன்
சொற்கட வாதவற் றூநெறி நிறீஇக்
கனவினும் வேறு காளையர் தம்மை
நினையாதிருக்கும் நேர்மையே
யென்று கூறுப,''

*என்பது முதற் பதிப்புப் பாடம்.*

## உ0 இல்லறம்

விழுப்பஞ் சான்ற வியத்தகு மில்லறம்
ஒழுக்க வியலறி வுறுத்துஞ் சாலையாய்
நன்மை தழைத்து ஞுயக்கொடை நிழற்றி
மென்மை யரும்பிமேன்மை மலர்ந்துபே
ரன்பு காய்த்துநல் லருள்கனிந் தலகிலா
இன்பநறை பிலிற்று மினியகற் பகமாய்
இலகிடு முண்மை மலையிலக் கண்ணே?
ஏத்துறுந் தகைய வில்லற மெனுமிம்
மாத்தடந் தேரினை வாழ்க்கையாம் போர்க்களஞ்
செலுத்துபு துன்பத் தீயரை யெறிந்து
தொலைத்திட லறியார் துறவு துறவென
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து
மயக்கினு மாழ்கலீர்! மாந்தர்காள்!
உயக்கமின் றில்லற முற்றுமெய் யுணர்மினோ.

---

*உ0. விழுப்பம் - மேன்மை. சான்ற - அமைந்த. வியத்தகும் வியக்கத்தகும்.*

cf.''வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே.''
**(புறம். 217)**

*ஒழுக்கவியல் - ஒழுக்க விலக்கணம். அறிவுறுத்தும் போதிக்கும் சாலை - கல்விச்சாலை. ஞுயக்கொடை - நன்மைதரும் ஈகை. என்பது தக்கார்க்களித்தல். மென்மை - மிருதுவாந் தன்மை. அலகிலா - அளவிட முடியாத. இன்பநறை - இன்பமாகிய தேன். பிலிற்றும் - சொரியும். கற்பகம் - நினைத்தது கொடுக்கும் தேவ விருக்ஷம். இலகிடும் - விளங்கும். உண்மை - மெய்மை. மலையிலக்கு - பலரும் வெளிப்படையா யறிவது.*

*நன்மையாகிய இலை தழைத்துக் கொடையாகிய நிழலைச் செய்து மென்மை யென்னும் அரும்பீன்று மேன்மையாம் மலர் மலர்ந்து பேரன்பாகிய காய் காய்த்து அருளாங் கனி பழுத்து*

# XX. DOMESTIC LIFE

O WONDROUS virtue of pure HOUSEHOLD LIFE!
Where homely charities the soul expand,
Where goodness grows, where all affections bland.
Their shadows throw, where buds and flow rets rife.
Of tender grace, bloom far from envious strife.
This tree of life sheds fragrance o'er the land;
Love is its germ its ripe fruit fills the hand
Of children dear, and joyous man and wife,
To me, tis chariot where in life's fierece war,
Contending with affliction's thronging host,
I ride a victor over every foe!
Come mount with me this high triumphal Car!
Cease our morose ascetic rule to boast.
Thus only may ye life's true secret know!

**See Kural, Chapter. viii.**

---

*இன்பமாகிய தேனைச் சொரியும் இல்லறமாகிய கற்பகம்; முற்றுருகவணி.*

*ஏத்துறுங் தகைய - புகழப்படுந் தன்மை வாய்ந்த. மாத்தடந்தேர் -பெரிய விசாலமான தேர். வாழ்க்கை - உயிர் வாழ்க்கை. செலுத்துபு - செலுத்தி. துன்பத் தீயர் - துன்பமாகிய பகைவர். எறிந்து - கொன்று. தொலைத்திடல் - அழித்தல். நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து - நாவே குணிலாக வாயாகிய பறையடித்து. கடிப்பு - குணில், பறையடிக்குங் கோல்.*

cf. ''நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்.''

***(சிலப்பதிகாரம் - ஊர்காண். 29)***

''படுபழி மறைக்கலாமோ பஞ்சவரன்று பெற்ற
வடுவுரை யாவர் போர்ப்பார் வாய்ப்பறை யறைந்து தூற்றி.''

***(சீவக சிந்தாமணி - 211.)***

*மயக்கினும் - அறிவினை மயங்கச் செய்யினும். மாழ்கலீர் - மயங்காதேயுங்கள். உய்க்கமின்று - வாடுதலின்றி. இல்லறம் உற்று - இல்லறத்தை மேற்கொண்டு. மெய்யுணர்வின் - உண்மையை யறியுங்கள். மாத்தடந் தேர் ...... லறியார்: உருவகவணி.*

''உயக்கமின் றில்லற வொழுகலா றடைமினோ,''

*என்பது முதற் பதிப்புப் பாடம்.*

## உக. தொழில்.

மன்பே ருலக மாண்பொறைத் தலைவன்முன்
அன்புமனி தன்பரிந் தாற்றுவா னற்றொழில்.
ஊக்கிச் செயலுயர் வுணராச் சின்மகார்
போக்கி முடித்த பொற்பணி யிகழ்வர்; பின்
னொன்றலி லுரைபல வுரைத்தும் நின்றனர்.
ஓவா விலம்பா டுயர்நல முறினும்
ஆவா தீத்தொழி லடாதென் றறிந்து
நற்றொழில் புரிதலே நன்று. இது நிற்க,
மற்றொரு நன்மகன் மகிழ்ந்துமேற் கொண்ட
தொழிலினைப் பிறர்தா மிழிவெனக் கூறினுங்
கைவிட லின்றிக் கருதுதொழின் முடிப்போன்
மெய்வலி யோடு வீற்றுவள முடையான்
ஈதொரு தலையென் றியம்புவர்
மூதறி வுடைய முத்தமிழ் வாணரே.

---

உக. மன்பேர் உலகம் - எல்லாப் பொருள்களும் பொருந்துதற்கிடமான பெரிய நிலவுலகம். மாண்பொறைத் தலைவன் - மாட்சிமையுடைய பொறுமையையுடைய தலைவன். உலகமாகிய தலைவன் என்க. பொறுமைக்குப் பூமியாதலின் பொறைத் தலைவைன் என்றனர்.

cf. ''அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.''

**(திருக்குறள். 151)**

அன்பு மனிதன் - அன்பினையுடைய மனிதன். பரிந்து -விரும்பி. ஆற்றுவான் - செய்வான். மனிதன் தலைவன்முன் நற்றொழில் ஆற்றுவான் என முடிக்க. ஊக்கிச் செயல் உயர்வு உணரா - மனவூக்கங்கொண்டு முயலுதலால் உண்டாம் பெருமையினை யறியாத. சின்மகார் - சிலர். மனிதர் பூமியின் பிள்ளைகளாதலின் 'மகார்' எனப்பட்டனர். போக்கி முடித்த பொற்பணி -கடைபோக முயற்சித்துச் செய்து முடித்த அழகிய வேலை. இகழ்வர் - நிந்திப்பர். பொற்பணி - பொன்னாலான அணிகலன் என்பது சொற்போக்கு நயம் -பின் - பிறகு. ஒன்றல் இல் உரைபல - பொருத்தமில்லாத பல வார்த்தைகள். ஓவா - நீங்காத. இலம்பாடு - வறுமை. உறினும் - உண்டாயினும். ஆவா - அச்சக் குறிப்பு.

# XXI. LABOUR

Before his master, long enduring earth,
Man bows, and bends to honourable toil!
But some, of manly effort would the worth
Deny, and work of hard earn'd crown depoil.
Discordant are their voices, Yet I grant!
That only worthy labour should be done;
Not evil deeds, whate'er the profit won,
No! not'neath urgent stress of craving want!
Yet, what each honest man delights to do,
Tho' idle scoffers jeering stand around,
If with heroic soul he carry through,
He shall with strength and wealth and praise be crown'd!
Thro' all the lands that boast the Tamil name.

**See Kurral, Chapters ciii., civ.**

---

''ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தாரொரு சாரார்.''
(யாப்பருங்கல விருத்தி மேற்கோள்.)

*தீத்தொழில் - தீயதொழில். அடாது - தகாது. புரிதல் - செய்தல். தீத்தொழில் செய்யாவிடின் இலம்பாடு உறினும், தீத்தொழில் செய்யின் உயர் நலம் உறினும் அஃது அடாதென் றறிந்து, எனக் கொள்க. இலம்பாடு உயர்நலம் - உம்மைத் தொகை. நன்மகன் - நல்லவன். மேற்கொண்ட - செய்ய எடுத்துக்கொண்ட. இழிவு - தாழ்ந்தது. கைவிடல் -விட்டுவிடல். மெய்வலி - உண்மையான வலிமை. வீற்று வளம் - வேறொன்றற் கில்லாத அழகின் வளப்பம்.*

வீறு - ''வீறுயர் கலச நன்னீர் சொரிந்தனன்,''
***(சீவக சிந்தாமணி - 489)***

*என்ற இடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர், வீறு - வேறொன்றிற்கில்லா அழகு, என்று பொருள் கூறல் காண்க. ஒருதலை - துணிவு, நிச்சயம். மூதறிவு - முதிர்ந்த அறிவு. முத்தமிழ் வாணர் -இயல், இசை, நாடகமென்னு மூன்று தமிழ்ப் பகுப்பையும் அறிந்தவர்.*

'' மன்பே ருலக மண்டிணி ஞாலத்
தன்பின் வணங்கி யாற்றலா னன்றே
தொழிலெனப் பெற்றனை? விழுமிய துணையே!
நுன்றன் சிறப்பை நுனித்தறி கிலர்சில
ரொன்றலி லுரைபல வுரையா நின்றனர்

## உஉ. நிலன்

நிலனே! எவற்றையும் நேர்ந்து தாங்குவோய்!
புலனிலாப் புல்லர்நீ பொய்யெனப் புகல்வர்.
யாவுந் தீய வென்பவர் நின்னலம்
மேவார் மதிகெடூஉ வீணே மாய்வரால்.
அகழுநர்த் தாங்கு மரும்பொறை தான்கொண்
டிகழுநர்ப் பொறுக்கு மெழிலுளார் போறி;
அதுமாத் திரையோ? அவர்தமக் கினிதி
னுதவுவை பொற்பொலி யுற்றநன் னீரெலாம்.
ஞாயிறு நோக்கியெஞ் ஞான்றுநீ யுருளுபு
பாயிரு ளிரவும் பகலும் விளைப்பை.
நிலைபே றுடைய நிலனே! தளரிடை
மன்னுயிர் புரக்குமாண் பன்னரும் பெருமைநின்
நன்மையு மளவில நாடெலாம்
நிறீஇமகிழ் செய்வை நின்றிறம் பாடுகோ?

---

ஓவா விலம்பா டுறினும் புன்றொழில்
ஆவா கொடிதென் றறிந்து தான்றனி
நற்றொழில் புரிதலே நன்று. இது நிற்க.
மற்றினி யொருவன் மகிழ்ந்த மேற்கொண்ட
தொழிலினைப் பிறர்தா மிழிவெனக் கூறினுங்
கைவிட லீயான கருந்தொழின் முடிக்குமேல்
மெய்வலி யொடுமவன் வீற்றுவள முடையான்
ஈதொரு தலையென றியம்பினர்
மூதறி வுடைய முத்தமிழ் வாணரே.''
என்பது முதற் பதிப்புப் பாடம்.

*(மண்டினி ஞாலம் -பிருதிவி யணுக்கள் செறிந்த நிலவுலகம். கைவிடலீயான - கைவிடாது: முற்றெச்சம்.*

*உஉ. நேர்ந்து - பொருந்தி. தாங்குதல் - சுமத்தல். புலனிலாப் புல்லர் - அறிவில்லாத அற்பர். உலகம் பொய்யெனக் கூறுவாரை மறுத்து, ''உண்டாலம்ம விவ்வுலகம்'' (புறம். 182) என்பார் கூற்றை மேற்கொண்டது. தீய -தீயவை. நின்நலம் - நின்னால் உண்டாம் நன்மை மேவார் - மேவாமல் (முற்றெச்சம்). மாய்வர் - தொலைவார். அகழுநர் - மண் வெட்டியாற் றோண்டுபவர். அரும்*

# XXII. THE EARTH

O Earth: for aye thou dost endure;
  Though senseless men thy sacred name misuse,
  And moralists morose thy gifts refuse,

Of naught but their own visions vain secure.
To those who delve thou greatest footing sure,
  Like souls that bear, though men their love abuse;
  Nay, thou dost yield for these thy gifts profuse,

Thy golden harvests and thy waters pure.
The sun thou circlest in thine annual round;

  Revolving, bringest change of day and night.
  Thou stable earth! thy seasonable might

Thy majesty and greatness know no bound,
Sustain and gladden every varied clime;
How shall I sing thine energies sublime?

**See Kurral, 151**

---

*பொறை -அரிய பொறுமை. இகழுநர் - நிந்திப்பவர். போறி - போல்வாய். அகழுநரை, இகழுநரை என இரண்டனுருபு விரிக்க.*

cf. ''அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.'' ***(திருக்குறள். 151)***

*அது மாத்திரையோ - அவ்வளவேயோ. இனிதின் - நன்றாக. உதவுவை - உதவுவாய். பொற் பொலிவுற்ற - பொன்னின் அழகு பெற்ற விளை பொருள்கள். நன்னீர் -நல்ல நீர். எலாம் - ஆகிய எல்லாவற்றையும். எலாம் உதவுவை எனச் சேர்க்க. ஞாயிறு நோக்கி - சூரியனைப் பார்த்த வண்ணம். எஞ்ஞான்றும் - எப்பொழுதும். நீ உருளுபு - நீ உருண்டு. இருள்பாய் இரவும் - இருள் பரந்த இரவினையும். பகலும் - பகற் பொழுதையும். விளைப்பை - உண்டாக்குவாய்.*

*பூமி சூரியனைச் சுற்றி வரும்பொழுதே தன்னைத் தானே சுற்றிக்கொள்வதால் இரவும் பகலும் உண்டாகும். உண்மை யீண்டுக் கூறப்பட்டது. நிலைபேறுடைய - அழிவில்லாத. தளர் இடை - தளரும் சமயம், இடை - சமயம்.*

cf. ''உடையோர் போல இடையின்று குறுகி.''

***(புறம். 54)***

## உ௩. கடல்

வாழிய கடலே! வாழிய கடலே!
உலகினுக் கியைந்த வொருதுணைக் கருவியே!
அலகிலா வுருவ மடைந்தோய்! நிலத்தினை
ஆக்கி யன்புடன் காக்கும் பரவாய்!
உன்னை யடுத்துவந் தறுநா வாய்களை
நன்னர்ச் செலுத்து நங்காய்! நின்னிளங்
காதற் றலைவனும் மோது காற்றினாற்
புனற்கா ரென்னும் புனிற்றிள மகனால்
உயிர்த்தொகை யோடு பயிர்த்தொகை மகிழத்
தாவா வின்பந் தருந்தனித் தாயே!
ஓவா தொல்லென வொலிக்குங் கடலே!
உன்றன் பெருமையு முயர்வுங் கருணையுந்
துன்றுமடி யின்மையுந் தூய்மையும்
என்ற னுலெடுத் தியம்ப லியலுமோ?

---

*மன்னுயிர் புரக்குமாண் - நிலைபெற்ற உயிர்களைப் பாதுகாக்கும் மாட்சி. பன்னரும் பெருமை - பேசற்கரிய சிறப்பு. மாட்சியும் பெருமையும் நன்மையும் என உம்மையை ஏனையவிடத்தும் கூட்டுக. அளவில் நாடெலாம் - அளவில்லாத பல நாடெங்கும். நிறீஇ - நிறுத்தி, நிலைபெறச் செய்து. மகிழ் செய்வை - மகிழ்ச்சியுண்டாக்குவாய். நின்றிறம் - உனது சிறப்பின் வகைகளை. பாடுகோ - பாடுவேனோ, பாடும் வன்மை யுடையேனோ என்றபடி.*

*உ௩. இயைந்த - வாய்த்த. அலகுஇலா - அளவில்லாத. நிலத்தினையாக்கி - நீரினின்று நிலமுண்டாவதென்பது வேதத்திற் கூறியது. பரிபாடல் இரண்டாம் பாட்டுரையிற் பரிமேலழகர், ''பரம்பொருளினின்றும் -ஆகாயந் தோன்றி அதனினின்றும் காற்றுத் தோன்றி அதனினின்றும் தீத் தோன்றி அதனினின்றும் நீர் தோன்றி அதனினின்றும் நிலந் தோன்றிற் றென்பது வேதத்துள்ளுங் கூறப்பட்டது,'' எனக் கூறியது நோக்குக.*

# XXIII. THE SEA

Hail to thee, OCEAN hail! unfailing source
Of priceless boons to all the kingdoms wide!
Thou wearest myriad forms diversified.
Great ships men launch, thou speed'st them on their course.
Mother of good to men beyond compare,
By thee built up, though dost protect, the earth.
The wind thy lover is, thou didst give birth
To thy first-born, the tender cloudlet rare.
The lofty greatness, and they gracious care,
Thine energies, unwearied purity;
Thou "ever-sounding and mysterioius' sea!
All these, how can my feeble verse declare?
Giver of pleasure to the toiling band,
And life renew'd to all the teeming land!

---

*'முன்னீர்' என்பதற்கு 'நிலத்திற்கு முன்னாகிய நீ'ரென்று புறநானூற்றுரையாசிரியருங் கூறுவர். (புறம் - 9.) பரவாய் - பரவை (பரந்திருப்பதாற் கடலுக்குப் பெயர்) என்பதன் விளி.*

*நாவாய் - மரக்கலம், கப்பல். நன்னர் - நன்றாக. காதற்றலைவன் - காதலையுடைய கணவன். இளங்காற்று எனக் கூட்டுக. மோது - அடிக்கும். புனற்கார் - நீருண்ட மேகம். புனிற்றிள மகன் - அண்மையிலீன்ற இளம்பிள்ளை. தொகை - கூட்டம். தாவாவின்பம் - கெடாத இன்பம்.*

cf. ''தாவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி.''

**(சீவக சிந்.1)**

*தனி - ஒப்பற்ற. ஓவாது - நீங்காது, ஓயாமல். ஒல்லென - ஒலிக்குறிப்பு. துன்றும் - நெருங்கிய. மடியின்மை - சோம்பலில்லாமை. தூய்மை - பரிசுத்தம். இயலுமோ - கூடுமோ?*

'' நின்னிளங் காதற் றலைவனாங் காற்றி னானம்
போத மென்னும் புனிற்றிள மகனான்,''

என்பது முதற்பதிப்புப் பாடம்.

(அம்போதம் - மேகம்; நீரைக் கொடுப்பது என்பது அவயவப் பொருள்.)

## உச. பரிதி

பரிதியே! நாடொறும் பண்பி னிளங்கதிர்
அருநில மகட்கண் டண்ணல்புன் னகையென
எங்கணும் வீசுபு பொங்குகளி செய்வோய்!
நண்பகல் வெம்மை நனிகொடி தெனினுங்
காலைமா லையுநின் கதிர்நலம் புகழ்வர்
உலகின் கண்ணே! உறுமண்ட வரசே!
உன்னரு ளின்றற மாதிய வியலா;
பண்டை யிரவின் பாழ்த்தனி யாட்சியில்
வானம் பறக்கும்; தீனஞ் சிறக்கும்;
ஞான மிறக்கும்; மானம் பறக்கும்;
உயிர்க ளுயங்கும்; பயிர்க டியங்கும்;
தினந்தொழி னின்மகார் செயப்பணி தலைவா!
என்கொல்? நின் கருணை யென்கொல்?
நன்குற வாற்று நாத! விண் மணியே!

---

*உசி. பரிதி - சூரியன். பண்பின் இளங்கதிர் - நன்மையைச் செய்யும் இளங் கிரணங்கள். அருநிலமகட் கண்டு - அருமையான நிலமகளை நோக்கி. அண்ணல் - பெரியோன், கடவுள். நிலமகளைக் கண்டு அண்ணல் செய்யும் புன்னகை போலும் இளங் கதிர்களை யெங்கணும் வீசி, என்க. வீசிபு -வீசி. பொங்குகளி - மிக்கமகிழ்ச்சி. நண்பகல் - மத்தியாந்நம்; நடுப்பகல். வெம்மை - வெப்பம். நனி - மிகவும். காலை மாலையும் - காலையு மாலையும் உண்டாகும். கதிர் நலம் - கிரணங்களின் அழகு. உலகின் கண்ணே: சூரியனை உலகிற்கொரு கண்ணெனக் கூறுவர்.*

cf. ''கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சுழல வோடும் வெய்யவ னென்னும் பேர.''

**(சூளாமணி - மந்திர. 30)**

*உறும் அண்ட அரசு - பெரிய அண்டங்கட்கு அரசன். சூரியனைச் சுற்றி ஏனைய கிரகங்கள் சஞ்சரித்தலின் இங்ஙனம் கூறினர். அறமாதிய - அறம் முதலியவை; அறம், பொருள், இன்பம், வீடு. உன் அருள் இன்று - உனது கருணையின்றி. இயலா - நடைபெறு. பண்டையிரவின் பாழ்த்தனியாட்சி - ஞாயிறுந் திங்களு மொழிந்து எங்கும் இருண்ட பாழ்நிலையாயிருந்த ஊழி.*

# XXIV. THE SUN

O SUN! o'er every land, thro' all the days,
  Thy morning beam awakens gentle mirth,
  Like the Creator's smile upon His darling earth.
Fierce are thy noontide fervours but men praise
At morn and dewy eye thy tender rays
  If thou wert not, king of thy circling host,
  Eye of the world! to men below no boast
Of virtuous deed, no gain in all their ways!
In solitary reign of ancient night
  Heaven must grow dry; earth barren lie;
  Wisdom were dead; all honour fled;
  Life must languish, die out in anguish!
A master thou! each morn at thy behest,
Thy sons go forth, till evening brings them rest.
How fitly praise we then thy sov'ran light?
Thou kindly Lord of all the earth! Heaven's jewel bright.

---

''தொன்முறை யியற்கையின் மதியொடு ஞாயிறு
...... மரபிற்ருகப்
பசும்பொ னுலகமு மண்ணும் பாழ்பட
விசும்பிலூழி,''

*என்ற பரிபாடல் இரண்டாம் பாட்டினடிகளையும் அவற்றின் உரையையும் நோக்குக. வானம் வறக்கும் - விசும்பு பாழ்படும். தீனம் - கேடு. சிறக்கும் - செழிக்கும். உயங்கும் - வாடும். தியங்கும் - மயங்கும். நின்மகார் தினம் தொழில் செய்யப் பணி தலைவா. பணி - கட்டளையிடும். சூரியோதயத்தில் மக்கள் தொழின் மேற்சேறலியல்பாதலின் இங்ஙனம் கூறினர்.*

*'என் கொல்' வியப்படியாகப் பிறந்த விஞ. நன்கு கூற நன்மை பொருந்த. ஆற்றும் - செய்யும். விண்மணி - சூரியன்.*

''பரிதியே! விரிகதிர்ப் பரிதியே! எங்கணும்
ஒளிசெயும் பொருளே! உலக மனைத்துங்
களிசெயுஞ் செல்வக் கடவுளே! உயிரெலாந்
தத்தம் தொழில்களை நித்தமும் புரியுமா
றேவுநற் றலைவனே! வாவிசேர் தாமரைக்
கிழவனே! பலர்புகழ் மழவிள ஞாயிறே!

## 25. மதி

மதியே! தண்கதிர் மதிமகிழ் வுறுப்போய்!
வான்குளம் பூத்த வால்வெண் கமலமே!
வேட்டுநிற் பார்த்து விளையா டுஞ்சிறார்
மாண்டநின் பெயர்கூய் மாசில்களி யெய்துவர்.
மதிமாறு தகைத்தென மதிமருண் டிகழ்வார்;
குறைந்துந் தேய்ந்துநீ குறிப்பினத் தகையையே!
கண்டு நினையெதிர் கடல்குதி கொளுமால்;
கொண்டு நினையெதிர் குமுதம்வாய் மலரும்.
இன்பக் காதல னின்னரு ளரசியா
வாழ்த்தத் தணந்தார் பாழ்த்தனை யென்பர்.
தான்றளர் வெய்தினும் வான்றனிற் றோன்றி
இரவிபா லொளிபெற் றிரவொளி செய்வோய்!
உன்போல் யாரே யுலகினில்
மன்பே ரருள்புரி வள்ள லாவரோ?

---

அலகிலண்டங்க ளாண்டிடு மரசே!
உலகின் கண்ணே! உன்னரு ளின்றி
அறமும் பொருளுஞ் சிறிது மியலா;
வானம் வறக்கும்; தீனஞ் சிறக்கும்;
உயிர்க ளுயங்கும்; பயிர்க டியங்கும்;
என்கொல் நின்கருணை யென்கொல்?
நன்குற வாற்று நாத!விண் மணியே!

என்பது முதற்பதிப்புப் பாடம்.

*உரு. மதி - சந்திரன். தண்கதிர்மதி மகிழ்வுறுப்போய் - தண்ணிய கிரணங்களாற் புத்திக்கு மகிழ்வினை யளிப்பவனே, வான்குளம் - வானாகிய குளம். வால்வெண் கமலம் - தூய வெண்டாமரை.*

cf. ''வாலறிவன்'', (திருக்குறள் - 2)

*வேட்டு-விரும்பி. நிற்பார்த்து-நின்னை நோக்கி. சிறார் - சிறுவர்கள், குழந்தைகள். மாண்ட - மாட்சியமைப்பட்ட. கூய்-கூவி. மாசில்களி - குற்றமற்ற களிப்பு. எய்துவர் - அடைவார். மதிமாறு தகைத்து என - திங்கள் நிறைந்துங்குறைந்தும் மாறுந்தன்மை யுடையதென்று. மதிமருண்டு - அறிவிலிகள் புத்தி மயங்கி. இகழ்*

## XXV. THE MOON

O Silver lily on the heaven's blue lake,
What gentle raptures thy cool beams awake!
The children clap their hands at sight of thee,
And shout aloud thy name with infant glee.-
The thoughtless call thee changeful moon, in blame,
But waxing, waning though art still the same.
Thou art the Mistress of the ocean-tide.
To greet thee the pale lotus opens wide.
The happy lover hails thee Queen benign,
But severed ones thy torturing power malign.
Thou borrowest from the sun thy all of light,
And pay'st, mild radiance shedding o'er, the night.
Who like thyself with ever grateful heart,
Each gift received to all around impart?

---

*வார் - நிந்திப்பார். குறிப்பின் - குறித்துக் கூறுமிடத்து. அத்தகைய - அவ்வொரே தன்மையையுடைய. நினையெதிர்கண்டு கடல் குதிகொளும் - திங்களைக் கண்டு கடல் பொங்குதலியற்கை. நினையெதிர்கொண்டு குமுதம் வாய்மலரும் - மதிதோன்றுங் காலைக் குமுதம் மலர்தலியற்கை. அதனாற் குமுதபாந்தவன் என மதிக்குப் பெயருண்மையறிக. இன்பக் காதலன் - இன்பநுகரும் காதனாயகன். இன்னருள் அரசியா வாழ்த்த - இனிய அருளை யுடைய அரசியாகப் புகழ்ந்து வாழ்த்த. தணந்தார் - பிரிந்தார்; ஒருவரை விட்டொருவர் பிரிந்த தலைவன் றலைவியரைக் குறித்தது.*

*பாழ்த்தனை - பாழாய்ப் போதலையுள்ளாய். என்பர் - என்று கூறுவர். தளர்வெய்தினும் - தளர்ச்சியடையினும்; ஒளி குறைந்தும். வான் - ஆகாயம். இரவி - ஞாயிறு. திங்கள் சுயம்பிரகாசமு டைய தன்றென்றும் ஞாயிற்றின் ஒளியானே விளக்கம் பெறுவதென்றும் சாஸ்திரங்கள் கூறும். இரவொளி செய்வோய் - இரவின் கண் ஒளியைச் செய்வோய். யாரே - யாவர்தாம். மன்பேரருள்புரி நிலை பெற்ற மிக்க அருளைச் செய்யும். வள்ளல் - வரையாது கொடுப் போர். பிறர்பாற் பெற்றேனும் ஏனையோர்க் குதவுந் தன்மை நோக்கி, உலகில் உன்போல் அருள்புரி வள்ளல் யாராவர், என்றனர்.*

''மதியே! தண்ணொளி மதியே! வானதி
காட்டும் வெள்ளையங் கமலமே! இளஞ்சிறார்
வேட்டு நாடொறும் விளையாடு மாமிளிர்

## 26. விண்மீன்

விண்மீ னினங்காள்! மிடைந்தொளிர் படையே!
வற்கடஞ் சென்றுழி வள்ளலார் போலக்
கலைமதி யென்றூழ் காணாக் காலையும்
உலைவின் றொளிசெய் துலகினர்க் குதவுவீர்;
காட்சியின் மக்கள் வளரிருள் கடிவீர்;
இரவி னரசியி னெழிற்றாட் கீழ்விரி
நீலக் கம்பலத் தேலப் பரம்புபு
செயிர்தீர்ந் திலங்கும் வயிர மென்கோ?
நீலவான் படத்தி னிகழ்புழை வழித்தெரி
கோலமார் கயிலைக் குன்றினொளி யென்கோ?
விண்டங்கு வெவ்வே றண்டங்க ளென்கோ?
வானமா மரையிலை மேனணி மிளிரும்
புனற்றுளி யென்கோ? புகலுமின்
மினற்றகை கொண்டவெண் மீனினங் காளே!

---

குளிர்வெண் டிங்காள்! நளிகடற் றலைவா!
அமுதக் கதிரோய்! குமுதக் கிழவா!
மதுவுடை மையினான் மதிப்பெய ரினைகொல்?
அன்றி யறிஞர்கணின்றனைக் கண்டு
மதித்திடு வதனான் மதியென் றனர்கொல்?
தான்றளர் வெய்தினும் வான்றனிற் றோன்றி
உலகின் புறச்செய வலசந் திரனே!
சீதக் கலையோய்! காதற் கருவியே!
இரவிபா லொளிபெற் றிரவொளி செய்வோய்!
உன்போல் யாரோ யுலகினில்
மன்பே ரருள்புரி வள்ள லாவரோ?''

*என்பது முதற்பதிப்பிற் கொண்ட பாடம்.*

*(வானதி - ஆகாயகங்கை; வானாகிய நதியுமாம். நளி-பெரிய. மது-அமுதம். மதித்திடுதல் - நன்கு மதித்திடுதல். செயவல - செய்ய வல்ல. சீதக்கலை - தண்ணொளி.)*

*உசா. விண்மீன் - நக்ஷத்திரம். மிடைந்து-திரண்டு. ஒளிர் - விளங்கும். படை-சேனை. வற்கடம் - பஞ்சம். சென்றுழி வந்த பொழுது. சம்பவித்த காலத்து. வள்ளலார் - கொடையாளிகள். கலைமதி - கிரணங்களையுடைய திங்கள். என்றூழ் - ஞாயிறு.*

# XXVI. THE STARS

Ye STARS of heaven! a cluster'd army bright.
Like generous men who aid in sorrow sore,
When setting sun and moon are seen no more.
Unwearied do you shed your twinkling light!
Ye chase the gathering gloom from mortal sight.
I deem you faultless gems that glisten o'er
The carpet spread on yonder azure floor,
Beneath the footstool of the queen of night.
Or are you glimmerings of the Silver hill,
That rents in heaven's blue veil with lustre fill?
Or other worlds that roll in endless space?
Or are ye, haply, dew-drops shed on high,
As poets feign, gleaning in mystic grace,
On lotus-leaves unfolded in the azure sky?

---

காணாக்கலை - ஒளி செய்யாத பொழுது. சந்திர சூரியரில்லாக் காலத்தும் நீங்கள் ஒளி வீசுவீர் என்றபடி. உலைவின்று - உலைதலின்றி, சலிப்பில்லாமல். மக்கள் காட்சியின் வளரிருள் கடிவீர் - மனிதர் பாவையிலிருந்து மிகுந்த இருளை நீக்குவீர்.

இரவின் அரசி - இராப்பொழுதின் தலைவி. 'இன்' தவிர் வழிப்போந்த சாரியை யெனக்கொண்டு இரவாகிய அரசியெனலுமாம். தாள் கீழ் விரி - காலின் கீழ் விரிக்கப்பட்ட. எழில் நீலக் கம்பலத்து - அழகிய நீலக் கம்பளத்தில். ஏலப்பரம்பு - பொருந்தப் பரவி. செயிர் தீர்ந்து - குற்றமின்றி.

இலங்கும் - விளங்கும். வயிரம் என்கோ - வயிரக் கற்கள் என்பேனோ? நீலக் கம்பலம் என்றது விசும்பினை. வான் நீலப் படத்தில் - ஆகாயமாகிய நீல நிறமுள்ள திரையில். நிகழ் - உண்டாகிய. புழைவழித்தெரி - துவாரங்களின் வழியே காணப்படும். கோலம் ஆர் - அழகு நிறைந்த. கயிலைக்குன்றின் - கயிலாய மலையின். ஒளியென்கோ - பிரகாச மென்பேனோ? விண்தங்கு - வானிடத்து நிலைபெற்ற. வெவ்வேறு அண்டங்கள் என்கோ - வேறுவேறாகப் பொருந்திய அண்டங்கள் என்பேனோ?

வானமாமரையிலைமேல் - ஆகாயமாகிய பெரிய தாமரையிலை மேல். மரை - தாமரை யென்பதன் முதற்குறை. நனிமிளிரும் - மிக விளங்கும். புனற்றுளி - நீர்த்துளி. புகலுமின் - கூறுங்கள். மினல் தகை கொண்ட - மின்னுந் தன்மையையுடைய.

## 27. மலை

மலையே! பல்லுயிர் வாழ்முர ணிலமே!
நீர்விழை நிலங்க ணின்பொருள் புகழும்;
துளக்கமிஃ றோற்றமோ டளக்கொணா வளவின்
நின்னிலை மாடநிவேந்தோங் குறுமால்.
திறமுறு குறவர்நின் செறிவனந் திரிதர
வேனிலின் கொடுமை நானில நலிதரத்
துயர்கொளு மக்கணின் னுயர்தண்மா டங்கண்
மேவுவர் கீழ்நிலம் விடுத்தா வலினே.
எத்தகை யோரு மிருபுறம் வதிய
இயற்கை வலிநினை யிறுவரை யிட்டது.
வழிப்போக்க னுயர்முடி விழித்துநோக் குவனால்;
வலர்சில ரதன்பனி வளருச்சி யேறுவர்;
நிலவர சாச்சிலர் நினைச்சொல்ப;
கயலுகள் யாறெனு நயமகட் கன்னே!

---

''விண்மீனினங்காள்! விண்மீனினங்காள்!
வற்கடஞ் சென்றுழி வள்ளலார் போல
அற்கடன் மான வதிர்ந்தெழு ஞான்று
கலைமதி தணந்த காலையு மொளிசெய்
துலைவின் றுலகினர்க் குதவுங் கருவிகாள்!
நீலக் கம்பலத் தேலப் பரப்புபு
செயிர்தீர்ந் திலங்கும் வயிரமணி யென்கோ?
விண்ணெனுங் கடலுண் மேவுமுத் தென்கோ?
நீலவான் படத்தின்...''

என்பது முதற் பதிப்புப் பாடம்.

*உஎ. முரண்நிலம் - வலிமையுள்ள நிலம். 'வன்னிலம்' என்னும் வழக்குண்மை யறிக. குறிஞ்சி வன்னிலமாம்.*

*''வன்பாற்கண் வற்றன் மரந்தளிர்த்தற்று,'' (திருக்குறள்-78) என்பதன் உரை நோக்குக.*

*நீர் விழை நிலங்கள் - நீரைப்பெற விரும்பும் நிலங்கள். நின் பொருள் புகழும் - நீ அளிக்கும் நீர் முதலிய பொருள்களைக் கொண்டாடும். துளக்கமில் - அசைவற்ற. தோற்றம் - எழில் - அளக்கொணா - அளக்க முடியாத. அளவு-அகல நீள உயரங்கனம் முதலியவை.*

# XXVII. MOUNTAINS

Ye tow'ring MOUNTAIN HEIGHTS, the rugged home
Of varied life, how do your treasures bless,
The thirsty lands! August and measureless,
How rises o'er the plain your steadiast dome, While sturdy
Hill-men through your forests roam.
And when fierce summer-heats the lands oppress,
To your cool mansions in their dire distress
From many a lowland spot they panting come.
The boundaries fixed by Nature's power ye stand,
The traveller gazes on your peaks sublime;
A hardy few their icy summits climb;
While divers peoples dwell on either hand.
Bards hail you monarchs of the realms below;
I greet you mothers of the streams that flow!

---

cf. ''அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.''

***(நன்னூல் - பாயிரம்.27)***

*நின்நிலை மாடம் - நினது நிலைபெற்ற சிகரங்களாகிய மாடங்கள். நிவந்து - உயர்ந்து. ஓங்குறும் - எழும். ஆல் - அசை. திறம் உறு-வலிமைமிக்க. குறவர் - குறிஞ்சிநில மக்கள். செறி வனம் நெருங்கிய காடுகளில். திரிதர - திரியவும். வேனிலின் கொடுமை - முதுவேனிற் காலத்தின் வெப்பத்தின் கொடுமை. நானிலம் - ஏனையமுல்லை, மருதம், நெய்தல், பாலையாகிய நான்கு நிலங்களையும்.*

*நலிதர-வருத்துதலால். துயர்கொளும் - வருந்திய. மக்கள் - ஜனங்கள். நின் உயர் தண் மாடங்கள் - உனது உயரிய தண்ணிய சிகரங்களாகிய மாடங்களை. மேவுவர் - அடைவர்; சேர்வர். கீழ் நிலம் - தாழ்ந்த பள்ளத்தாக்கான நிலங்களை. ஆவலின் - ஆவலோடு. கீழ்நிலம் விடுத்து ஆவலின் மேவுவர் எனக்கூட்டுக. கடல் மட்ட நிலத்தில் வெப்பம் அதிகும், அம்மட்டத்தின் மேல் ஏற ஏற வெப்பங்குறைந்து குளிர்ச்சி மிகுவதும் இயற்கை உண்மையாம். இதுபற்றியே உஷ்ணப் பிரதேசங்களில் உள்ள மலைச்சிகரங்களிலும் எக்காலமும் உறைபனி படிந்து கிடக்கும். கடல்மட்ட நிலவாசிகள் சிலர் கோடைக்கால வெம்மைக் காற்றாது மலைகளில் வசிக்கச் செல்வது ஈண்டுக் கூறப்பட்டது.*

## 28. யாறு

யாறே! தீம்புனல் யாறே! ஓவா
திழுமெனு மோதையி னொழுகிடும் யாறே!
முகிற்குழா முறங்கு நகத்தினிற் பிறந்து
தவழ்தர லுற்று நவமணியோடு
வேழவெண் மருப்புங் காழகிற் றுணியுங்
கழங்கென வெறிந்து தழங்கொலி மேவிச்
செல்கதி மிகுத்துப் பல்பொழி லோடி
மரம்பெய்ம் மலர்களை விரும்பி யணிந்து
குளம்பல நிறைத்து வளம்பெற வைத்துப்
பொன்னினைக் கொழித்து மன்னுறு நங்காய்!
என்னே நின்விளை யாட்டு! மற்றம்ம!
கொன்னே யொன்றுங் குயிற்ற லொருப்படாய்.
எவர்சிறை செய்திட ரியற்றினு
மவர்தமைப் புரக்குநின் னன்பென் சொல்கோ!

---

*எத்தகையோரும் - எத்தன்மையுடையோரும். இருபுறம்வதிய வதிய - இரு பக்கங்களிலும் தங்கி நிற்க. இயற்கைவலி - இயற்கையின் வலிமை. நினை - உன்னை. இறுவரை - அறுதியிட்ட எல்லையாக. இட்டது - அமைத்தது. வழிப்போக்கன் - பிரயாணி, வழிச்செல்வோன். உயர்முடி - உனது உயர்ந்த சிகரத்தை, விழித்து நோக்குவன் - விழிமலர்ந்து பார்ப்பன். வலர்சிலர் - வல்லவர்களாகிய சிலர். அதன் - அச்சிகரத்தின். பனிவளர் உச்சி - பனிநிறைந்த தலையிடத்தே. நில அரசாக - பூமியின் அரசாக. சொல்ப - சொல்வார்கள். கயல் உகள் - கயல்மீன்கள் புரளும். யாறெனும் நயமகட்கு அன்னே - ஆறென்னும் நல்ல மகளுக்குத் தாயே.*

''மலையே! பல்லுயிர் வாழும் இல்லமே!
வறந்த காலையுஞ் சிறந்தளி வள்ளலே!
வெருளாக் குறவரும் மருளுங் குன்றமே!
துளக்கமிஃ றோற்றமொ டளக்கொணா வறிவினாய்!
வேனில் வெங்கதிர்க் கானல் பொறாதுனை
மேவு மக்கட்குத் தீவிய குளிர்ச்சி
செய்யுங் குறிஞ்சிச் செல்வனே! காதலால்
நையுந் தலைவனும் நற்றலை மகளும்

# XXVIII. THE RIVER

RIVER! Whose waters sweet through meadows glide,
With lulling murmur all the living day!
From cloud-capt heights, thy cradle, winds thy way,
Thro' upland vales, by many a mountain side.
I see thee, crowned with flowers the forests pride;-
Sweet-scented woods, and gems of purest ray,
And ivory, tossing in thy wanton play;
Toward ocean hasting, blessings scattering wide!
And now thy gifts each opening channel fill,
Where labouring hands thy stream imprisoned hold.
No longer wandering at thine own sweet will,
To every hamlet are thy waters gold;
Though mean enslave thee, thou art loving still
Enriching these with blessings manifoid.

---

வரைவிட னாதலின் வரைப்பெய ரினையோ?
மல்லுடை மையினான் மலையென்றனரோ?
அல்லது நின்றனை யனைவருங் கண்டு
மலைத்திடு வதனான் மலையெனப் பெற்றையோ?
நிலைத்திணை யரசே! நிகழ்த்துதி
கயலுகள் யாறெனும் நயமகட் கன்னையே!''

என்பது முதற் பதிப்புப் பாடம்.

*(இல்லம் - வீடு. வறந்தகாலை - வான் வறந்த காலை, மழை பெய்யாத காலத்து. வெருளா - அஞ்சாத. மருளும் - மயங்கும்.*

cf. ''குறவரு மருளுங் குன்றத்துப் படினே.''

**(மலைபடுகடாம் 275)**

*கானல் - வெப்பம். பொறாது - பொறுக்காது. தீவிய - இனிய நையும் - வருந்தும். வரைவு இடன் - மணஞ் செய்யுமிடம். மல்-வளப்பம். மலைத்திடுதல் - பிரமித்தல். நிலைத்திணை - அசையாப் பொருள். நிகழ்த்துதி - க;றுவாய்.)*

*உஅ. யாறு - நதி. தீம்புனல் - இனிய நீரையுடைய. ஓவாது - நீங்காது, ஓயாமல். இழும் - ஒலிக்குறிப்பு. ஓதை - ஓசை. ஒழுகிடும் - ஓடும். முகிற் குழாம் - மேகக்கூட்டம். உறங்கும் - படிந்து கிடக்கும். நகம் - மலை; (அசையாதது). பிறந்து - உற்பத்தியாகி. தவழ்தரல் உற்று - தவழ்ந்து செல்லுதலைப் பொருந்தி. நவமணி - நவரத்தினம்; வைரம், பதுமராகம், வைடூரியம், கோமேதகம், நீலம், மரகதம், புஷ்பராகம், முத்து, பவளம் என்பனவாம். வேழவெண்*

## உகூ. வளி

வளியே! பரந்த வெளியி னுலவுறூஉம்
வளியே! ஒருகால் வழங்குத லின்றிப்
பக்குவத் தலான்வெளிப் படாவிறை போல்வை;
மூச்செனப் புகுவை; மூச்செனப் போவை;
தக்கவா சிறது தவழ்ந்து மெல்லெனத்
தென்றலங் காலாய் மன்றன் மணமளாய்
மக்களின் புறுவா னொக்க வியங்குபு
சாமரை மகளிர் தாமெனப் பொலிவை;
ஞாலந் தனிற்றீ நாற்ற மிக்குழி
யேலவே சூறையா யெழுந்தஃ தொழிய
மண்டிமேற் சென்று தண்டித் தோட்டுவை;
அம்ம! உன்போ லரசர்க ளெல்லாம்
வன்மையோ டமைதியும் வாய்ந்து
பலவகை மக்களி னலமுறக் காக்கவே.

---

*மருப்பு-யானையின் வெள்ளிய கொம்பு; யானைத்தந்தம். காழ்-வைரமுள்ள, முற்றின. அகிற்றுணி-அகிற் கட்டையின் துண்டம்.*

cf. யானை வெண்கோடு மகிலின் குப்பையும்.''

**(சிலப். 25-37)**

''வேழ வெண்மருப் பெறிந்துவெண் ணித்திலம் வரன்றிக்
காழ கிற்றுணி சந்தொடு கையரிக் கொண்டு.''

**(நைநதம் - நாட். 4)**

*கழங்கு-கழற்சிக்கொடிக் காய். எறிந்து-வீசி. தழங்கொலி-ஒலிக்கும் ஓசை.*

cf. ''நெடுவரை யியம்பு மிடியுமிழ் தழங்குகுரல்.''

**(மலைப்படு கடாம்-310)**

''தழங்குகுரன் முரசமொடு முழங்கும் யாமத்து''

**(அகநானூறு-24)**

*மேவி-பொருந்தி. செல்கதி-செல்லும் வேகம். பொழில்-சோலை. மரம் பெய்ம் மலர்-மரங்கள் சொரியும் மலர். அணிந்து-தரித்து. பல குளம் நிறைத்து:*

cf. ''கொங்கு யிர்த்தபூந் தடத்துலாய்க் குளம்பல நிரப்பி.''

**(நைடதம். நாட். 5)**

# XXIX. WIND

O WIND! careering now thro' open sky;
  O Wind! now guarding close thy tranquil state,-
  As KING that bides his time, and sits sedate,-
Thy mighty wings in peace enfolded lie!
A breath thou com'st, a breath thou passest by
  From balmy south, while perfumes round thee wait.
  Anon thy whisper makes men's hearts elate,
A gentle fan that soothes each sleeper's eye.
But should infectious airs that threaten death
  From foul malarious marsh malignant steal
To brood o'er homes of men with noisome breath,
  Thy whitling blasts rush forth the plague to heal;
So should he be earth's realms who governeth,
Mighty yet mild, guardian of subjects' weal.

---

*வளம் பெறவைத்து-வளமுண்டாகச் செய்து. கொழித்து-கரைகளிலொதுக்கி, தெள்ளிச் சொரிந்து.*

cf. "இனமணி கொழிக்கும் பரவை வெண்டிரை மேய்ந்து."
**(நைடதம். நாட். 1)**

*மன்னுறு-நிலையாப் பொருந்திய. என்னே, அம்ம: வியப்புப் பொருளன. மற்று-அசை. கொன்னே-வீணாக. குயிற்றல்-செய்தல். ஒருப்படாய்-சம்மதியாய், துணியாய்.*

cf. "வண்டுண மலர்ந்த கோதை வாயொருப் பட்டு நேர."
**(சீவகசிந்தாமணி - 587)**

*சிறைசெய்தல்-அணையிட்டுத் தடுத்தல்.*

cf. ஒழுகு தீம்புனல் சிறைசெயு மோதையும்."
**(நைடதம். நாட்.6)**

*இடர் இயற்றினும்-துன்பஞ் செய்யினும், புரக்கும்-காப்பாற்றும். சொல்கு-சொல்வேன்.*

*கூ. வளி-காற்று. பரந்த-விசாலமான.*

cf. "அகலிரு விசும்பு." (பெரும்பாண். 1)

*வெளி-ஆகாயம். உலவுறூஉம்-உலாவும். ஒருகால்-ஒரு சமயம். வழங்குதலின்றி-சஞ்சரியாமல். பக்குவத்து அலால்-பரிபக்குவ காலத்தல்லாமல். வெளிப்படா-புலப்படாத. இறைபோல்வை-கடவுளை யொப்பாய். புகுதல் போதல் இரண்டும் தேகத்தில் தக்கவா-தக்கவாறு, தகுந்தபடி. மெல் லெனத் தவழ்ந்து-மெதுவாய் அசைந்து. தென்றல் அம் கால்-அழகிய தென்*

## ங0. முகில்

முகிலே! மைந்நிற முகிலே! கடன்மகள்
பயந்மேகதவ! நயந்திவ் வுலகினைக்
குளிர்செய் ததனுயர்க் குழுவினை யென்றுங்
களிசெயுஞ் செய்ய கருவியே! அறத்தினுக்
காக்கமே! பொருளிற் கரும்பெறற் றுணையே!
போக்கரு வற்கடப் பொல்லா நோய்க்குநன்
மருந்தே! நீயெழுந் திருந்துவான் பொழிவது
தண்ணீ ரென்கோ? தயைமீக் கூர்ந்திழி
கண்ணீ ரென்கோ? கழைச்சா றென்கோ?
தீம்பா லென்கோ? தெள்ளமு தென்கோ?
ஏம்பலுற் றென்னுள மினைத்தென் றுணர்ந்தின்று.
அம்ம! நீ யொப்புர வாற்றுமா றறிந்தேன்.
எம்மையு மஃதே யென்கட
னெனக்குறிக் கொண்டே னெனக்குறு காட்டே!

---

*றற் காற்று. மன்றல் மணம்-நறுமணம். அளாய்-அளாவி, கலந்து. இன்புறுவான்-இன்பமடையும்படி. ஒக்க-பொருந்த. இயங்குபு-இயங்கி, சஞ்சரித்து. சாமரை மகளிர்-சாமரை வீசும் மகளிர். பொலிவை-விளங்குவாய். ஞாலந்தனில்-பூமியில். தீநாற்றம்-துர்வாசனை. மிக்குழி-மிகுந்த பொழுது. ஏல-பொருந்த. சூறை-பெருங்காற்று. அஃது ஒழிய-அந்நாற்றம் நீங்க. மண்டி மேற் சென்று-மிகுத்து மேலிட்டு வீசி. தண்டித்து-தண்டனை செய்து, ஈண்டுச் சிதறிப் போமாறு வீசி. ஓட்டுவை-விலகுமாறு நீக்குவாய். வன்மை-வலிமை. அமைதி-அடக்கம். வாய்ந்து-வாயப்பெற்று. பலவகை.... காக்க: மக்கள் பலவகையான இனிய நன்மைகளையுமடையக் காக்க; அன்றிப் பலவகைப்பட்ட மக்களின் நன்மைகளையும் பெரிதும் காக்க.*

''மூச்செனப் புகுந்து மூச்செனப் போந்து
மன்னுயி ரனைத்தையும் மன்னனிற் காப்பை,''

*என்றும்,*

''மண்டிமேற் சென்று தண்டத் தலைவனை
ஒப்பை! அம்மம்ம! உன்போல்
ஒப்புர வாளரு முளர்கொ லிவ்வயினே?''

*என்றும் முதற் பதிப்பிற் பாடங்கொண்டனர்.*

## XXX. THE CLOUD

O CLOUD! O dark-hued CLOUD! vast ocean's child!
Thou dost refresh, and to each living thing
New stores of growing gladness ever bring,
Brooding o'er earth as in compassion mild.
Of all earth's charities source undefil'd,
And of its garner'd wealth thou art the spring;
The medicine to heal dire famine's sting!
How shall thy gifts be imaged forth, how styled?
Refreshing waters? Tears in pity shed?
Rich cane's distillment? Milk from highest heaven?
Clear drops of gods' own living nectar given?
Of thy pure love such words I oft have said.
Through all my days, this is my grateful meed.
Thou art my PATTERN: thus I note thy deed.

---

*௩0. முகில்-மேகம். மைந்நிறம்-மையின் நிறம். கடல் மகள் பயந்த மகவு-கடலாகிய மங்கை பெற்ற குழந்தை. நயந்து-விருமுபி. குளிர்செய்து-குளிர்ச்சியுண்டாக்கி. உயிர்க்குழு-உயிர்க்கூட்டம். என்றும்-எப்பொழுதும். களிசெயும்-மகிழ்விக்கும். செய்ய-செம்மை வாய்ந்த. கருவி-கருவியாயிருப்பது; துணைக் காரணம். (ஆ்வுளளுசுகூஷிலிரள.)*

cf. "கருவி மாமழை" ***(நைடதம் 1.)***

*திருக்குறள்-வான்சிறப்பு அதிகாரத்தில், 'கடவுளதாணையான் உலகமும் அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற் கேதுவாகிய மழை,' என்று பரிமேலழகர் கூறியது நோக்கற்பாலது. இனிக், 'கருவி' தொகுதியெனப் பொருள் கொள்ளலுமாம்.*

cf. "கருவி வானந் தலைஇ யங்கு." ***(பறநானூறு. 159)***

*என்ற அடியில், 'கருவிவானம்' என்பதற்கு மின்னும் இடியும் முதலாகிய தொகுதியையுடைய மழையென்று அதன் உரையாசிரியரும்,*

"கருவி வானந் துளிசொரிந் தாங்கு," ***(பெரும்பாண். 24)***

"கருவி மாமழை கனைபெயல் பொழிந்தெவ,"

***(சீவக சிந்தாமணி. 2752)***

*என்ற இடங்களில் 'தொகுதியையுடைய' என்று நச்சினார்க்*

## ருக. காலை

உலகமா மங்கைதன் றலைவனாம் பரிதிகண்
டொல்லெனக் கீழ்த்திசை யொண்முகஞ் சிவந்து
மெல்லெனப் புள்ளொலி விளைத்துப் பாடி
அலக்கணொன் றின்றி மலர்க்கணி ருகுத்து
மாட்சிசேர் பொன்னுடை மகிழ்தந் துடுக்குமிக்
காட்சி யென்னே! காலைப் போழ்துகொல்?
பொன்னுல கேயிவண் மன்னிய தென்கோ?
மண்ணுல கிதுதான் விண்ணுல காகி
மிளிர்கின்ற தென்கோ? ஒளிர்கின்ற விறைவன்
பேரன் பதனா லாரின் புலகெழில்
பொன்மையிற் றீட்டிய நன்மைசேர் சித்திரப்
படமென மொழிகோ? பகருமிம் மாண்பெலாம்
உலகி னரசியி னுயரிய
நலசீ தனமோ? நாளந்தி யொளியோ?

---

*கினியரும்; சீவகசிந்தாமணி 1561ம் செய்யுளுரையில் அவரே, கருவித்தேன்' பாடமாயின். தொகுதித்தேன் என்க என்று கூறியதுங் காண்க. அறம்-தருமம். ஆக்கம்-செல்வம். பொருள்-அர்த்தம், செல்வம். பெறல் அரும் துணையென மாற்றுக. போக்கருமு-நீக்குதற்கரிய. வற்கடம்-பஞ்சமாகிய. பொல்லா நோய்க்கு-கொடிய பிணி நீக்குதற்கு. நன்மருந்து-நல்ல மருந்து. நீ வான் எழுந்து இருந்து-நீ ஆகாயத்தில் எழுந்து தங்கி. என்கோ-என்பேனோ. தயைமீக் கூர்ந்து இழி கண்ணீர்-கருணை மிகுந்த சொரியும் கண்ணீர். கழைச்சாறு-கரும்பின் ரசம். தீம்பால்-இனிய பால். தெள் அமுது-தெளிவாகிய அமிருதம். எம்பல் உற்று-கலக்கமடைந்து. என் உளம்-எனது மனம். இனைத்து-இத்தன்மையுடையது. உணர்ந்தின்று-உணரவில்லை. அம்ம-வியப்பிடைச்சொல். ஒப்புரவு-உபகாரம். ஆற்றுமாறு-செய்யும் விதம். எம்மையும்-எப்பொழுதும். இம்மை அம்மை உம்மை என்பனபோல எம்மையென நின்றது. அஃதே-ஒப்புரவாற்றுதலே. என் கடன்-எனது கடமை. எனக்குறிக் கொண்டேன்-என்று மனத்திற் பதித்துக் கொண்டேன். எனக்குறு காட்டு-எனக்குப் பொருந்திய எடுத்துக்காட்டு. எடுத்துக்காட்டு-உதாரணம் (Example). சண்டு 'மாதிரி' (Model, pattern) என்ற பொருளில் அமைந்தது.*

# XXXI. MORNING

What vision this! Is it the DAWN's soft hour?
Now the World-queen her spouse, the sun-espies
And looks forth blushing from the eastern skies,
Waking her choirs in every leafy bower.
Her opening lids distil a dewy shower,-
O not in grief! In glad gold garb she flies,
And fills all heaven with dulcet harmonies.
While earth to heaven is changed by magic power.
Is't glimpse of paradise to mortals shown?
Or doth Creation's Lord in love unfold,
Drawn with a pencil dipt in liquid gold?
A picture rare of happier worlds unknown?
These glories all, are they the World-queen's dower,
Or twilight of th' eternal morning-hour?

---

நக. காலை-விடியற்காலம், சிறுபொழுதைந்தனுள் (ஆறென்பாருமுளர்) ஒன்று. உலகமாமங்கை-பெருமை வாய்ந்த பூமிதேவி. பரிதி-சூரியன், தலைவன்-கணவன். ஒல்லென-விரைவுக் குறிப்பு. கீழ்த்திசை யொண்முகம்-கீழ்த்திசையாகிய ஒளிபொருந்திய முகம். சிவந்து-நாணத்தாற் சிவந்து. மெல்லென-மெதுவாக. புள்ளொலி-புட்களின் ஒலி. விளைத்து-உண்டாக்கி. அலக்கண்-துன்பம். ஒன்று-ஒரு சிறிதும். இன்றி-இல்லாமல். மலர்க்கணீர் உகுத்து-மலர்களில் உள்ள கள்ளாகிய நீரைச் சொரிந்து. மலர் போன்ற கண்களிலிருந்து நீரையுகுத்து என்பது சொற்போக்கு நயம். மாட்சி-பெருமை. பொன்னுடை-பொன்னிற ஆடை; இங்கு பொன்னிற ஆடையென்றது காலையிள வெய்யிலை. மகிழ்ந்து-மகிழ்வுடன். உடுக்கும்-தரிக்கும்.

என்னே-என்னென்று உரைப்பது; வியப்பு. காலைப்போழ்து கொல்-இதுவோ காலைப் பொழுது? பொன்னுலகு-சுவர்க்கம். இவண்-இங்கு. மன்னியது என்கோ-பொருந்தியது என்பேனோ? மண்ணுலகு இதுதான் விண்ணுலகு ஆகி மிளிர்கின்றது என்கோ-மண்ணுலகமாகிய இதுவே பொன்னுலகாக மாறி விளங்குகின்றது என்பேனோ? என்றது, நிலவுலகம் காலையிள வெயிலாற் பொன்னிறம் வாய்ந்து விளங்குவது நோக்கி. ஒளிர்கின்ற- விளங்குகின்ற. இறைவன்-கடவுள். பேரன்பு அதனால்-மக்கள் மாட்டுள்ள நிறைந்த அன்பால். ஆர் இன்பு உலகு எழில்-அரிய இன்பம் நிறைந்த உலகுகளின் அழகினை, பொன்மையிற் றீட்டிய-பொன்

## ௩௨. இரவு

ஞாயிறு மறைந்தது; நண்ணுபே ரமைதிய
மாயிரு ஞாலமேன் மதியொளி பொழிந்தது;
மின்னின விண்மீன்; துன்னின நள்ளிருள்;
மன்னின மனைதொறு மாவொளி விளக்கம்;
குவிந்தன தாமரை; அவிழ்ந்தன குமுதம்;
மல்லிகை முல்லை மலர்ந்து கமழ்ந்தன;
கூகை குழறின; கூத்தொலி கேட்டன;
கோக மொடுங்கின; குலவின சகோரம்;
வேலை செய்குந ரேலவலி பெற்றனர்;
களவு விரும்புந ரளவில்களி யெய்தினர்;
ஏழையேம் போலிய ரின்ப முற்றனர்;
இறுதிக் காலத் துறுதி காட்டுவோய்!
வாழிய! இரவே! வாழிய
ஊழி யூழியிவ் வுலகின் மேவியே!!

---

*னிறமுள்ள வர்ணத்தால் எழுதிய. நன்மைசேர்-அழகு பொருந்திய. சித்திரப்படாமென மொழிகோ-சித்திர மெழுதிய திரைச்சீலை எனக் கூறுவேனோ?*

*பகரும் இம்மாண்பு எலாம்-ஈண்டுக் கூறிய இச்சிறப்பு யாவும். உலகின் அரசியின்-உலகமாகிய தலைவியின். உயரிய நல சீதனமோ-உயர்ந்த நல்ல சீதனப்பொருளோ? நாள் அந்தி யொளியோ-நாளொடு நாள் சந்திக்கும் பொழுதாகிய சந்தியா தேவியின் பிரகாசமோ?*

*"ஒளிர்கின்ற வெங்கதிர்க், கற்றை மேற்படூஉக், காண்டகு பொன்னிறம், பெற்றதிப் பாரென்கோ? பிறழ்தருந் தோற்றப், பொன்மையிற் றீட்டிய நன்மைசேர் சித்திரப், படாமென்று மொழிகோ பரவையை, அடாநின்ற ஞாலநாளந்திப் போழ்தினே?" என்பது முதற் பதிப்புப் பாடம்.*

*(கற்றை-கிரணம். மேற்படூஉ-மேற்பட்டு. காண்டகு-அழகிய. தோற்றத்தையுடைய சித்திரப்படாமெனக் கூட்டுக. பரவை-கடல். அடாநின்ற-அடுத்து நின்ற. ஞாலம்-பூமி.)*

*௩௨. இரவு-இராத்திரி. ஞாயிறு-சூரியன். நண்ணு-பொருந்திய. பேர் அமைதிய-மிக்க அமைதியுள்ள. மாயிரு ஞாலமேல்-பெரிய நிலவுலகின்மேல். மதியொளி-சந்திரப்பிரகாசம். பொழிந்*

## XXXII. NIGHT

The sun is gone. The moon her tranquil light
   Sheds o'er world all steept in peace profound.
   The stars are twinkling. Shadows brood around.
In every homestead gleams the taper bright.
The lotus-flower is folded, but the lily white
   And jasmine ope their leaves with fragrance crown'd.
   List to the merry dancers' sprightly sound.
The owls, and birds of gloom come forth. From sight
Withdrawn, day's warblers seek their rest.
   The child of toil in sleep his strength repairs.
   The sons of earth awhile forget their cares.
Fierce joy, alas! now fills the robber's breast.
Hail NIGHT! Emblem of endless rest, all hail!
For ever thus o'er earth draw thy dark veil!

---

*தது-வீசியது. விண்மீன்-நக்ஷத்திரங்கள். மின்னின-ஒளி வீசின. நள்ளிருள்-செறிந்த இருள்.*

cf. ''நள்ளிருள் யாமத்து.'' ***(சிலப்பதிகாரம் 15-105)***

*என்ற பகுதியின் உரையில், 'செறிந்த இருளையுடைய வைகறை யாமத்தே' என்று பொருள் கூறுவர் அடியார்க்கு நல்லார். இது 'நளி' என்னும் உரிச்சொல். ஈறுகெட்டது எனக் கொள்க. மாவொளி விளக்கம்-மிக்க ஒளியையுடைய விளக்குகள். மனை தொறும் மன்னின-வீடுதொறும் பொருந்தின. தாமரை குவிதலும், குமுதம், மல்லிகை, முல்லை முதலிய மலர்தலும் மாலைக் காலத்தில் நிகழும். கமழ்ந்தன-மணம் வீசின. கூகை-கோட்டான். கூத்தொலி-கூத்தாடுபவர்களின் ஆரவாரம். கோகம்-சக்கிரவாகப் புள். இது பகற்பொழுதிலேயே சஞ்சரிக்கு மியல்பினது. சகோரம்-இதனை நிலாமுகிப் புள்ளென்பர்; சந்திரனொளியை உண்ணு மியல்பினதென்பர். இதனைப் பேராந்தையென்பர் பிங்கலாந்தையார். குலவின-சஞ்சரித்தன; செய்குநர்-செய்பவர். ஏல-மிகுதியாக. வலி-வலிமை. களவு விரும்புநர்-கள்வர்; களவுப் புணர்ச்சியை விரும்புபவர் எனினுமாம். அளவில் களி-அளவற்ற மகிழ்ச்சி. ஏழையேம் போலியர்-எளியேமைப் போன்றவர்கள். இறுதிக்காலம்-முடிவுக்காலம், மரண காலம். உறுதி-உறுவது. ஊழி-யுகமுடிவு; நீண்டகாலம், கற்பம். உலகின் மேவி-உலகத்திற் பொருந்தி.*

## ௩௩. துயில்

துயிலே! மனிதரின் றுணையே! இமையினி,
நயனுற நடிக்கு நலங்கனி நாரியே!
வியப்புறு காட்சி விந்தைசெய் தாயே!
வருந்திய மனக்குப் பொருந்திய மருந்தே!
விண்ணவர் தமக்கு மேவரி தாகி
மண்ணுல கினர்க்கு வாய்த்தபே ரமுதே!
உவகையி னூற்றே! கவலையின் பகையே!
ஊக்க முயர்த்தி யாக்க மளிப்பையால்.
உன்னைத் தணந்தா ரொருபொழு துய்வரோ?
நின்னியல் புணரா நீசரே யிகழ்வார்
கொடைநலங் கெடுக்குங் கொடும்பாவி மாரென
மடிகள்பாற் செல்லா வான்றகை விருந்தே!
கைத்தலந் துயற்றியெற் காப்பை
மெய்த்தொழில் செய்தியான் மேதக வெய்தவே.

---

௩௩. துயில்-தூக்கம். இமையினில்-கண்ணிமைகளில். நயன்உற-நன்மை உண்டாக. நடிக்கும்-கூத்தாடும். நலம்கனி-அழகுமிக்க. நாரி-பெண். வியப்புறு-வியக்கத்தக்க. காட்சி விந்தை செய்-பொய்யை மெய்யாகக் காட்டும் இந்திர ஜாலவித்தை செய்யும். 'வித்தை' விந்தை யென மெலித்தல் விகாரம் பெற்றது. மனக்கு-மனத்திற்கு. மருந்து-பரிகாரம். விண்ணவர்-தேவர். மேவரிதாகி-பொருந்துதற் கரியதாய். தேவர்கள் இமையா நாட்டமுடையா ராதலி னவர்க்குத் துயிலின் றென்றனர். மண்ணுலகினர்-மக்கள். வாய்த்த-சிறப்பாக வாய்க்கப்பெற்ற. பேரமுது-பெருமை மிக்க அமுதம். உவகை-களிப்பு. ஊற்று-களிப்பாகிய நீர் ஊறும் ஊற்று. கவலை-விசாரம். ஊக்கம் உயர்த்தி-முயற்சிமே லெழும் மனவெழுச்சியை மிகச் செய்து. ஆக்கம்-நன்மை. அளிப்பை-கொடுப்பாய். தணந்தார்-நீங்கியோர். ஒருபொழுது-ஒரு சிறு பொழுதிலும். உய்வரோ-பிழைப்பரோ, ஈடேறுவரோ. தூக்கமில்லாவிடில் உடல் நலங் குன்றி யழிதல் ஒருதலையாதலின் இங்ஙனங் கூறினர். நின் இயல்பு-உன் சுபாவத் தன்மை. உணரா-அறியா. நீசர்-கீழ்மக்கள். கொடைநலங் கெடுக்கும்-கொடுத்த பொருளின் அழகினைக் குலையச் செய்யும். கொடும்பாவியர் என-கொடிய பாவி

## XXXIII. SLEEP

O SLEEP! Thou solace sweet of human-kind!
Fairy that on men's eyelids dancest light!
Mother of wondrous mystic visions bright!
Choice balm to soothe the labouring mind!
Life's wasted energies thou dost repair.
Ambrosia poured o'er earthborn eyes alone,
To dwellers in the radiant heavens unknown
Fountain of joy and banisher of care!
Unvisited by thee, prey to all woes,
They scoff, who taste not rapture of repose.
To sloth, O heavenly guest, thou art not kin,
Thy gifts to abuse is sluggard's deadly sin!
Be mine the will each day its task to do,
And nightly in thine arms my powers renew!

English poets have vied with one another in praise of sleep, but Shakespeare's lines ever first recur: "Tired nature's sweet restored balmy sleep!'

---

*களென்று கருதி. மடிகள் பால்-சோம்பேறிகளிடம். தொழின் முயற்சி செய்பவர்களுக்கு நன்றாகத் தூக்கம் வருவதும் முயற்சியற்ற சோம்பேறிகட்குத் தூக்கம் வராமையும் கருதி, இங்ஙனம் தற்குறிப்பேற்றினர்.*

*கைத்தலம் துயிற்றி-உனது கைகளில் வைத்து உறங்கத் செய்து. எற்காப்பை-என்னைக் காப்பாற்றுவாய். மெய்த் தொழில் செய்து-தேகத்தாற் பாடுபட்டுத் தொழிலியற்றி. யான் மேதகவு எய்த-யான் மேம்பாடு அடைய. எய்தத் துயற்றிக் காப்பை என முடிக்க. வான் தகை விருந்து-தெய்விகத் தன்மையுடைய விருந்தாளி.*

''துயிலே! மாநுடர் துணையே! இமையினில்
நயனுறு நடிக்கும் நலங்கனி நாரியே!
வருந்திய மனக்குப் பொருந்திய மருந்தே!
விண்ணவர் தமக்கும் மேவரி தாகி
மண்ணுல கினர்க்கு வாய்த்தபே ரமுதே!
ஊக்க முயர்த்தி யாக்க மளிக்குறும்
அம்மையே! சுகந்தரு மனைத்தினுஞ் சிறந்ததே!
இம்மையிற் செம்மைசா லின்ப வூற்றே!
உன்னைத் தணந்தா ரொருபொழு துய்வரோ?

## ருச. பொழில்

பொழிலே! நறியபைம் பொழிலே! தாமரை
வாவியாம் பாங்கியோ டாவலிற் பயில்வோய்!
முகின்மணி மகுடமா மொய்குன்ற மீது
தளர்ந்த மாக்க ளுளங்களி கூர்ந்துறை
சோலையஞ் செல்வியே! துறுமதன் படைக்கலச்
சாலையே! மஞ்ஞையின் றனிநட வரங்கே!
தமியரா யெதிர்ப்படுந் தலைமக்க டம்மை
யிமையள வாம்பொழு தினிலினி தாக
அன்பு கொளுத்துறு மழகுசா லிடனே!
மருட்டுங் குழாத்தினை வெறுத்தியன் மாந்தர்க்
கிம்ப ரெய்திய வின்ப வுலகே!
களிப்புறு போழ்து கழியு மமைதியாய்;
நின்னிழ லுலவி நிகர்மலர்
கொய்த றனிமையோ? குறைவிலா மகிழ்வே.

---

நின்னியல் புணரா நீசரே யிகழ்வார்
செய்யவ டௌவையாச் செப்புநர் கருத்தென்?
செய்வ டன்னினுஞ் சிறந்தனை யென்பதே.
இகழ்ச்சியோ விதுதான் இயம்புதி;
புகழ்ச்சியே யன்றோ? பொருகவற் பகையே!''

*(செய்யவள் தௌவை-இலக்குமிக்குத் தமக்கை. தூக்கத்தை மூதேவி யென்பார் கூற்றை யெடுத்தோதியது. கவல் பகை-கவலைக்குப் பகை.) மேற்கண்ட பாடம் முதற் பதிப்பிலுள்ளது.*

*ருச. பொழில்-சோலை நறிய பைம்பொழில்-நல்ல மணம் உள்ள பசிய சோலை. வாவி-தடாகம். சோலையைத் தலைவி யாகவும் தாமரை வாவியைப் பாங்கியாகவும் கூறினர். ஆவலில்-அன்புடன் பயில்வோய்-விளையாடுவோய். முகின் மணி மகுடமா-மேகம் இரத்தின கிரீடமாக. மொய்க்குன்ற மீது-நெருங்கியுள்ள குன்றுகளின் மேல். தளர்ந்த மாக்கள்-வழிநடந்து களைப்புற்றவர்கள். உளங் களிகூர்ந் துறை-மனமகிழ்ச் சிமிக்குத் தங்கும். சோலை யம் செல்வி-சோலையாகிய அழகிய தலைவி. மதன் படைக்கலம் துறுசாலை-மன்மத பாணங்களாகிய மலர்கள் நெருங்கியுள்ள ஆயுதசாலையாகிய சோலை.*

# XXXIV. THE GROVE

O leafy GLADE, with fragrant verdure spread! the lake,
Where lotus blooms, thy comrade doth appear.
Soft cloudlets crown thee. Gentle hillocks near
Bear perfum'd bowers, where weary mortals take
Repose in shady grove, and Lowe doth make
His home. Bright peafowl vaunt their plumage here,
When youthful lovers tread thy precincts dear,
Swifter than thought what soft emotions wake!
Thou art an earthly paradise allow'd,
To those who pensive shun the "madding crowd'!
How tranquil here glide by the happy hours!
It is not solitude to wander lone
Within the chequered shade, and cull thy flowers;
Tis rapture only to thy votaries known.

---

*மஞ்சை-மயில். தனி-ஒப்பற்ற. நடஅரங்கு-நடனசாலை. தமியராய்-தனித்தவராய். எதிர்ப்படும்-தற்செயலாய்ச் சந்திக்கும். தலைமக்கள் தம்மை-தலைவன் றலைவியரை. இமையளவாம் பொழுதினில்-கண்ணிமைக்கும் நேரத்தில், க்ஷணத்தில். இனிதாக-இன்பமுண்டாக. அன்பு கொளுத்துறும் அழகுசால் இடன்-காதலை மூட்டும் அழகு அமைந்த இடம். மருட்டுங்குழாம்-மதி மயங்கிய மூடர்களின் சமூகம். குழாம்-கூட்டம். வெறுத்து இயல் மாந்தர்-வெறுத்துவிட்டு விலகும் மாந்தர். இம்பர் எய்திய-இவ்வுலகிற் கிடைத்த. இன்பவுலகே-போக பூமியே. களிப்புறு போழ்து கழியும்-களிப்படையுங் காலம் எளிதில் நம்மையறியாமல் கழிந்து போகும். அமைதியாய்-அமைதியுற்ற இடமே. நின் நிழல் உலவி-உனது நிழலில் உலாவி. நிகர் மலர் கொய்தல்-ஒளிவிடும் மலரைப் பறித்தல்.*

cf. ''நீர்வார் நிகர்மலர் கடுப்ப.'' ***(அகநானூறு. 11)***
''நிகர்மலர் நெல்லொடு தூஉய்.'' ***(சிலப்பதிகாரம். 9-2)***

*தனிமையோ-தனிமையாகக் கூறப்படுமோ. குறைவிலா மகிழ்வே-குறைவில்லாத இன்பப் பொருளே. குறைவிலா மகிழ்வு-பரிபூரணாநந்தம்.*

''முகின்மணி மகுடமா நகில்செய் குன்றமா
மருத மண்டபத்து ளரசுவீற் றிருக்குஞ்
சோலையஞ் செல்வியே,''' என்பதும்,
''இன்பப் பொருளே! இம்பரமெய்திய

## ௩ரு. மலர்

மலரே! மலரே! என்மன மலர
மலரு மலரே! மலஞ்செறி மனமும்
நின்னைக் காண்புறி னின்மல மாகுமே!
பைந்தமிழ் நாடெலாம் பனிமண முயிர்ப்போய்!
'என்னைப் படைத்தோ னென்விழை வளிப்பான்!
இன்பப் பொருளொன்று மில்லையென் னான்' எனத்
துன்பப் பேயினைத் தொலைத்தறி வுறுப்பை.
நின்னைக் காண்டொறு மென்னுயிர் குதிகொளும்;
நிலத்தின் மகளே! நேசத் தலைவியே!
என்னை நோக்கி யிளநகை புரிதியோ?
உன்னை மேவி யொருமுத்தங் கொள்வல்.
நின்னிற் களித்தேன்; நின்னதே யென்னுளம்.
பேணுமின் னெணநினிற் பிறந்த; நின்
அன்பனை யிகழேல் அமைந்தமென் மலரே!

---

ஆநந்த வுலகே! தேனந்து காவே!
பிறராற் காக்கப் பெறுவ தன்றியும்
பிறரைக் காக்கும் பெற்றியாற்
காவெனப் பெற்றையோ? தூவலர்ப் பொதும்பரே!''

என்பதும் முதற் பதிப்புப் பாடங்கள்.

*(நகில்-தனம். செய்குன்றம்-விளையாடுதற்குச் செய்யப் பட்ட குன்றங்கள். தேன் நந்து கா-தேன் மிகுந்துள்ள சோலை. பெற்றி-தன்மை. பெற்றை-பெற்றாய். தூவலர்- பரிசுத்தமான மலர். பொதும்பர்-சோலை)*

*௩ரு. மனம் மலர-மனம் மலர்ச்சியடைய. மலம் செறி-குற்றம் மிகுந்த. மலம்-ஆணவம், மாயை, கன்மம். இவற்றை மும்மல மென்ப. இனி 'மலம்' குற்றமெனக் கொண்டு, காமம் வெகுளி மயக்கமெனலுமாம். காண்புறின்-கண்டால். நின்மலம்-அழுக் கற்றது, பரிசுத்தமானது. பைந்தமிழ் நாடெலாம்-கன்னித் தண்டமிழ் நாடெங்கும். பனிமணம்-குளிர்ந்த நறுமத்தை, உயிர்ப்போய்-வீசுவோய். என்னைப் படைத்தோன்- கடவுள். என் விழைவு-எனது விருப்பத்தை, யான் விரும்பிய வற்றை. அளிப்பர்-கொடுப்பான். இன்பொருள் ஒன்றும் இல்லை யென்னான்-இன்பந்தரும் எப்பொருளையும் இல்லை யென்று மறுக்கான். என-*

## XXXV. FLOWERS

O FLOWER, fair FLOWER, whose tender leaves expand!
My heart expands too, holy thoughts arise;
Fancies impure fade from my gazing eyes.
Breather of fragrance o'er this Tamil land,
No griefs thy voiceless pleading can withstand:
"Who clothed me thus my every want supplies,
And naught of gladness to my life denies.'-
My soul upsprings touched by enchanter's wand!
Sweet daughter of the earth, fair mistress mine!
I deem thou woo'st me with thy gentle smile,
Thou draw'st my lips to thee with subtle wile.
Ah yes! I joy in thee; my heart is thine.
All softest, tenderest thoughts with thee are born;
Nor do thou, gentle flower, thy lover scorn!

---

*என்று சொல்லி, துன்பப் பேயினை-துன்பமாகிய பேயை. தொலைத்து-அழித்து, ஓட்டி. அறிவுறுப்பை-எனக்கு அறிவுறுத்துவாய்.*

*காண்டொறும்-பார்க்குந்தோறும். உயிர்-ஆன்மா. குதி கொளும்-கூத்தாடும். நிலத்தின் மகளே-நிலமகளின் பெண்ணே. நேசத் தலைவியே-அன்பிற்கிடனாகிய தலைவியே, காதலியே. இளநகை-புன்னகை. புரிதி-செய்வாய். ஈண்டு மலர் நகைத்தல் மலர்தலாம்., மேவி-அடைந்து, விரும்பி எனலுமாம். கொள்வல்-கொள்வேன். நின்னில்-நின்னால். என்னுளம் நின்னதே-என்மனம் நின் வயப்பட்டதே. நினில்-உன்னால். பேணும்-விரும்பும். இன் எணம்-இனிய எண்ணங்கள், இனிய கருத்துக்கள். பிறந்த-தோன்றின. நின் அன்பனை-உன்பால் அன்புள்ள என்னை இகழேல்-இகழாதே. அமைந்த மென்மலர்-மென்மை அமைந்த மலரே. நான்காவது வரிமுதல்,*

''மன்னிய பைந்தமிழ் மணங்கூர் மலரே!
துன்பப் பேயினைத் தொலைக்கும் பொருளே!
இன்பமே திரண்டோ ரின்னுரு வெடுத்த
தென்னுஞ் சிறப்புட னெழில்கொளு மலரே!
நின்னைக காண்டொறும் நெஞ்சங் குதிகொள்
கின்றது! மகிழ்ச்சி துன்றிப் பொங்கித்
ததும்பு கின்றது! விதும்பலு முற்றேன்.

## ஙசா. புள்

புள்ளே! மென்சிறைப் புள்ளே! பலவகை
வண்ணமும் வாய்ந்த வனப்பும்யா னறிவல்.
எண்ணிய வெண்ணமு மென்கொலோ? அறியேன்.
நீயுமின் புறுவை; நின்னிசை யதனான்
ஏனைய வுயிர்க்கு மின்பஞ் செய்குவை.
வேண்டுழிச் செல்வை; வேண்டுந புரிவை;
வஞ்சகஞ் செய்துநின் வான்செல றகைத்து
நினக்கு வருத்த நினைத்து விளைத்தலிற்
களிப்பர்; அந்தோ கண்ணில்புன் மாக்கள்!
ஐயகோ நின்னை யருமையிற் பேணார்;
வெய்ய கணைகொடு வீழ்ப்பர்; அதாஅன்று
மிருக மெனக்களீஇ மிசைவர் நின்றசை
இன்ப வுருவினோய்! எளியரை
வருத்திய வலியரை வருத்துந் தெய்வமே.

---

உன்னை மேவி யொருமுத் தங்கொள.
என்னை நோக்கி யிளநகை புரிதியோ?
மெல்லிய மலரே! விளம்புதி
புல்லறி வாளனாம் பொய்ம்மை யேற்கே,''
என்பது முதற்பதிப்புப் பாடம்.

*ஙசா. புள்-பறவை. மென்சிறை-மெல்லிய சிறகுடைய. வண்ணம்-நிறம். வனப்பு-அழகு. அறிவல்-அறிவேன். எண்ணிய-நீ கருதிய. என்கொல்-யாதோ. இன்புறுவை-களிப்படைவாய். இசை-பாட்டு. ஏனைய-பிற. செய்குவை-செய்வாய். வேண்டுழி-வேண்டுமிடம். செல்வை-செல்வாய். வேண்டுந-விரும்பியவற்றை. புரிவை-செய்வாய். வஞ்சகம்-கபடம். நின்-உனது. வான் செலல் தகைத்து-ஆகாயத்துப் பறத்தலைத் தடுத்து. நினைத்து விளைத்தல்-தெரிந்து செய்தல். அந்தோ-இரக்கக் குறிப்பு. கண்ணில் புன்மாக்கள்-கண்ணில்லாத அற்ப புத்தியுள்ள மனிதர்கள். கண்-தாக்ஷண்யம்; தயை.*

cf ''கண்ணின்று கண்ணறச் சொல்லினும்.''
**(திருக்குறள்-184)**

*புன் மாக்கள்-கீழோர். பேணார்-விரும்பார். பாதுகாவாரெனினுமாம். வெய்ய கணைகொடு-கொடிய அம்புகொண்டு.*

## XXXVI. BIRDS

Bright BIRD, on pinion soft upborne! I know
Thy beauteous form and colours manifold.
But thought thou thinkest is to me untold;
Thou art all joy, and joy of all below!
Thou fittest everywhere at thy sweet will
Rajoicest ever, with the tuneful voice
Of thy sweet music biddest all rejoice.
Dost evermore thy every wish fulfil
Alas! unmindful of thy precious worth,
Men pitiless delight to give thee pain,
With cunning wile the aery flight restrain.
Their swift-winged arrows bring thee to the earth!
And some thy flesh devour with savage joy:
Surely avenging fate must these destroy!

---

*வீழ்ப்பர்-அடித்து வீழ்த்துவார். அதாஅன்று-அதுவேயுமன்றி. மிருகமென-விலங்குகள் போல. களீஇ-களித்து. நின் தசை மிசைவர்-உனது மாமிசத்தை யுண்பார். மிசைதல்-உண்ணுதல். இன்ப உருவினாய்-இன்பமே யுருவாகக் கொண்டோய். 'எளியரை வருத்திய வலியரைத் தெய்வமே வருத்தும்; 'எளியாரை வலியரடித்தால் வலியாரைத் தெய்வ மடிக்கும்,' என்னும் பழமொழி நோக்கிக் கூறியது.*

cf. 'எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பின்
அளியறத் தெய்வம் வாட்டும்.''

***(காஞ்சிப் புராணம்-வைரவர் துதி.)***

''புள்ளே! மென்சிறைப் புள்ளே! பல்வகை
வண்ணமும் மேவிய வனப்புடைப் பறவாய்!
எண்ணிய வெண்ணமு மென்கொலோ? அறியேன்.
தானுமின் புற்றுத் தன்னிசை யதனான்
ஏனைய வுயிர்க்கு மின்பஞ் செய்குவை;
வேண்டுழிச் செல்வை; வேண்டுந புரிகுவை;
வேண்டா வென்றுநீ விழைசெயல் தகைக்குநர்
ஈண்டுச் சிலருளர். இன்ப வுருவினோய்!
கவற்சிகொண் டுழலுமக் கண்ணில்புன் மாக்கள்
ஐயகோ! நின்னை யருமையிற் பேணார்;
வெய்ய கணைகொடு வீழ்ப்பர்; அதான்று

## ஙஎ. காமம்

காமமே சுடுதீக் காமமே! கரந்துநின்
றுளத்தைச் சுற்றி யுழலுறும் புகையே!
பற்றென் கணிகையர்ப் பெற்றதாய்க் கிழவீ!
மெய்ம்மை யொளியினை மிகவு மறைக்கும்
மாசுறு திரையே! மனத்தைத் தளையிடுங்
கொடுங்கோல் வலனே! நடுங்குதுயர்ப் பேயே!
வழிமருட் டிக்கொடு விழனெறிச் செலுத்திநல்
லுள்ளத் துறுபொருள் பொள்ளெனக் கவர்வோய்!
நின்கையிற் பட்டு நிருபரெத் துணையரோ
நன்கறந் துறந்தனர்; நங்கைய ரெனையரோ
ஈன மெய்தினர்; ஞான முனிவரர்
மேனிலை குன்றினர்; வேறென்?
நினைத்தீக் குணனே! நினைத்தலுந் தீதே.

---

நெய்பெய் தட்டுநிற் குய்ம்மணங் கமழ
எயிற்றிடை மென்று வயிற்றின்
இட்டு நாடொறுங் கெட்டுலை வாரே.''
என்பது முதற்பதிப்புப் படாம்.

*(விழை-விரும்பும். தகைக்குநர்-தடுப்பவர். நெய் பெய்து அட்டு-நெய் சொரிந்து சமைத்து. நின்-நின்னை. குய்ம்மணம்-தாளிப்பின் வாசனை. எயிறு-பல்.)*

*ஙஎ. சுடுதீக் காமம்-சுடுகின்ற தீப்போன்ற காமம். கரந்து-ஒளித்து. உழலுறும்-சுழலும். பற்று-ஆசை. பற்று என் கணிகையர்ப் பெற்ற-ஆசையாகிய கணிகையரை யீன்ற. மெய்ம்மையொளி-சத்தியமாகிய பிரகாசத்தினை, மாசுறு-அழுக்கு மிகுந்த. திரை-திரைச்சீலை. தளையிடும்-விலங்கிட்டுப் பிணிக்கும். கொடுங்கோல் வலன்-வலிய கொடுங்கோன் மன்னன். நடுங்குதுயர்ப் பேய்-நடுங்குதற்குக் காரணமான துயரத்தைச் செய்யும் பேய். வழிமறித்து அடிக்கும் இழி தொழில் ஆளர்-வழிச் செல்வோரை மறித்து அடித்துப் பறிக்கும் இழிந்த தொழிலைச் செய்வோர்.*

## XXXVII. LUST

O LUST, thou scorching flame, whose smoky cloud
The soul in blinding shadows doth enfold!
Of earthborn fond desire thou mother old!
Thy filthy veil doth truth's pure light enshroud.
A demon foul the capitve soul to bind;
A tyrant-power enslaving human mind;
Fierce robber that besets the traveller's way,-
By thee beguiled do men bewilder'd stray,
Despoil'd of all their treasur'd precious things!
Led by thy treacherous hand what lines of kings
Have grace forgone! Full many a maiden's face,
Hast thou besmirch'd with loathy dire disgrace.
Low hast thou laid e'en ,men of high degree.
Thou pest! 'tis foulness but to think of thee!

---

*விழிமருட்டி-விழியால் மருட்டி. கொடு விழல் நெறி-விழலைப் போலும் பயனில்லாத கொடிய வழியில். நல் உள்ளத்து உறுபொருள்-நன்மை பொருந்திய மனத்தில் உள்ள பொருள்களை. பொள்ளென-விரைவுக் குறிப்பு.*

*பட்டு-அகப்பட்டு. நிருபர்-அரசர். எத்துணையரோ-எவ்வளவோ பெயர். நன்கு அறம் துறந்தனர்-நல்ல தருமத்தைக் கைவிட்டனர். நங்கையர்-மாதர்கள். எனையோர்-எவ்வளவோ பெயர். ஈனம் எய்தினர்-பழியடைந்தனர். ஞான முனிவரர் -ஞானத்தையுடைய முனிச்சிரேஷ்டர்கள். மேல் நிலை குன்றினர்-உயர்நிலை தவறிப் பெருமை குறைந்தனர். வேறென்-இனி வேறாயுரைப்பதியாது? தீக்குணனே-தீயகுணமே. நினை நினைத்தலும் தீது-உன்னைப் பற்றிச் சிந்தித்தலுந் தீமையைத் தரும். நினைத்தலும் தீது எனவே, பேசலானும் மேற்கொள்ளலானும் உண்டாகும் தீமை அளவில என்பதாயிற்று.*

*(4-6): ''அறிவி னொளியை யறவே மறைக்கும், மாசின் படலமே! பாசத் தளையினைப் பூட்டி யாட்டிடும் பொல்லாப் பேயே!'' என்பது முதற் பதிப்புப் பாடம். 'விழனெறி' என்பதற்கு, 'வீணெறி' என்பதும் பாடம்.*

## ஙஅ. வரைவின் மகளிர்

ஆடலு மழகும் பாடலுஞ் சான்றீர்!
இன்னிசைக் குயில்காள்! பன்னருங் கலைவலீர்!
நும்வலைப் பட்டோர் நுமைத்தெய்வ மென்பர்
நுந்தமக் கோர்சொல்; சிந்தை செய்ம்மினோ
வாய்ப்பரு நலனெலாம் வாய்க்கப் பெற்றீர்!
என்கொ லவற்றைப் புல்லிடை யுகுக்கின்றீர்?
தூய வில்லறக் கோயி லில்லைகொல்?
இன்னற மணியெனு மியற்கை நலத்தீர்!
அதனொளி மழுங்கி யழித லெவனோ?
வீழ்ந்த மகளிர்காள்! விரைவினி லெழுமின்;
ஆழ்ந்திடா தின்வே யறிவுகைப் பற்றுமின்.
இழிந்தார் புகழுரை யேற்றுக் கொள்ளலிர்.
இன்புடன் மேவி யில்லறத்
தினிது வாழிய! எங்கை மீரே!

---

*வரைவு-மணம்; இல்-இல்லாத; மகளிர்-மாதர். எனவே பதியிலாராகிய கணிகையரை உணர்த்திற்று. சான்றீர்-அமையப் பெற்றவர்களே. இன்னிசைக் குயில்-இனிய இசைபாடுங் குயில் போன்றவர். இசைபாடுதலாற் குயிலனையர் என்றது. பன்னருங்கலைவலீர்-பன்னுதற்கரிய பல கலைகளிலும் வல்லவர்களே. பரத்தையர் ஆடவரை மயக்கற்கு வேண்டிப் பல கலைகளிலும் வல்லுநராயிருப்பது இயல்பு. முற்காலத்தில், பரத்தையர்கள் தமக்குரினவாய்க் கற்கும் கலைகள் அறுபத்து நான்கு என்று பழைய நூல்கள் கூறும்.*

cf. ''யாழ்முத லாக வறுபத் தொருநான்
கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக்
கலையுற வகுத்த காமக் கேள்வி.''

**(பெருங்கதை. க.ஙரு: அச-அசா.)**

''கலைவலார் நெஞ்சிற் காமமே போன்றும்.''

**(சீவக சிந்தாமணி-2107)**

''பண்ணுங் கிளையும் பழித்த தீஞ்சொ
லெண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்.''

**(சிலப்பதிகாரம். கச. 166-167)**

## XXXVIII. WANTONS

In dancing and singing and beauty ye shine
   Like nightingale's your voices sweetly sounding,
   In every winsome art and wile abounding;
Till silly men enchanted deem you half divine!
Ponder, I pray, one little word of mine:
   I own the charms your dazzling forms surround;
   Why are they lavished where no grace is found!
Is there for you no holy household shrine!
Nature adorns you,-virtue's brigter gem,
   Why is its radiance lost in lives impure!
   Ye fallen rise! Grasp wisdom's kindly hand!
   The base many flatter, hearken not ot them.
Come forth! A homely happy place secure,
In love unfeigned I bid you, sister-band!

---

''எண்ணான் கிரட்டி யிருங்கலை பயின்ற
................. மடந்தையர்.'

*(சிலப்பதிகாரம் 22:138-139)*

''வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவம்
பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலுந்
தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலுங்
கந்துகக் கருத்து மடைநூற் செய்தியுஞ்
சுந்தரச் சுண்ணமுந் தூநீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமுங்
   காயக் கரணமுங் கண்ணிய துணர்தலுங்
கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியு மலராய்ந்து தொடுத்தலுங்
கோலங் கோடலுங் கோவையின் கோப்புங்
காலக் கணிதமுங் கலைகளின் றுணிவு
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
வோவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையுங்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை.''

*(மணிமேகலை 2.18-32).*

*நுமவலைப்பட்டோர்-நீர் ஆடவரைப் பிடிக்க விரிக்கும் வலையில் அகப்பட்டோர். நுமைத் தெய்வமென்பர்-உங்களைத்*

## ௩௯. வெகுளி

வெகுளித் தீயே! வெகுளித் தீயே!
துறக்கு மனத்தையுங் கறக்குங் காற்றே!
உற்ற குணக்கல னெற்றுஞ் சுறவமே!
உடற்பெரும் புற்றினின் றுடன்றெழு மரவே!
தெள்ளிய வறிவின ருள்ளப் பைம்புலைப்
பொள்ளெனக் கறித்தழி புன்றீ விலங்கே!
வீட்டுநூல் வலரையு மாட்டிடும் பேயே!
சேர்ந்தார்க் கோறல் சார்ந்த கடுவே!
'தீயரைக் காணிற் சேயரா யொதுங்குக'
என்ற முதுமொழி நன்றென வோர்ந்தனென்;
நீயுந் தீயோய் தூயை யல்லையால்;
ஆதலின் விலகிப் போதுவல் யானும்.
நன்னெறி யொரீஇப் புன்னெறிச்
செலுத்துந் தன்மைய சிறுபைத் தியமே!

---

தெய்வமென்று புகழ்வர். சிந்தை செய்ம்மின்-சிறிது ஆலோசியுங்கள். வாய்ப்ப அரும் நலமெலாம் வாய்க்கப் பெற்றீர்-கிடைத்தற்கரிய நல்ல பண்புகளெல்லாம் பெற்றுள்ளீர். என்கொல்-ஏனோ. அவற்றை-அந்நலன்களை. புல்லிவை உகுக்கின்றீர்-பற்களின் இடையே சொரிந்த பால் போல வீணாக்குகின்றீர்கள். தூய இல்லறக் கோயில் இல்லைகொல்-பரிசுத்தமான இல்லறமாகிய கோவில் உங்களுக்கு இல்லையோ. இன் அற மணி எனும் இயற்கை நலத்தீர்-இயற்கையால் அழகுற அமைந்த இனிய அறமென்னும் இரத்தினத்தை உடையீர்.

அதன் ஒளி மழுங்கி அழிதல் எவனோ-அம்மணியின் பிரகாசம் குன்றி நீங்குவது ஏனோ. வீழ்ந்த-உயர்நிலையினின்று கீழ் வீழ்ந்த எழுமின்-எழுந்திருப்பீராக. ஆழ்ந்திடாது-பாவமாகிய கடலில் மூழ்கிப் போகாமல். அறிவு கைப்பற்றுமின்-ஞானத்தைக் கைப்பிடித்து நற்கதியாகிய கரையைச் சேர்மின். இழிந்தார்-தாழ்ந்தோர். புகழ்உரை-உங்களைப் புகழும் வார்த்தைகளை. ஏற்றுக் கொள்ளலிர்-கேளாதீர். இல்லறத்து இன்புடன் மேவி இனிது வாழிய-இல்லறத் துறையை இன்பத்தோடு சேர்ந்து நன்றாக வாழ்விராக. எங்கைமீர்-எனது தங்கையரே.

# XXXIX. WRATH

O WRATH, fierce WRATH! thou devastating flame.
Afflicting souls that all things else can tame.
Thou swordfish piercing virtue's goodly bark!
Snake lurking in the body's ant-hill dark!
Wild beast that rushing sudden from its lair,
Of wisest souls lays waste the pastures fair!
Demon that haunts e'en saints who seek heaven's joys!
Poison that where it enters all destroys!
"From evil flee thou far," is ancient saw,
In thy case, WRATH, I take it for my law.
My sould from every angry thought I'd free.
"Passion's a madness brief,' and leads astray,
From path of good through every evil way.

---

(5-14): ''வாய்ப்பரு நலனெலாம் வாய்க்கப் பெற்றும்
என்கொலோ நீவிர் புன்றொழின் மேற்கெண்டீர்?
பொதுமகளி ரென்னுமப் பொல்லாப் பெயரினைக்
கதுமென வொருவுமின்; கடிமணம் பூண்டு
சிறப்பு மகளிராய்ச் சிறப்பினை யெய்துமின்.
வீழ்ந்த மகளிர்காள்! விரைவினி லெழுமின்;
ஆழ்ந்தழி யாதினே யறிகலன் பற்றுமின்.
இற்றை ஞான்றுசில் லெய்யாப் புல்லர்போல்
அருளில னொன்றும் அறையயேன்.
மருளிற் றிர்துநீர் வாழிய! மாதோ.''

என்பது முதற் பதிப்புப் பாடம்.

*(புன் தொழில்-இழிந்த தொழில், தீவினை. கதுமென-விரைவில். ஒருவுமின்-நீங்குங்கள். கடிமணம்-காவலைத் தரும் விவாகம். பொது மகள்-பலர்க்கும் பொதுவாகிய மகள், பரத்தை. சிறப்பு மகள்-ஒருவனுக்கே சிறப்புரிமையாக வாழ்பவள். அறிகலன்-அறிவாகிய மரக்கலம். இற்றை ஞான்று-இக்காலம். எய்யாப் புல்லர்-அறம் அறியாத தாழ்ந்தோர். அருளிலன்-கருணையில்லாதவனாய்; (முற்றெச்சம்). அறையேன்-கூறேன். மருளிற்றீர்ந்து-மயக்கம் நீங்கி. வாழிய-வாழ்வீராக.)*

ஙகூ. வெகுளி-கோபம். வெகுளித் தீ-கோபாக்கினி.

cf. ''சின மென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி,''

*(திருக்குறள். 306)*

## சO. மயக்கம்

மயக்க விருளே! மயக்க விருளே!
தியக்க மென்னுஞ் சிறையகப் படுமுயிர்
தப்பியே காவகை தகைக்குங் கதவமே!
குரவர் திறந்தினி துரனுறக் காட்டிய
வறிவு விழிகளை யறமறை மாசே!
புல்லி யுளக்குகை புகும்புன் கூகாய்!
நல்ல நெறியினை நாடுபு மாணவர்
செல்லுழிக் குழறுந் தீய வியல்பினை.
பொய்மெய் யாகவு மெய்பொய் யாகவுந்
தருபொலா முகுரமே! தரையிடை யெறிந்துனைத்
தகர்ப்பல்; தூய தனிப்பளிங் கெனது. நீ
உண்மை யொளிர்வுழி யண்ம லெவன்கொலோ?
விரைந்தொழி; வீணின் மறைக்கலை;
மெய்ப்பொருள் வான்மகட் கைப்பிடித் துய்வலே.

---

*என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகர், சினமென்னும் நெருப்பு என்று பொருள்கூறிப் பின், சேர்ந்தாரைக் கொல்லி (ஆச்ருதஹரி) யென்பது ஏதுப்பெயர்; தான் சேர்ந்த விடத்தைக் கொல்லுந் தொழிலது; சினமென்னும் நெருப்பு என்றதால், உலகத்து நெருப்புச் சுடுவது தான் சேர்ந்த இடத்தையே இந்நெருப்புச் சேராத விடத்தையும் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது; என்று கூறிய குறிப்பு ஈண்டு நோக்கற்பாலது. துறக்கும் மனம்-துறவிகளின் மனம். கறக்கும்-சுழற்றும். உற்ற-பொருந்திய. குணக்கலன்-நற்குணமாகிய மரக்கலத்தை. எற்றும்-மோதும். சுறவம்-சுறாமீன். உடற்பெரும் புற்றினின்று-உடலாகிய பெரிய புற்றினிடமிருந்து. உடன்று எழும் அரவு-சீற்றத்தோடு மேல் எழும் பாம்பு. தெள்ளிய அறிவினர்-தெளிந்த அறிவினையுடையார். உள்ளப் பைம்புலை-மனமாகிய பசிய புல்லை.*

*பொள்ளென-விரைவில். கறித்து அழி-கடித்து அழிக்கும். புன் தீ விலங்கு-இழிந்த தன்மையுடைய கொடிய மிருகம். வீட்டுநூல் வலர்-மோக்ஷசாதனமான நூல்களில் வல்லவர். ஆட்டிடும் பேய்-தன் வசமாக்கி யாட்டும் பேய். பேய்-தான் கெட்டது மின்றிச் சேர்ந்தோரையும் கெடுக்கு மியல்பின்து. சேர்ந்தார்க் கோறல்-சேர்ந்தாரைக் கொல்லுதல். இது முன்பு விளக்கப்பட்டது. தீய*

## XL. MENTAL CONFUSION

Gloom of bewilder'd mind! The vision clear
Shrouding from mortal sight, veiling the gate
Whence issues glad the soul emancipate;
Obscuring holiest eyes with darkness drear,
Though taught by lessons of th' enlightend seer.
In the heart's murky den like blinded owl,
Thou lurkest aye, breathing contagion foul,
And fill'st ev'n sages' hearts devout with fear.
Like magic mirror changing all we view,
Thou show'st the true as false, the false as true.
I dash thee down,-the crystal pure be mine!
Why should delusion be where truth doth shine?
In vain thou striv'st the light of life to hide;
I claim my soul's immortal heavenly bride.

---

*ரைக்காணிற் சேயராய் ஒதுங்குக-'துஷ்டரைக் கண்டால் தூர விலகு.' முதுமொழி-பழமொழி. நன்றென வோர்ந்தனென்-நன்றென்று அறிந்தேன். தூயை அல்லை-பரிசுத்த முடையையல்லை. ஆல்-அசை. போதுவல்-போவேன். ஒரீஇ-ஒருவி, நீங்கி. புன்னெறி-தீயவழி. தன்மைய-தன்மையை உடைய. சிறுபைத்தியம்-*'Anger is short madness' *என்பது பற்றிக் கூறியது.*

*(5-6): ''தெள்ளிய வறிவின ருள்ளத் தடத்தையும், பொள்ளென வுழக்கும் புல்லிய கடாவே!'' என்பது முதற்பதிப்புப் பாடம். (தடம்-தடாகம். கடா-எருமைக்கடா.)*

*40. மயக்கம்-பொய்யை மெய்யென்று மயங்கும் அறிவின்மை. மயக்க இருள்-மயக்கமாகிய இருள்; அஜ்ஞானத்தை அந்தகாரமென்ப. தியக்கம்-மனக்கலக்கம்; தடுமாற்றம். சிறை-சிறைச்சாலை. அகப்படும்-உள்ளே சிக்கிக்கொள்ளும். ஏகாவகை-போகாவண்ணம். தகைக்கும்-தடுக்கும். கதவம்-கதவு. குரவர்-ஆசிரியர். இனிது-செவ்வையாக. உரன்உற-வலிமை பொருந்த. அறிவுவிழி-ஞானநேத்திரம். அறமறை மாசு-முற்றிலும் மறைக்கும் களங்கம். உளக்குகை-மனமாகிய குகையில். புல்லி-பொருந்தி. புன்கூகாய்-இழிந்த கூகையே. கூகை-கோட்டான். அறிவுவிழி யற்ற மயக்கத்திற்குப் பகற் குருடாகிய கூகை நன்குவமையாக நின்றது.*

*நல்ல நெறி-சன்மார்க்கம். நாடுபு-நாடி. மாணவர்-மாணாக்கர். செல்லுழி-செல்லும்பொழுது. குழறும்-கூவும். மயக்கமுங்*

## சக. திருவள்ளுவர்

தாழ்குலத் துதித்ததன் வாழ்குரு வாகிய
வள்ளுவப் புலவோய்! ஒள்ளிய நின்பெயர்
ஈதென வெவரு மியம்பல ரெனினும்
பொருளெலாந் திரியநின் பகழழிந் திலதால்;
மனிதர்யா வர்க்கு மினிய பாவலோய்!
பெறுங்குறி யாவன வறம்பொரு ளின்பெனக்
கடலுலாந் தெங்கின் காடெலாம் வளியுளர்
வெண்டிரை யொலிகெடக் கண்டினு மினியநின்
புதைபொருட் குறட்பாப் புஜைநூன் முழங்குமால்.
எழுபிறப் பிற்குமே லெழுநிலத் தேநின்கண்
கனவினு மறியாக் காட்சியிற் களிக்குமோ?
இருளின் படல முருளுநின் மொழியின்;
சேய்நில நின்பாச் செவிமடுத்
தேய்தரும் வியப்பு; தூயமா முனியே!

---

*குழறும் கூகையும் குழறும். கூகை குழறுவது தீச்சகுன மென்ப. தீய இயல்பு-கெட்ட சுபாவம். இயல்பினை-இயல்புடையாய். தரும்-காட்டும். பொலா-பொல்லாத, தீய. முகுரம்-கண்ணாடி. எறிந்து-வீசி. தகர்ப்பல்-உடைப்பேன். தூய தனிப் பளிங்கு-பரிசுத்தமான ஒப்பற்ற பளிங்கு என்றது ஞானத்தினை. உண்மை ஒளிர்வுழி-மெய்ம்மை விளங்குமிடத்து. நீ அண்மல் எவன் கொலோ-நீ நெருங்குதல் ஏனோ. விரைந்து ஒழி-விரைந்து நீங்குவாயாக. வீணின் மறைக்கலை-ஒரு பயனுமின்றி அறிவினை மறக்காதே. மெய்ப்பொருள் வான்மகள்-உண்மைப் பொருளாகிய சிறந்த மாதினை. கைப்பிடித்து உய்வல்-கைப்பற்றி (பாணிக்கிரணம் செய்து) ஈடேறுவேன்.*

(4-6). ''ஒப்பில்வான் மணியென வொளிருங் குரவர்
செப்புயர் மாற்றச் செங்கதிர் தோன்றலும்
புல்லிய ருளக்குகை புகுதும் கூகாய்!''

*(வான்மணி-சூரியன். மாற்றமாகிய செங்கதிர் என்க. கதிர்-கிரணம். புல்லியர்-அற்பர். உளக்குகை-மனமாகிய குகை. புகுதும்-உட்புகும்.)*

என்பதும்,

## XLI. TIRUVALLUVAR

Sage VALLUVAR, priest of thy lowly clan,
No tongue repeats, no speech reveals thy name;
Yet, all things changing, dieth not thy fame,
For thou art bard of universal man;
And still thy "book' above the waters wan,
Virtue, true wealth, and joy, and being's aim,
In sweetest mystic couplets doth proclaim,
Where winds sea-wafted palmy forests fan
Haply undreamed-of "visions' glad thine eyes
In realms beyond thy fabled ' seven-fold birth,'
And clouds of darkness from thy spirit roll;
While lands far off have heard with strange surprise
Faint echoes of thy song. Through all the earth
Men hail thee brother, seer of spotless soul.

---

*(8-9.)* **''செல்லுழிக் குழறுந் தீயையால்! உறுதிக்
கொடியி னுதவி கூட்டிநிற் களைகுவல்.''**

*(உறுதிக்கொடி-மனவுறுதியாகிய காக்கை. காக்கை கூகைக்குப் பகை. உதவி கூட்டி-துணைக்கொண்டு. நிற்களைகுவல்-உன்னைப் போக்குவேன்.)*

என்பதும்.

*(11-14).* **''தனித்தெருட் சூசியூ
டுருவுமா நுன்னை யுறக்கிழிப் பல் எனை
மெய்ப்பொருட் டலைவியின் விலக்கினுந்
தய்ப்பல் வட்டையிற் றுன்னுமான் ஞமலியே!''**

*(தெருட் சூசி-தெளிந்த அறிவாகிய வைர ஊசி. ஊடுருவிமா-ஊடுருவிச் செல்லுமாறு. நுன்னை-உன்னை. உறக்கிழிப்பல்-நன்றாகக் கிழிப்பேன். மெய்ப்பொருட்டலைவி-உண்மை ஞானமாகிய தலைவி. துய்ப்பல்-அநுபவிப்பேன். வட்டை-வழி. துன்னும்-பொருந்திய, மால் ஞமலி-மயக்கமாகிய நாய். வெறிநாய் என்பது சொற்போக்குப் பொருள்.)* என்பதும், முதற் பதிப்புப் பாடங்கள்.

*சக.* திருவள்ளுவர்-திருக்குறளாசிரியர். வள்ளுவர் பறைச்சாதியினருள் ஒரு வகையினர்; யானைமேல் முரசடிக்குந் தொழிலுடையவர், (வள்-தோல்), என்ப.

cf. ''முரசுகடிப் பிடூஉம் முதுகுடிப் பிறந்தோன்.''
***(மணிமேகலை. 1-30)***

## சஉ. போர்

முந்தா நாட்களின் மூதறி விலார்கற்
சிந்தை யாளர் சிறிது மருளிலர்
மண்ணசை யானும் பெண்ணசை யானும்
பொன்னசை யானும் பகழ்நசை யானும்
நன்னலங் கருதார் ஞாட்பி னுயிர்களைக்
கொன்னே யம்ம கொன்று குவித்தனர்!
அறநெறி முதிரா மறநெறிக் காலத்து
வன்போ ரென்பது வல்லடி வழக்காம்.
அன்போ டறனு மருளும் பழுத்தொளி
ரிற்றை ஞான்றினம் வெற்றுப் போர்செய
லெற்றிக் கோவென் னினிய மாந்தர்களாள்?
ஆருயி ரோம்பலே போரினுஞ் சிறக்க;
பொறையுள மெங்கணும் பொருந்துக
அறைகடல் சூழிவ் வங்கண் ஞாலத்தே.

---

''திருநாள் படைநாள் கடிநா ளென்றிப்
பெருநாட் கல்லது பிறநட் கறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்.''

**(பெருங்கதை 2-2:32-34)**

''மால்யானை வள்ளுவர்.'' **(திருவள்ளுவர் மாலை 11)**

*தாழ்குலம்-இழிந்த சாதி. உதித்து-பிறந்து. அதன் வாழ்குரு வாகிய-அச்சாதியினருக்கு வாழ்வினையுடைய குருவாகிய. வள்ளுவப் புலவோய்-=திருவள்ளுவரென்னும் பெயரினையுடைய அறிஞனே. ஒள்ளிய-விளக்கம் அமைந்த. இயம்பலர்-கூறவில்லை. எனினும்-என்றாலும். பொருளெலாந்திரிய-எல்லாப் பொருள் களும் நிலைதிரிந்த போதிலும், மனிதர் யாவர்க்கும் இனிய பாவலோய்; திருக்குறள் உரையாசிரியராகிய பரிமேலழகர், ''எல்லா நூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு,'' (திருக்குறள் 322-உரை) என்று. கூறுதல் பற்றி இவரும் இங்ஙனம் கூறினர். இதனானே திருக்குறட்கு 'பொதுமறை' யென்ற பெயரும் அமைந்தது.*

*குறி-குறித்து அடையப்படுவது; உறுதிப் பொருள். அறம் பொருள் இன்பு-தர்ம அர்த்த காமம். கடல் உலாம்-கடல் அலை வீசுகின்ற; கடற்கரையில் உள்ள. தெங்கின் காடு-தென்னை மரங்*

# XLII. ON WAR

IN days of yore, men, not very wise, hard-hearted and unpitying, impelled by Earth-hunger, lust and greed and love of fame heaped up their slain in unavailing fields! In those crude times, virtue was misknown and violent wars spelt rough justice. Why even now, dear sirs, when love and justice, and grace abound, is vain War waged? May tenderness to life be deemed nobler than War! May Peace fill all the quarters of this sounding-sea-surrounded Earth!

---

*களின் கூட்டம்; தென்னந்தோப்பு. வளி உளர்-காற்று வீசும் வெண்திரை யொலி-வெள்ளிய அலைகளின் ஓசை. கண்டு-கற்கண்டு. புதைபொருட் குறட்பாப் புனைநூல்-புதைந்த பொருள்களைத் தன்னுளடக்கிய குறட்பாவால் அமைந்த திருக்குறள் எனப் பெயரிய நூல்.*

cf. ''கடுகைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.' *(இடைக் காடர்).*

*முழங்கும்-பேரொலி செய்யும். எழுபிறப்பு-ஒருவன் செய்த வினையின் பயன் அவன் ஆன்மாவை யேழு பிறப்புந் தொடருமென்ப.*

*10-11. இங்ஙனம் ஏழாந் தன்மையை யுடைய பிறப்புகளுக்குமேல் அப்பாலாயுள்ள இடங்களில் உனது கண்கள் கனவினுங் காணுதற்கிரிய இன்பக் காட்சிகளைக் கண்டு களிக்கின்றனவோ? இனி, எழுபிறப்பு-எழுவகைப் பிறப்பும் ஆகும். எழுவகைப் பிறப்பாவன:*

''ஊர்வ பதினொன்றா மொன்பது மாநுடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ்-சீரிய
பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரநா லைந்து.''

*இது வளையாபதியிற் கண்டது என்பர் ஆசிரியர் பரிமேலழகர். (திருக்குறள் 62, 107 உரை நோக்குக.) நின்மொழியின்-உனது மொழியாகிய திருக்குறளால். இருளின் படலம் உருளும்-அஜ்ஞானமாகிய இருட் கட்டம் உருண்டு ஒழியும். சேய்நிலம்-தூரத்திலுள்ள* Germany, France, England, United States *முதலிய தேசங்களும், நின்பாச் செவிமடுத்து-உனது திருக்குறட்பாக்களைக் கேட்டு. வியப்பு எய்தரும்-ஆச்சரியம் அடையும். தூயமாமுனி-பரிசுத்தமான பெருமை வாய்ந்த முனிவனே. முனி-கடவுளை மனனம் செய்பவன்.*

## சங. எறும்பு

என்னே! எறும்பீர்! எழிற்சிற் றெறும்பீர்!
கொன்வே யிராமற் கூடி யுலாவுவீர்;
கால முணர்ந்துநீ ரேல வுணவினை
முன்னரே நேடி மொய்ம்புறச் சேர்த்து
நன்னரின் புற்று நாடொறும் வாழ்வீர்;
மக்களுட் பலர்நும் மாண்பினை யறியார்
தொக்கொரு வழியிற் றொழிலுஞ் செய்யார்
மடியரராய் நாளு மடிவர், அந்தோ!
மாநுட ருடலின் மன்னிற் றழுக்கெனி
னோடிப் போந்துநீ ருறக்கடித் தவர்தமை
யறிவுத் தாயிவை யாருயி ரிழப்பீர்.
நும்மரு ளென்னே! நுவலுதற் பாற்றோ?
நல்லர சாளரு நாண
வெல்லியும் பகலுநீ ரினிது முயல்விரே!

---

*சஉ. முந்தைநாள்-முற்காலம். மூதறிவு-முதிர்ந்த அறிவு. கற்சிந்தையாளர்-கல்லைப் போலும் கடின சித்தமுடையார். சிறிதும்-அற்பமும். அருளிலர்-கருணையில்லாதவராய். நசை-விருப்பம். மண் பெண் பொன் ஆசைகளை ஈஷணாத்திர மென்ப. நன்னலம் கருதார்-நன்மையைத் தரும் நற்செயல்களைச் செய்ய எண்ணாதவராய். ஞாட்பு-போர். கொன்னே-வீணாக. ஒரு பயனுமின்றி, அருளிலர் கருதார் என்னும் முற்றெச்சங்கள் 'குவித்தனர்' என்னும் முற்றுச் சொல்லொடு முடியும். அம்ம-வியப்பிடைச்சொல்; இரக்கக் குறிப்பெனினு மாம். அறன் நெறி-தரும மார்க்கம். முதிரா-முதிர்ச்சியடையாத. எனவே நிரம்பாத. மறம்-வீரம். தீவினையுமாம். மறநெறிக் காலம்-வீரமே பொருளெனக் கருதிப் பகைமேற் செல்லும் காலம் (brutal age). வன்போர்-வலிய போர். வல்லடி வழக்கு-'might is right' என்று பலாத்காரமாய் மேலிட்டுச் செல்வது. அன்பு-தன்னாற் புரக்கபடுவார்மே லுளதாகிய காதல்; மனைவி மக்கள் தாய் தந்தை முதலிய சுற்றத்தின் கண் மனமகிழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்து நிற்கும் நேயம் என்பர் நச்சினார்க்கினியர். (தொல். பொருளியல் சூ. 53. நச்.)*

*அருள்-ஒன்றன் துயர் கண்டவிடத்துக் காரணமின்றித் தோன்றும் இரக்கம்; இதனை அளியென்றுங் கூறுப. அன்பு காரணமாக அருள் தோன்றும்.*

## XLII. TO THE ANT

O Ant, so small and shapely, in unresting swarms for ever roving, timely you stock your store and live your life in peace and joy! Of your greatness few are aware and few like you unite for common good! Grown lazy, alas! they perish.

When men's bodies gather dirt, you bite by way of caution, even at risk of being killed therefor. How great your grace, how unutterable!

You put to shame even benevolent Kings who work for their people's good. You toil bravely Night and day!

---

cf. ''அருளென்னு மன்பீன் குழவி.'' ***(திருக்குறள். 757.)***

*'தொடர்பு பற்றாதே வருத்தமுற்றார்மேற் செல்வதாய அருள் தொடர்பு பற்றிச் செல்லு மன்பு முதிர்ந்துழி உளதாவதாகலின் அதனை அன்பின் குழவி'' என்றனர் என்னும் பரிமேழலகர் உரை ஈண்டு நோக்கற்பாலது. அறம்-'மநு முதலிய நூல்களுள் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்.' (திருக்குறள்-பரிமேலழகர் உரைப் பாயிரம்.)*

*பழுத்து-முதிர்ந்து. ஒளிர்-விளங்கும். இற்றை ஞான்று-இந்தக் காலம். வெற்றுப்போர்-பயனற்ற போர். எற்றிற்கோ-எதன் பொருட்டோ. இனிய-அன்பு வாய்ந்த. மாந்தர்-மக்கள். ஆருயிர்-பெறுதற்கரிய வுயிர். ஓம்பல்-பாதுகாத்தல். போரினும்-போர் செய்வதைக் காட்டிலும். சிறக்க-சிறப்பதாகுக. (வியங் கோள் முற்று) பொறையுளம்-பொறுமை பொருந்திய மனம். எங்கணும்-எவ்விடத்தும். பொருந்துக-நிலைபெறுவதாகுக. அறை கடல்-ஒலிக்கும் கடல். அங்கண் ஞாலம்-அழகிய இடமகன்ற நிலவுலகம். ஞாலத்துச் சிறக்க பொருந்துக என முடிக்க.*

*சங. என்னே-வியப்பு, இரக்கம் இவற்றினடியாகக் கேட்பிப் பொருளில் வந்த இடைசசொல். எறும்பீர்-எறும்புகளே (விளி.) எழிற்சிற்றெறும்பீர்-அழகுள்ள சிறிய எறும்புகளே. கொன்னே யிராமல்-ஒரு தொழிலுமின்றிச் சும்மாயிராமல். கொன்-பயனின்மையைக் காட்டும் ஓரிடைச் சொல். (தொல். சொல். இடை. 6) கூடி-கூட்டமாகச் சேர்ந்து. உலாவுவீர்- சஞ்சரிப்பீர். காலம் உணர்ந்து-உரியகாலம் இன்னதென்பதை அறிந்து. ஏல-பொருந்த.*

முன்னரே-முன்னாடியே. நேடி-தேடி. மொய்ம்பு உற-வலிமை பொருந்த. நன்னர்-நன்றாக. இன்பு உற்று-களிப்புற்று. நாள்தொறும்-எந்நாளும். மாண்பு-மாட்சி. பெருமைக்குணம். தொக்கு-கூடி. ஒருவழியில்-ஒரு துறையில். மடியராய்-சோம்பேறிகளாய். நாளும்-தினமும். மடிவர்-அழிவர். அந்தோ-இரக்கக் குறிப்பு. மாநுடர்-மக்கள். உடலில்-தேகத்தில். அழுக்கு மன்னிற்றெனில் என மாறுக. மன்னுதல்-பொருந்துதல்,. ஓடிப் போந்து-விரைந்து சென்று. உறக்கடித்து-நன்றாக கடித்து. அவர்தமை-அவர்களை. அறிவுறுத்து-அழுக்கிருப்பதைத் தெரிவித்து. ஆயிடை-அவ்விடத்தே. ஆருயிர் இழப்பீர்-பெறுதற்கரிய உயிரினை ழந்து போவீர். அழுக்குண்ட தன்மையை அறியாத மக்களுக்கு அதனை அறிவுறுத்தும் நற்செயல் புரிதற்கண் உயிர் போதலையும் பொருட்படுத்தாத பெருமையினைக் கூறியது. எறும்பு கடித்தவுடன் கடியுண்டவர் கடித்த விடத்தைத் தேய்த்தலினால் எறும்பு நசுங்கியழிவதுண்மை. அஃது நற்செயல் புரிவதற்கண் உயிர் நீங்குவதாகக் கூறியது தற்குறிப்பேற்றவணி. நும் அருள் என்னே-நுமது கருணையை எங்ஙனம் புகழ்வோம்? நுவலுதற் பாற்றோ-சொல்லுந் தரத்ததோ? நல்லரசாளர்-நல்ல அரசாட்சியினைச் செய்யும் மன்னர். இவர் பிறர் நன்மைக்கு உழைப்பவர் ஆதலின் இங்ஙனம் எடுத்துக் கூறினர். இத்தகைய மன்னரைக் காட்டினும் எறும்புகள் பிறர் நன்மைக்குழைப்பனவாதலின் 'நாண' என்றனர். எல்லி-இரவு. இனிது-செவ்வையாக.

சுபம்

# பாசுர முதற்குறிப் பகராதி


| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| அருட்பயிர் தழைக்கு மணிபெறு நன்னிலம் | 50 |
| அழகி னியலினை யநுபவித் தறியார் | 56 |
| அறந்தரு மிறைவ னருட்படைப் பெவற்றுளுஞ் | 54 |
| அறிவ! மக்கட மாருயிர்க் குறுதியே! | 28 |
| அன்பே! அன்பே! அழகுசா லன்பே! | 32 |
| ஆடலு மழகும் பாடலுஞ் சான்ற | 102 |
| இம்மையின் பத்தி னினிய முதலாய்ச் | 34 |
| இயற்கை யொழுங்கி னினிது காண்புறூம் | 52 |
| இன்ப வூற்றே! துன்பப் பகையே! | 58 |
| உலகமா மங்கைதன் றலைவனாம் பரிதிகண் | 88 |
| எங்கணும் விளங்குறு மிறைவனே! எண்குணந் | 26 |
| என்னே!எறும்பீர்! எழிற்சிற் றெறும்பீர்! | 112 |
| ஒரிலாட் கோண்முறை யுற்ற தலைவனாய் | 60 |
| கல்வியே' மக்கடங் கண்ணே! புலவர்தஞ் | 38 |
| கற்பென் பதுகலை கல்லாமை யன்று; மற் | 64 |
| காமமே சுடுதீக் காமமே! கரந்துநின் | 100 |
| குருவனை; ஞானத் திருவனை! மாந்தர் | 44 |
| கொண்ட தலைவனுக் கெண்டரும் பெற்றி | 62 |
| செயிரி லிசையெனுஞ் சீரிய வின்பமே! | 36 |
| ஞாயிறு மறைந்தது; நண்ணுபே ரமைதிய | 90 |
| தந்தைக் குதவுந் தனிமகன் போல | 46 |

பாசுர முதற்குறிப்பகராதி


| | |
|---|---|
| தாழ்குலத் துதித்ததன் வாழ்குரு வாகிய | 108 |
| துயிலே! மனிதரின் துணையே! இமையினில் | 92 |
| நிலனே! எவற்றையு நேர்ந்து தாங்குவோய்! | 70 |
| பரிதியே! நாடொறும் பண்பி னிளங்கதிர் | 74 |
| புள்ளே! மென்சிறப்பை புள்ளே! பலவகை | 98 |
| பொழிலே! நறியபைம் பொழிலே! தாமரை | 94 |
| மதியே! தண்கதிர் மதிமகிழ் வுறுப்போய்! | 76 |
| மயக்க விருளே! மயக்க விருளே! | 106 |
| மலரே! மலரே! என் மனம் மலர | 96 |
| மலையே! பல்லுயிர் வாழ்முர ணிலமே! | 80 |
| மன்பே ருலக மாண்பொறைத் தலைவன்முன் | 68 |
| முந்தை நாட்களின் மூதறிவிலார்கற் | 110 |
| முகிலே! மைந்நிற முகிலே! கடன்மகள் | 86 |
| யாறே! தீம்புனல் யாறே! ஓவா | 82 |
| வளியே! பரந்த வெளியி னுலவுறூஉம் | 84 |
| வாய்மையே!சிறப்பொடு மாட்சிசேர் குணனே! | 30 |
| வாய்வா ளாமை மேயநூற் குரவிர்காள்! | 40 |
| வாழிய கடலே! வாழிய கடலே! | 72 |
| வாழிய மனனே! மக்கடம் மாட்சியே! | 48 |
| விண்மீ னினங்கள்! மிடைந்தொளிர் படையே! | 78 |
| விழுப்பஞ் சான்ற வியத்தகு மில்லறம் | 66 |
| வெகுளித் தீயே! வெகுளித் தீயே! | 104 |

# INDEX TO FIRST LINES


| FIRST LINES | PAGE |
|---|---|
| Before his master,-long-enduring earth,- | 69 |
| Bright BIRD, on pinion soft upborne! I knew | 99 |
| First fruit of all the pleasure nature yields | 35 |
| Fountain of gladness, foe of grief's annoy,. | 59 |
| Gloom of bewilder'd mind! The vision clear | 107 |
| Hail, Reason's gift, glory of human-kind! | 49 |
| Hail to thee, OCEAN, hail! unfailing source | 73 |
| In dancing and singing and beauty ye shine, | 103 |
| In days of yore, men not very wise | 111 |
| LEARNING! Thou eye of men! The sages find | 39 |
| Like only Son, the father's help and jpoy | 47 |
| My God! filled with Thy glorious Majesty | 27 |
| My silent teachers ye!-nor sound, nor speech,- | 41 |
| O Aut, so small and shapely | 113 |
| O CLOUD! O dark-hued CLOUD! vast ocean's child! | 97 |
| O EArth: for aye thou dost endure; | 71 |
| Of all the aids to virtue God has given | 55 |
| O FLOWER, fair FLOWER, whose tender leaves expand! | 97 |
| O HARMONY! Thou name of pure delight! | 37 |
| O leafy GLADE, with fragrant verdure spread! the lake | 95 |

O LOVE divine! thou ever beauteous LOVE 33

O LUST, thou scorching flame, whose
smoky cloud 101

O silver lily on the heaven's blue lake, 77

O Sleep! Thou solace sweet of human-kind! 93

O Sun! O'er every land, thro all the days. 75

O TRUTH, with beauty and high glory crown'd 31

O Wind! careering now thro' open sky; 85

O Wondrous virtue of pure HOUSEHOLD LIFE! 78

O WARTH, fierce WRATH! thou
devastating flame,. 105

RIVER! whose waters sweet through
meadows glide, 83

Sage VALLUVAR, priest of the lowly clan 109

TEACHER of truths divine, who dost restrain 45

The goodly GLEBE where fruits of
grace are grown; 51

The sun is gone. The moon her tranquil light 91

They rave of Beauty who taste not its grace, 57

To wedded lord observance due she pays; 63

True HUSBAND home with one
choice bride must share, -61

What viison this! Is it the DAWN'S soft hour? 89

When all that live and labour here we scan, 53

WISDOM! sole strength of life to man below! 29

Ye STARS of heaven! a cluster's army bright, 79

Ye tow'ring MOUNTAIN HEIGHTS,
the rugged home 81

You ask what WIFELY EXCELLENCE may be 65

## INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

### TRANSLATION SERIES

| | | |
|---|---|---|
| 1. | Tolkappiyam Phonology & Morphology | 25.00 |
| 2. | Tamil Verse in Translation | 40.00 |
| 3. | Selected Poems of Bharathidasan 'Tamil to English' | 60.00 |
| 4. | " Tamil to Malayalam | 60.00 |
| 5. | " Tamil to Kannada | 60.00 |
| 6. | " Tamil to Telugu | 60.00 |
| 7. | Kuruntogai | |
| 8. | Kurinci-p-pattu And Muttollayiram | |
| 9. | Six Long Poems from Sangam Tamil | |
| 10. | Tamil Heroic Poems | |
| 11. | Nala Venba | |
| 12. | Temple Chimes (Poems of St. Thayumanavar) | |
| 13. | Dedication (Poems of St. Pattanathu Pillai) | |
| 14. | Thani -p-pasurattogai | |
| 15. | Kadambari - Moolamum Vasanamum | |
| 16. | Cilappatikaram. | |